[illegible] [illegible]

[illegible] 13 [illegible] 5

16 NOV 1927


JL

882211, N15 A3

N27.13.5

187485

ஓம்
பரப்பிரஹ்மணேநம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)

| | | |
|---|---|---|
| தொகுதி 13 | பிரபவஞு கார்த்திகைமீ கஉ<br>1927ஞு நவம்பர்மீ 16உ | பகுதி 5 |

## கடவுள் வணக்கம்.

அந்தகா ரத்தையோ ரகமாக்கி மின்போலெ
னறிவைச் சுருக்கி னவரா
ரவ்வறிவு தானுமே பற்றினது பற்றா
யெழுந்தவுந் தலை மீதிலே
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான
சுகநிஷ்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு
தூங்கவைத் தவரார் கொலோ
தந்தைதாய் முதலான வகிலப்ர பஞ்சந்
தனைத்தந்த தெனதா சையோ
தன்னையே நோவனோ பிறரையே நோவனோ
தற்கால மதைநோ வனோ
பந்தமா னதுதந்த வினையையே நோவனோ
பரமார்த்த மேது மறியேன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (1)

விண்ணாறு வெற்பின் விழுந்தாங் கெனமார்பிற்
கண்ணாறு பாய்ச்சிடுமென் காதல்வெள்ளங் கண்டிலையோ
தண்ணாறு சாந்தபதத் தற்பரமே நால்வேதப்
பண்ணாறு மின்பப் பதியே பராபரமே. (2)

கூடியநின் சீரடியார் கூட்டமென்றோ வாய்க்குமென
வாடியவென் னெஞ்சமுக வாட்டமுநீ கண்டிலையோ
தேடியநின் சீருளைத் திக்கனைத்துங் கைகுவித்துப்
பாடியநான் கண்டாய் பதியே பராபரமே. (3)

# அரும்பொருள் விளக்கம்.

1. இப்பிரபஞ்சத்திற் றோன்றிய சகல வுயிர்களும், நிரந்தரமான சுகப்பேற்றை யடைய வேண்டியிருந்தும், அவ்வா றதனை யடைய முடியாது துக்கசாகரத்திலேயே மூழ்கி வருந்துவதற்குக் காரணம், அவ்வுயிர்களிடத்து நிலைத்துள்ள அஞ்ஞானம் அல்லது அறியாமையேயாம். இவ்வறியாமை யொழிந்தாலன்றி நித்தியானந்தம் சித்தியாது. ஆகவே பிறப்பிற்கு முதற்காரணமான அறியாமை நீங்கவேண்டிய முயற்சியை மேற்கொண்டால், உயிர்கள் சுகப்படும். அவ்வழியைக் காண்பதுவே அந்த உயிர்களுக்குரிய மெய் யறிவாகும்.

> " பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
> செம்பொருள் காண்ப தறிவு "

என்றார் தெய்வப்புலவர்.

அறியாமையோ, செம்பிற் களிம்பும், நெல்லிற் குமியும், நீர்க்கு நுரையும் இயல்பாயிருத்தல் போன்று உயிர்க்கு அநாதியா யிருக்கின்றது. அதுபற்றி 'அந்தகாரத்தையோ ரகமாக்கி மின்போலெ னறிவைச் சுருக்கினவாரார்' என்றார்.

அந்தகாரம்=இருள்; அதாவது அஞ்ஞானம்; இது பிறப்பைக் குறிக்கின்றது.

அகம்=வீடு.
மின்=மின்னல்.

ஆன்மாவின் அறிவு, படிகம் போலச் சார்ந்ததன் பாலாம் சுபாவமுடைமையின், அவ்வாறும்படி, அதைச் செயற்கைப்படுத்தினர் ஒருவருமில்லை யென்பதாம்.

'மெய்ஞ்ஞான சுகநிஷ்டை சேராமலே, சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு தூங்கவைத்தவாரார்' என்றது, பேரின்பநிலையை யடைவதற்குக் கருவியான நிஷ்டை கூடாது, இவ்வுடலின் பொருட்டே யுழைத்து வாழ்நாள் கழித்தல் பெரிதும் தவறான காரியம் என்பதை யுணர்த்தவே.

சோற்றுத்துருத்தி=சரீரம்.
சதம்=சாசுவதம்.

'தந்தை தாய்முதலான வகிலப்ரபஞ்சந் தனைத் தந்ததெனை தாசையோ' என்றது, பிறப்பைக் குறிப்பாலுணர்த்தி அப்பிறப்பினைக் கூட்டிவைத்தது ஆசையே என்பதை வெளிப்படுத்தவேயாம்.

ஆசை பிறப்பை யுண்டாக்கு மென்பதை,

> ' அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
> தவாஅப் பிறப்பீனும் வித்து "

என்னும் தமிழ்மறையாலும் உணரலாம்.



"உடம்பு நீங்கிப் போங் காலத்து அடுத்த வினையும், அது காட்டுங் கதி நிமித்தங்களும், அக்கதிக்கண் அவாவும், உயிரின்கண் முறையே வந்து நிப்ப, அறிவை மோகம் மறைப்ப, அவ்வுயிரை அவ்வவா அக்கதிக்கட்கொண்டு செல்லு மாகலான், அதனை 'பிறப்பீனும் வித்து' என்றும், கதிவயத்தா னுளதாய அவ்வுயிர் வேறுபாட்டினும் அவை தன்மை திரியும் உற்சர்ப்பிணி (உலகம், வாழ்நாள், போகம் முதலியவற்றால் வளர்பிறைபோலப் பெருகுங்காலம்), அவசர்ப்பிணி (அது அவற்றால் தேய்பிறைபோலச் சுருங்குங்காலம்) என்னுங் கால வேறுபாட்டினும் அது வித்தாதல் வேறுபடாமையின் 'எல்லாவுயிர்க்கும் எஞ்ஞான்றும்' என்றும், இஃது எல்லாச் சமயங்கட்கும் ஒத்தலால் 'என்ப' என்றும் கூறினார்" என்று பரிமேலழகர் ஷை குறளுரையின் கீழ் கூறுவது இதனை விளக்கும்.

> " ஆசை வாய்ச்சென்ற சிந்தைய ராகி,
> அன்னை யத்தனென் புத்திரர் பூமி
> வாச வார்குழ லாளென்று மயங்கி
> மாளு மெல்லைக்கண் வாய்திற வாதே
> பேச வாபுரு டோத்தமா வென்றுங்
> கேழ லாகிய கேடிலீ யென்றும்
> பேசு வாரவ ரெய்தும் பெருமை
> பேசு வான்புகில் நம்பர மன்றே "

என்பது ஈங் குணர்தற்பாலதாம்.

காலம், வினை முதலியவை பிரவாகம்போல் வந்துகொண்டிருத்தலின் எதனையும் நோதற்கு ஏதுவில்லை யென்பார், 'தன்னையே நோவனோ பிறரையே நோவனோ தற்காலமதை நோவனோ, பந்தமானது தந்த வினையையே நோவனோ பரமார்த்த மேது மறியேன்' என்றார்.

பரமார்த்தம்=மேலான அர்த்தம்.

2. "அழுதாலுன்னைப் பெறலாமே," என்று மாணிக்கவாசகர் கூறுகிறபடி, 'இறைவனே! ஆகாய கங்கைபோல் பெருக்கெடுத் தோடும் எனது அன்பின் பெருக்கை நீ காணவில்லையோ' என்று வருந்துகிறார் ஆசிரியர்.

விண் ஆறு=ஆகாய கங்கை.
வெற்பு=மலை.
விழுந்தாங்கு=விழுந்தாற்போல்.
கண் ஆறு=கண்ணீர்ப் பெருக்கு.
தண் நாறு=குளிர்ச்சி மிகுகின்ற.
பண் நாறு=பண்களுள் பிரகாசிக்கின்ற.

3. இறைவனே! மனம் வாக்கு காயங்களால் உன்னை நாடும் அடியேனுக்கு உனது மெய்யடியாரின் சங்கம் கைகூடுவதென்றோ என்றிரங்குகிறார்.

கூட்டம்=சங்கம்.




## கூட்டு வர்த்தகம்.

ஒருதேசம் முன்னேற்ற மடைவதற்குக் கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலிய பல துறைகளிருப்பினும் அவற்றுள் வர்த்தகந்தான் முதன்மைபெற்று நிற்கின்றது. வர்த்தகத்தை எந்த நாடு தீவிரமாய்க்கொண் டிருக்கின்றதோ அந்த நாடு சீரும், சிறப்பும் பெற்றுப் பிரகாசிக்குமென்பது ஒவ்வொருவரும் பிரத்தியக்ஷமாக உணர்ந்ததே. ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், ஜர்மன், சைனு முதலிய தேசங்களெல்லாம் செல்வ வளம்பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் வியாபார விருத்தியே. வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு அத்தேசத்தார் பல உபாயங்களைக் கைக்கொண்டிருக்கின்றனர். குறைந்த முதல் வைத்துச் செய்யத்தக்க சிறிய வர்த்தகங்களை, ஒருவர் தனித்தோ, இரண்டு மூன்றுபேர் சேர்ந்தோ செய்கிறார்கள்; அதிகத்தொகை முதல் வைத்துச் செய்யவேண்டிய பெரிய வியாபாரங்களை நூற்றுக்கணக்கானபேர்கள் சேர்ந்து செய்யத் தொடங்குகிறார்கள். எந்த வியாபாரத்தையும் ஒருவர் தனித்துச் செய்வதைக் காட்டிலும் பலர் கூடிச் செய்வதிலேயே மிகுந்த அனுகூலமிருக்கின்றது; பலர் கூடுவதால் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்கியன்ற அளவு சிறு சிறு தொகை முதல்வைத்து ஏககாலத்தில் பெருந்தொகை சேர்த்து எத்தகைய வியாபாரத்தையும் இடையூறின்றித் தொடங்கிச்செய்வதற்கு அனுகூலம் ஏற்பட்டுவிடுகிறது; அந்த வியாபாரசம்பந்தமான பல தொழில்களில் ஒவ்வொன்றை ஒவ்வொருவர் கவனித்துக்கொள்வதால் காரியக்கேடின்றி வியாபாரம் மேலோங்கி வருகின்றது. இவையன்றி மேற்



கூறிய தேசத்தார்கள் இன்னும் சில நல்ல முறைகளையும் அனுசரிக்கிறார்கள்:

தாங்கள் ஆரம்பிக்கும் வியாபாரத்தொழிலில் மனவொற்றுமையை மிகுதியும் கைக்கொள்ளுகின்றார்கள்; தங்களுக்குள் தலைமைஸ்தானம் வகிப்பவரிடத்திலும், காரியம் பார்க்க நியமிக்கப்படுபவரிடத்திலும், கௌரவம் பாராட்டுகிறார்கள்; நம்பிக்கை வைக்கிறார்கள்; அவர்கள் வியாபாரசம்பந்தமாகச் செய்யும் காரியங்களைத் தாங்கள் செய்தனவாகவே மிக்க திருப்தியுடன் ஏற்றுக்கொள்கிறார்கள்; அவர்கள் கணக்கில் காட்டும் வரவு செலவுத்திட்டங்களையும், இலாபப்பங்கையும் மறுப்பின்றி ஒரு மனதுடன் ஒப்புக்கொள்கிறார்கள்; அவர்கள், தங்களை நம்புவதற்குத் தக்கபடியே தலைமையாளரும், காரியஸ்தரும் நடுநிலைமையுடனிருந்து எவருக்கும் வஞ்சனை புரியாமல் சகல விஷயங்களிலும் நாணயமாக நடந்துகொள்ளுகிறார்கள். இத்தகைய முறைகளையெல்லாம் அவர்கள் அனுசரித்து நடந்துவருவதனாலேயே, கோடிக்கணக்கான பணம் முதல் வைத்துச் செய்யவேண்டிய பெரிய பெரிய வியாபாரங்களையெல்லாம் தொடங்கி நடத்தி ஏராளமான இலாபத்தை அடைந்து அவர்களிற் பெரும்பான்மையோர் எப்பொழுதும் செல்வத்திற் சிறந்தவர்களாகவே விளங்கி, இஷ்டபோகங்களையெல்லாம் அனுபவித்து இன்புற்று வருகிறார்கள். அவர்கள், தங்கள் உள்நாடுகளில் இவ்வாறு நடத்துவதுமாத்திரமன்றி ஆயிரக்கணக்கான மைல் தூரங்களிலுள்ள புறநாடுகளிலும் மேற்கூறிய கூட்டுவர்த்தகம் நடத்தி மேன்மை யடைகிறார்கள். அவர்களால் தொடங்கப்பட்ட வியாபாரக்கம்பெனிகள், மேற்கூறிய நல்ல முறைகளை அனுசரித்து வருவதால் பல்லாண்டுகளாகப் பற்பல இடங்களில் நிலைபெற்றிருக்கின்றன. அவர்கள் இவ்வாறு கூட்டுவர்த்தகத்தால் மேன்மையடைந்தார்களென்பதற்கு, இந்தியாவில், ஆதியில் ஆங்கிலேயர்களாலும், பிரஞ்சுக்காரராலும் ஏற்படுத்தப்பட்டிருந்த ஈஸ்ட் இந்தியாக் கம்பெனிகளே உதாரணமாயிருக்கின்றன. ஆங்கிலக் கம்பெனியின் சார்பாக ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவில் ஆட்சியும் ஏற்பட்டதென்பது உலகறிந்த விஷயம். கூட்டுவர்த்தகமானது இவ்வாறு இராஜ்யாதிகாரத்தையும் உண்டாக்கிவிடக்கூடியதாயிருக்குமானால் வேறு எத்தகைய சௌகரியத்தைத் தான் உண்டாக்கமாட்டாது?

வேற்றுநாட்டினர் இங்ஙனம் கூட்டுவர்த்தகத்தால் மேட்டிமை

யுற்று வாழ்ந்துவந்தும், நம் தேசத்தார் இவ்வியாபாரதந்திரத்தில் நாட்டமின்றி ஏதேதோ பாட்டுப் பாடிக்கொண்டு வீண் காரியங்களில் தலையிட்டுத் தூங்கி விழுந்து கொட்டாவிவிட்டுப் பழங்கதை பேசி வெறும் வாயை மென்றுகொண்டிருக்கின்றனர். இவர்களிற் சிலர் வியாபாரத் துறையில் இறங்கியிருந்தாலும் அவர்கள் நடத்திவரும் வியாபார தந்திரங்கள் மிக்க விநோதம் பொருந்தியவைகளாயிருக்கின்றன:

நம்மவர்களிற் பெரும்பான்மையோர் கூட்டுவர்த்தகத்தைக் கேட்டு வர்த்தகமென்று நினைக்கிறார்கள்; "பங்கு வியாபாரம் பைத்தியக்காரனும் செய்யான்" என்று ஒரு பெரும் பைத்தியக்காரத்தனமான பழமொழியைப் பேசிக்கொண்டு, "அப்பா! ஒருவனோடு சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்வதைக்காட்டிலும் பேசாமலிருந்துவிடலாம்; அதில் பெருந் தொல்லையுண்டாகும்; அவனுடைய சங்கதி நமக்குப் பிடிக்காது, நம்முடைய போக்கு அவனுக்குப் பொருந்தாது; அப்படிப் பொருந்தாதவனோடு சேர்ந்து வியாபாரம் செய்வதைப்பார்க்கிலும் நம்மால் முடிந்தவரையிலும் நாம் தொழில் நடத்துவதே கவலையற்ற வியாபாரமாயிருக்கும்" என்று பல பக்கா யோசனைகளைச் செய்து ஒருவரோடும் சேராமல், கையில் பணமும் இல்லாமல், ஆயிரம் ரூபாய் முதல் வைக்கவேண்டிய ஒரு வியாபாரத்திற்கு நூறு ரூபாய் வைத்து ஆரம்பதினத்தில் ஆடம்பரமாக மாவிலைத் தோரணங்கள் கட்டி மேளதாளத்துடன் தொழிலை ஆரம்பித்துவிடுகிறார்கள். ஏதோ இரண்டு மாதங்கள்வரை அங்கே வியாபாரம் நடப்பதுபோல் தோன்றுகிறது; மூன்றாவது மாதத்தில் கடை இருந்தவிடந்தெரியாமல் போய்விடுகிறது.

இன்னும் சிலர், வியாபாரத்திற்குத் தாங்கள் பணம் போடாமல் பிறரிடம் தந்திரமாக வாங்கிப்போட்டு, அதைக்கொண்டு வியாபாரம் நடத்த யோசனைசெய்து, இரண்டு மூன்று பேர்களைப் பங்காளிகளாகச் சேர்த்து அவர்களை மாத்திரம் பணம் போடச் செய்து, சில மாதங்கள்வரை தொழில் நடத்தி, வரும் இலாபத்தையும் முதலையும் வாயில் போட்டுக்கொண்டு பொய்க் கணக்கெழுதிக் கூட்டாளிகளுக்கு நஷ்டங்காட்டிவிடுகிறார்கள்; சிலர் அவ்வாறே பிறரிடம் முதல் பணம் வாங்கி அவர்களையும் கூட்டாளிகளாகச் சேர்த்துச் சில வருடங்கள்வரை வியாபாரம் நடத்திக் கொஞ்சம் இலாபங் கிடைத்தவுடன், "நாம் கஷ்டப்பட்டுச் சம்பா



தித்து இந்த வெட்டி ஆசாமிகளுக்கும் ஏன் பங்கு கொடுக்கவேண்டும்; இப்போது கிடைத்திருக்கும் இலாபத்தைப் பிரித்துக்கொண்டு இவர்களை விலக்கிவிட்டால் நாம் தனியாகத் தொழில் நடத்தி அளவற்ற பணம் சம்பாதித்துவிடலாம்" என்று அவர்கள் முதற்பணம் கொடுத்த நன்றியையும் மறந்து தங்களுக்கு அதிகத் தொகை கிடைக்கும்படியாகவே கணக்கு முடித்துப் பாகப் பணத்தைக் கைப்பற்றிக்கொண்டு அவர்களைப் பிரித்துவிடுகிறார்கள்; சிலர், "நாம் மேல்நாட்டுக் காரரைப்போல் கூட்டு வர்த்தகம் செய்யவேண்டும்" என்று ஆங்காங்கே பெருங் கூட்டங் கூட்டிப் பிரசங்கம் புரிந்து நூற்றுக்கணக்கானபேர்களைக் கூட்டாளிகளாகச் சேர்த்து இலட்சக்கணக்கான பணங்களைத் திரட்டிப் பெரிய வியாபாரம் ஒன்றுதொடங்கி அதற்கு லிமிட்டெட் கம்பெனியென்று பெயர்வைத்து வெகு டாம்பீகத்தோடு தொழில் நடத்திப் பலபேர் கொடுத்த பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கிப் பதுக்கிவிட்டுக் கணக்கைமாத்திரம் ஒழுங்காக நஷ்டங்காட்டி முடித்து இரண்டு மூன்று வருடங்களில் கம்பெனியை மூடிவிடுகிறார்கள்; இன்னும் சிலர் ஒன்றுகூடி ஒரு பெரிய வியாபாரத்தைத் தொடங்கி நடத்துகிறார்கள்; அப்படி நடத்தும்போதே ஒருவரையொருவர் ஏமாற்றும் சூழ்ச்சிகளையே இரவும் பகலும் ஓயாமல் யோசித்துக் காரியங்களை நடத்தியும், பொதுப்பணத்தில் சில தொகைகளை ஒருவருக்குத் தெரியாமல் மற்றொருவர் கவர்ந்தும், பொய்க் கணக்குகளையெழுதி ஒருவருக்கொருவர் காட்டியும் அந்த வியாபாரத்தைச் செய்துவருகிறார்கள்; அதனால் அந்த வர்த்தகம் சிலமாதங்களிலோ, வருடங்களிலோ இருந்தவிடந் தெரியாமற் போய்விடுகிறது; இன்னும் சிலர் சேர்ந்து வியாபாரம் நடத்தத் தொடங்கிச் சில தினங்களுக்குள்ளாகவே ஒருவர் நடத்தை ஒருவருக்குப் பிடிக்காமல் சண்டை சச்சரவுகள் போட்டு வம்பு வழக்குகள் தொடுத்துக் கோடுநாடுகளுக்குப்போய்த் தங்கள் வியாபாரக் கம்பெனியை வெகு சீக்கிரத்தில் உடைத்துக் குலைத்துவிடுகிறார்கள். இன்னும் எத்தனையோ விநோதச்செயல்கள் நம்மவர்க்குள் வியாபார சம்பந்தமாக உண்டு. ஆனால், இப்படிக் கூறிவந்ததனால் நம் நாட்டில் உள்ள எல்லோருமே இத்தகைய நடக்கையுடையவர்களாயிருக்கிறார்கள் என்று நாம் சொன்னதாக நண்பர்கள் கருதிவிடக்கூடாது. ஒழுங்கான வியாபாரத் துறைகளை அனுசரிக்கிறவர்களும் இங்கே சிலர் உண்டு; நகரத்தாராகிய நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்

பினருள்ளும், முஸ்லிம்களுள்ளும், தென்னாட்டு நாட்டார்களுள்ளும், வட இந்தியாவில் உள்ள வங்காளிகள், குஜராத்திகள் முதலிய சில வகுப்பாருள்ளும் கூட்டுவர்த்தகத்தையும், ஒழுங்கான வியாபாரத் துறைகளையும் அனுசரித்து ஊதியம் சம்பாதித்து மேன்மையடைந்து வருகிறவர்கள் சிலர் இருக்கின்றார்கள். எனினும் மேல்நாட்டு வர்த்தகர்களை உத்தேசிக்க, இவர்களின் தொகை, நம் நாட்டிலும் சிறந்த வர்த்தகர்கள் இருக்கின்றார்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்வதற்கு ஏதுவில்லாமல் மிகக் குறைந்திருக்கின்றது; ஒழுங்கீன வியாபாரத்துறைகளைக் கொண்டிருப்பவர்களே நம் நாட்டில் மிகுதியும் நிறைந்திருக்கின்றனர். அம்மிகுதி பற்றியே நம்நாடு மேற்கூறியபடி கூட்டு வர்த்தக ஒழுங்கு தெரியாதவர்கள் மலிந்த நாடாயிருக்கிறது என்று கூறினோம்.

இவ்வாறு, நம் நாட்டினருட் பெரும்பாலோர், கூட்டுவர்த்தக முறை தெரியாமலும், வியாபார ஒழுங்கு தெரியாமலும் பற்பல ஒழுங்கீனமுறையில் வர்த்தகத் தொழில் புரிந்து வருவதனாலும், சிலர் பணக்காரர்களாயிருந்தும் வியாபாரத்தையே கவனிக்காமலிருப்பதாலுமே இக்காலத்தில் நம்நாடு செல்வமிழந்து, சிறப்பொடுங்கி, வறுமைக் குட்பட்டு, வளங்குன்றி, மகிழ்ச்சி குறைந்து, இகழ்ச்சி மிகுந்து வருகின்றது.

ஆதலின், சகோதரர்களே! நண்பர்களே! நம்நாடு க்ஷேமமுற வேண்டுமானால், செல்வத்திற் சிறந்து விளங்கவேண்டுமானால், நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமையைக் கைக்கொண்டு கூட்டுவர்த்தக முறையை எல்லோரும் அனுசரிக்கவேண்டும். நமக்குள் இக்குறைகளை வைத்துக்கொண்டு, தந்திரமாகத் தொழில் நடத்தி ஊதியந்தேடும் பிறரைத் திட்டிக்கொண்டிருப்பதால் மாத்திரம் பயனில்லை. அதைவிட்டு நாம் முன்னேறுவதற்கான கூட்டுவர்த்தகம் முதலிய பல நல்ல துறைகளிற் பிரவேசிக்க வேண்டும். நம் உயரிய எண்ணங்கள் கைகூட முழுமுதற் கடவுளின் பேரருள் உண்டாவதாக.

ஓம் தத் ஸத்.




## பாபு சுரேந்திர நாத் பனர்ஜி.

(152-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறும் அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் அவைத் தலைமை வகித்த சர் பி. எம். மேதா என்பார், 'இப்புவியில் இதுவரை தோன்றியுள்ள பல சொல் வல்லுநரையும் தம் சொற் பெருக்கு வன்மையால் தாழ்த்தி, இந்தியாவின் குறைகளை இங்கிலாந்து பாராளுமன்றத்தில் திடம்பட, அகிலமே அஞ்சும் ஆற்றலுடன் எடுத்தோதிய உலகம் புகழும் உத்தம பாரத புத்திராகிய பாபுவை நான் இப்பொழுது மறந்து செல்ல முடியவில்லை'' என்றதினின்றும் பாபுவின் தாய்நாட் டன்பின் பெருமிதத்தைக் கண்டலறியலாம். அன்னையின் அறப்பணியில் தலை சிறந்த பாபுவை 1895-ம் ஆண்டில் பூனாவில் கூடிய பதினோராம் காங்கிரஸ்விழா தலைவராகக் கொண்டது. அக்காங்கிரஸ் விழாவில் சில குழப்பங்கள் தலைவர்களுள்ளத்தே தோன்றினவாயினும் அவற்றையெல்லாம் தமது அன்பாலும் ஆற்றலாலும் பனர்ஜி அடக்கி, அழகு பெறச் சபையை நடத்திவைத்தனர். அவர் 'அக்கிராசன விரிவுரை' யைப் புகழ யாராலியலும்! மூன்றுமணி நேரம் வரை அக்கிராசனர் முன்னுரை நிகழ்ந்தது. எள்ளிட விடமில்லாமல் எங்கணும் நிறைந்த அன்பர்கள் மூச்சுவிடுவது மறியாதவாறு பேசுவதினின்றும் நீங்கி யிருந்தனரென்னில் தேசமகா ஜனங்களுக்கு பாபுவிடத்துள்ள மரியாதை, அன்பு முதலியவற்றை என்னென் றெழுதுவோம்! தெய்வீகத்தன்மையால் தோன்றிய இவர் போன்றவருக்கே இத்துணைச் சொல்வன்மை நயம் முதலியன பொருந்தப்பேச இயலுமேயன்றி, ஏனையோர்க்கு இத்தன்மை எளிதில் அமையாதென்று அச்சபைக்கு வந்திருந்த பலரு மியம்பி னின்றனர். இவர் இரண்டாம் முறையாக 1902-ல் ஆமதாபாத்தில் நடைபெற்ற பதினெட்டாம் அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்கும் தலைமை வகித்தார்.

பாபுவின் சரித்திரத்தில் வங்காளப் பிரிவினை ஓர் முக்கியாம்சம் பெற்று விளங்குகின்றது. ' அப்பொழுது எதிர்வாதம் செய்யத்தலைப்பட்ட கட்சியின் தலைவர் பாபுவேயாம். அக்காலத்தில் பாபு பிரிவினையால் விளையும் துன்பங்களைத் தம் தாய் மொழியில் ஆங்கிலத்திலுள்ள வன்மையுடன் எடுத்தோதி, வங்காள வாசிகளால் அவதார புருடரெனப் [illegible] இவரது முயற்சி முற்றுப்பெறாது போகவே, அன்[illegible]க்கு மாறு வங்காள முழுவதும் வலுத்த பிர[illegible]சியது சுதேசியத்[illegible]ப்

பதே அன்னியநாட்டுப் பண்டங்களை விலக்குவதாகும் என்று விரித்துரைத் தார். இனி அவர்

### மேற் கடல் கடந்த வரலாறு

மிகவும் முக்கிய மாதலின் அதனைச் சிறிது கூறுவோம். அவர் சட்டசபைச் சீர்திருத்த விஷயமாக 1897-ல் 'வெல்பி கமிஷனில்' சாக்ஷியங்கூறச் சென் றார். அப்பொழுது இந்திய ராஜீய விஷயங்களைப் பொருத்திச் சொல்லுவதில் அவருக்கிருந்த ஆற்றலை மேல்நாட்டார் பெரிதும் போற்றினார்கள்; இவ ருடைய சொற்பொழிவுகளைப் பல இடங்களிற் கேட்டுப் பேரானந்த மெய்தி னர். இவர் கடைசி முறையாக 'இம்பீரியல் பிரஸ் கான்பரன்ஸ்' விஷயமாக, இங்கிலாந்திலுள்ள இந்திய அரசாங்கக் கூட்டத்தாரோடு கலந்து பேசச் சென்று அப்பொழுதும் நன்கு மதிக்கப்பட்டு வந்தார். அவருடைய ஊக் கத்தையும் தொண்டையும் பாராட்டி மகாஜனங்கள் அவரை

### சட்டசபை அங்கத்தினர்

ஆகத் தேர்ந்தெடுத்தனர். அவருடைய பொதுநல சேவையைப் போற்றி 1876-ல் அவரை நகரபரிபாலன சபைக்கு அங்கத்தினராகக் கல்கத்தா வாசி கள் தேர்ந்தெடுத்தனர். அதிலிருந்து தொடர்ச்சியாக 20 ஆண்டுகள் வரை அவர் அதன் அங்கத்தினராக இருந்து 1899-ல் பல அசௌகரியங்களை முன் னிட்டு அப்பதவியை 'ராஜீநாமா' செய்தார். திருத்தப்பெற்ற சட்டசபையின் அங்கத்தினராக பாபு 1894-லும், 1896-லும், 1898-லும் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அவர் சட்டசபையிலிருக்கும்பொழுது 1995-ம் ஆண்டைய 'சுகா தார மசோதா'வை நிறைவேற வைத்தவர்களில் முக்கியஸ்தராக விளங்கினார்.

### முடிவுரை.

பாபுவுக்கு ஒரு புத்திரரும், ஐந்து புத்திரிகளும் உளர். சொல்லுவதை அனுஷ்டானஞ் செய்துகாட்டும் உயரிய தன்மையுள்ள அவர் தமது பெண் களை நன்கு கல்வி பயிலச் செய்தார். வயோதிக நிலையை யடைந்த அவ ருக்கு ஏகாந்த வாழ்வு ஏற்றதாயமைய, கல்கத்தாவுக்கு 13-மைல் அப்பா லுள்ள மணிராம்பூர் என்னுமிடத்தில் அவர் தம் அந்தியக்காலத்தைக் கழிக்கக் களித்தார். அவர் தமது வீட்டைச் சுற்றியுள்ள தாவரங்களை வளர்ப்பதிலும், தேகப்பயிர்ச்சியை அத்துணை வயோதிகத்திலும் இடைவிடாது செய்வதி லும் பிரியமுடையவர். முப்பத்தைந்தாண்டுகள் இடைவிடாது தேசசேவை புரிந்த அவருக்கு ராஜீய விஷயத்தினின்றும் நீங்கியிருப்பது மிக்க கஷ்டமா யிருந்தது. ஆனால் உடல் இடந்தரவில்லை. இப்பெரியாரின் சரிதத்தினின் றும் நாம் பல அரியவிஷயங்களை அறியற்பாலோம். 'அறையிலாடிய பின் னரே அம்பலத்தாடவேண்டு' மென்பர் பெரியார். நாம் ஒரு விஷயத்திற் புகு முன்னர் அதற்கேற்ற பக்கபலங்களை முறையே செய்துகொள்ளவேண்டு மென்பதை [illegible] சரிதத்தினின்றும் நாம் அறிகின்றோம். ஆசிரிய ராகவும் [illegible] பாபு அரங்கேறி அபாரமாகப் பேசும் வல் லமை [illegible] யடையப் பட்டபாடு [illegible] பற்பாலதன்று. அதற்காக அவர் பல



நூல்களைக் கற்றுப் பயின்று பின்னரே வெளியில் இராஜீய மேடைகளிற் பேசத் தொடங்கினார். மேடையிற் பேசிப் பிறர் மாலைபோட, கரகோஷம் செய்ய, மங்கள வாத்திய ஒலிமுழங்க, ஊர்வலம் வருவதை அவர் கேவலமாக நினைத்தவர்; உள்ளொன்று வைத்து நாவாலொன்று பேச நாணுபவர்; பட்டங் களைக் கிட்டவிடாதவர்; சட்டசபை அங்கத்தினராகவும், காங்கிரஸ் தலைவ ராகவும் ஆகித்தான் தேசசேவை புரிய வேண்டுமென்ற கொள்கையில்லாத வர்; அவற்றைவிட எள்ளளவு தூய மனதுடன் புரியும் தொண்டே சிறந்த தென்பது அவருடைய சித்தாந்தம்.

> " பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
> எல்லா வறமுந் தரும் "

என்பதை அவர் உணர்ந்தொழுகியவர். உயிர்பட வரினும் உள்ளதை ஒளி யாது கூறும் மாண்பினருமவரே. இவர் கல்கத்தா ரிப்பன் கலாசாலையாசிரிய ராகவிருந்த அதேகாலத்தில் ராஜீயவாதியாகவும், கலாசாலை உபந்நியாசக ராகவும், மூன்று கலாசாலைகளின் அதிகாரியாகவும் இருந்து, அன்றன்றைய வேலைகளை அன்றன்றே முடிப்பதும், தமது குமாஸ்தாக்களைச் சரிவர வேலை வாங்குவதும், கணக்குகளைத் தினந்தோறும் பரிசோதிப்பதும், பாடங்களை மூன்று கலாசாலைகளிலும் உபந்நியாசிக்கத் தயார் செய்வதும், இவற்றுடன் கூட, தேகாப்பியாசம், மாலை உலாவுதல், பூஜை முதலியன செய்தல், நண்பர் களுடன் கூடுதல், விருந்தோம்பல் இவைகளை நடத்தலும் ஆகிய இவற்றைச் செய்து வந்த இவருடைய ஆற்றலை நாம் சற்று ஆலோசித்துப் பார்த்தால் இவ ருடைய உழைக்குந்தன்மை நமக்குப் புலப்படாமற் போகாது. ராஜீயத்துறை யில் இவர் வங்காள முடிசூடா மன்னராக விளங்கினரென்னில் இவருடைய தேசபக்தியை எடுத்துரைக்க நாம் எம்மாத்திரம். இப்பெருந்தகையை 1925-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் விண்ணுட்டவர் தம் விருந்ினராக ஏற்றனர். பாரதநாடு முழுவதிலும் இவருடைய பிரிவுக் காற்றாத மக்கள் கூட்டங் கூட்டி யமனைக் கண்டனஞ் செய்தனர். வங்காளம் வாடி வருந்துகின்றது. பாரதத்தாயும் வருந்தினளாயினும் மற்றொரு புதல்வனைப்பார்த்துச் சற்று ஆறுதலடைந்தாள்.

ஸ்ரீ. லக்ஷ்மி காந்தன்.

---

## வருகின்ற காங்கிரஸ்.

பாரத தேசம் இயற்கையாலமைந்தது; இறைவனருள் பொலிவது; இன் பத் தேன் சொட்டுவது; இருளை இரியச்செய்து அருளை அளிப்பது; இகபரசுகங்களை எளிதில் ஈவது. இயற்கைத்தாயே பாரததேவி. அவ்வியற்கை வழிநிற்றலே சுதந்திரம்; அதனாலடைவதே இன்பம். அவ்வழி நீங்கிச் செயற் கையால் வாடுவதே பந்தம்; அதனாலுறுவது துன்பம். இயற்கையின் வழி யாகவே உயிர்கள் இயங்குகின்றன. போலியின்பங்களை விரும்பி, ஏமாப்பில்லா இயற்கை வழிமாறி, செயற்கையால் பிணிக்கப்பட்டு, நாடும் நாட்டுமக்களும் துன்பப்படுவதைப் போக்க விளங்கி, விடுதலையைப் போதிக்க விரைந்து வந்

தனர் இயற்கைத்தாயின் இன்புள்ள புதல்வர்கள் பலர்; அவர்கள்கூடி, விடுதலை வழியை விளக்க, காங்கிரஸ் மகாசபையை ஸ்தாபித்தனர்.

அதுவுந்தொடங்கி ஆண்டுகள் நாற்பதும் இரண்டுமாயின. அதன் அறவொலி அண்ட முகடுகளை அதிரச்செய்தது. அதனைப் போற்றி வளர்த்த போற்றலுடைய பெரியாரனைவரின் பெருமைகளை யறியாதார் யாங்கணுமில்லை. காங்கிரஸ் மகாசபை உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் விளங்கி நிற்றலை வீணரும் அறிவர். "தர்மங் குன்றியகாலத்துத் தாரணியில் யான் அவதாரமெடுத்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தைத் நிலைநாட்டுவேன்" என்றார் கண்ணன் கீதையில்; அவ்விதமே இப்பொழுது அவதரித்துக் காந்தியென விளங்குகின்றார். பிரபஞ்ச மாயையை யொழிக்கச் சிறிதுமவர் அஞ்சுவதில்லை. அப்புனிதர் காங்கிரஸ் மகாசபையின் ஆதரவினாலேயே பாரததேசம் பயனடையக்கூடுமென்று வெகு சமீபத்தில் விளக்கினார். அவர் அதனைச்சார்ந்து தொண்டியற்றலே அறமெனத்தேர்ந்து காங்கிரஸ் மகாசபையின் கருத்திற் புகுந்தார்; கதரெனும் கற்பகத்தருவைக் காண்பித்தார். அந்நாள் முதல் அவரை அவதாரபுருஷரென நாம் அறியலானோம். அக்கதர் ஜாதி, மத வித்தியாசமின்றி அணிவாரனைவருக்கும் அணிகலனென விளங்குகின்றது.

இத்தகைய பெருஞ் சிறப்பினைத்தந்த காங்கிரஸ் மகாசபை இன்னும் எத்தனையோ காரியங்களையெல்லாம் சாதித்து, பாரதமக்களுக்கு இயற்கையாயுள்ள தேசாபிமானத்திற்குப் புத்துயிரளித்து வந்திருக்கிறது. இதன் பெருமையை இன்னும் அறியாத பல ஆச்சரிய மனிதரும் அவனியி லுலவுகின்றனர். பத்தரைமாற்றுப் பரிசுத்தத் தங்கமான காங்கிரஸை மங்கச்செய்ய வெண்கல வீணர்பலர் உட்புகுந்து, தேசமே நலிவொடு தேய்ந்திடவும், மனிதரின் பாசமே பெரிதெனப் பார்ப்பவர் மிகுந்திடவும், நாட்டின் கண்ணுள்ளார் பசியினால் நலிந்திடவும், தன் வயிறாட்டுதலே பெரிதென உள்ளுவோர் சேரவும், ஆணுருக்கொண்ட பெண்களின் கூட்டம் பெருகவும், காங்கிரஸ் மகாசபையில், கக்ஷிகள் அதிகமாயின.

இதற்கு அவரவரின் கொள்கைப் பேதம் முக்கிய காரணமல்ல. சுயநலமும், உயர்வு தாழ்வு கற்பிக்கும் வகுப்பு வாதமும், மதவித்தியாசம் பாராட்டும் மதமும் முக்கிய காரணங்களாக நிற்கின்றன. தேசிய விஷயத்தில் வகுப்பு வாதத்தையும் மதாசார பேதங்களையும் கலத்தல் அழகும் முறையு மாகாதவை. அவற்றிற்கு விமோசனம் தேடவேண்டுவது அவசியமாயினும் அவற்றைத் தமக்குள் ஒருவிதமாக முடிவு செய்துகொண்டு காங்கிரஸ் வழி நிற்றலே தலை. காங்கிரஸூம் இவ்விஷயத்தில் ஆனவற்றைச் செய்தே வந்திருக்கின்றது. ஆனால் ஜாதிக் கொடுமை மிகுந்து மக்களின் மனதைப் புண்படுத்திவிட்டதென்பதை அறியாதவரிலர். அது காங்கிரஸ் ஸ்தாபனத்தின் உள்ளும் புறமும் எரிந்து கிளர்ச்சிப் புகையைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருப்பதைச் சுயமரியாதை யுள்ளவன் எவனும் உணராமலிரான்.

நிற்க, தென்னாட்டில் ஜாதிக்கொடுமையும், வகுப்பு வாதமும் மிகுந்து



கொண்டே வருகின்றன. இதுவரையில் எண்ணிக்கையற்ற மகாநாடு கூட்டியவரில் ஒற்றுமைக்கு வழிதேடினாரெவருமில்லை. மகா நாடுகள் மகா காடுகளே யாயின; அவற்றில் ஒழித்தல் தீர்மானங்களே ஒருகோடி யிருக்கலாம்; இவ்விதம் அவை வேற்றுமையைப் பெருக்க மூண்டன. இஃதன்றி, தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பல தமது கடமைகளை மறந்தன; பொருளீட்டுவதையே போற்றுவனவாயின. புதிய தினசரிகள் தோன்றியதில் ஒன்றேனும் ஒன்றுபட்டவாழ்வை உணர்த்துவதாயில்லை; வரிதோறும் வகுப்புத் துவேஷமும் வாக்குவாதமும் வம்பும் விளைத்தெழுதுகின்றன; ஒற்றுமை மகாநாட்டைக் கூட்டுவாரில்லை. பொதுநல ஊழியம் போய், சுயநலப்பேய் தலைவிரித்தாடுகின்றது. அன்பு வெள்ளம் வற்றி அகந்தை வெள்ளம் பெருகி யோடுகின்றது; தாறுமாறாக எழுதுவதும், விளம்பர விகடவேலைபுரிவதும், வேடிக்கை பார்ப்பதுமே பத்திரிகைகளின் தொழில்களாகிவிட்டன.

இவ்விதம் நம்முள் சண்டை மிக, மண்டைவலி அதிகரிக்குமேல் நாம் தேசத்தொண்டை எவ்வாறியற்றித் தூயவராவோம்! நம்முள் துவேஷமான சித்தவிருத்தி அதிகரிக்குமானால் நாடென்ன நிலையையடையும்; அதன் முடிவென்னவாகு மென்பதைச் சிறிது சிந்திக்கவேண்டும். ஓரூரை யடைய வேண்டியவன் ஒரேவழியை நாடுவதுபோல, தேசநன்மையென்ற ஊரை யடைய விரும்பும் உரவோன், காங்கிரஸ் வழியைக் கடைப்பிடித்தலே கருமமாம். நமது தாய் காங்கிரஸ் வடிவானவள்; பொல்லாத சேயைத் திருத்தும் பொற்பினை யுடையவள். ஆதலின் அவளையடுத்து, விதண்டாவாதிகளை அன்பால் வென்று, ஒன்றுபட்டு ஓங்குதல் வேண்டும். தூங்குவதற்குத் தருணமிதுவன்று.

அன்புடையீர்! இவற்றையெல்லாம் கவனிப்பின் நன்மையைநாட இதுவே தருணமென்பதை எளிதி லுணரக்கூடும். காங்கிரஸ் சென்னைக்கு வரும்படியான பாக்கியத்தைத் தமிழ்நாடு அடைந்திருக்கின்றது. இச்சமயத்திலாயினும் நாம் ஒன்றுபடவேண்டும். பிணக்குற்ற சகோதரர்கள் ஓர் விவாககாலத்தில் ஒன்றுபடுவது பிரபஞ்சத்தில் வழக்கம். அதுபோலக் காங்கிரஸ் விவாக நாள் வருகின்றது. அங்கு நமக்குள்ள குறைகளை விளக்கி விமோசனம் தேடுதலே நாகரீக மடைந்தோரென்று நாம் கூறிக்கொள்வதன் குறிப்பாகும். நமது நாகரீகமற்ற வேறுபாடுகளைக்கண்டு வெளிநாட்டார் நகைக்கின்றனர்; ஏளனஞ் செய்கின்றனர். இந்நிலையினின்று நாம் இனியேனும் நீங்குவோம். இந்தக் காங்கிரஸ் டிசம்பரில் சென்னைமாபுரியில் கூடும்பொழுது, வாழப்பிறந்த நாம் தாழநடவாமல் மீள வழிதேடுவோம். அன்னையின் பொன்னடி பணிந்து அடிகளின் அடிகளை வணங்கி ஆற்றலுடன் ஒற்றுமைப் பாலையுண்டு இனியேனும் நாம் உய்ந்தவராவோம். இறைவன் இன்னருள் பாலிப்பானாக.

## காந்தி தரிசனம்.

> கதர் நிதிக்கு நீங்கள் தனம் அளிப்பது பெரிதல்ல; உங்கள் மனதை அளிப்பீரேல் அது மகத்தான வேலையைச் செய்யும். நீங்கள் ஒரு கதர் ஆடையை வாங்குவதால் ஒரு ஏழையின் பசி வறுமை நோய் தணிகின்றது. (மகாத்மா).

தேசதாஸன்.




## வேதாந்த சார சங்கிரக வசனம்

(155-ம் பக்கத் தொடர்ச்சி)

வேதத்தில் பிரவர்த்திமார்க்கம் நிவர்த்திமார்க்கம் என இரண்டு மார்க்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றில் பிரவர்த்திமார்க்கத்தால் பந்தத்தையும், நிவர்த்திமார்க்கத்தால் மோக்ஷத்தையும் ஜீவன் அடைகிறான். உலகத்தில் எந்தமூடனாயினும் தான் பந்தப்பட்டிருக்க விரும்புவானா? விரும்பான். விடுதலையையே விரும்புவான். அந்த விடுதலையே முக்தி. (முக்தி, மோக்ஷம், வீடு என்னும் இம்மூன்றும் ஒரே பொருளைத்தரும் சொற்கள். இம்மூன்றிற்கும் விடுதலை என்பதே பொருளாம்.) ஆகலின், அந்த விடுதலையை விரும்புவோன் பந்தத்தைத் தருவதான பிரவர்த்திமார்க்கத்தைக் கைக்கொள்வானோ? கொள்ளான். நிவர்த்திமார்க்கத்தையே கைக்கொள்வான். அதுவே கர்ம சந்யாசம். இதுகாறும் கர்மத்திற்கும் ஞானத்திற்கும் சேர்க்கை சம்பவியாது என்பது விரிவாகச் சொல்லப்பட்டது. ஆகையால் ஞானத்தை விரும்புவோன் கர்மத்தைக் கட்டாயம் விடவேண்டும்.

**சங்கை:**—அப்படியானால் கர்மத்தை முதலில் என் கொள்ளவேண்டும்?

**சமாதானம்:**—ஒருவன் ஒரு வஸ்துவைக்கண்டு இதனால் நன்மையுண்டாகும் என்றெண்ணி அதை முதலில் கைக்கொள்கிறான். அங்ஙனம் கொண்ட பிறகு அதனால் யாதொரு பயனுமில்லை யெனத் தெரிந்துகொள்வானாயின் மீண்டும் அவ்வஸ்துவை அவன் கோருவானோ? கோரமாட்டானன்றோ? அப்படியே இஷ்டத்தைச் சாதிப்பது என்னும் உத்தேசத்தால் முதலில் கிரகிக்கப்பட்டாலும் பின்னர் அதன் நிஷ்பலத்வத்தைத் தெரிந்துகொண்டவன் அதனைக் கைவிடுதலே நலமாகுமன்றே!

(எடுத்துக்கொண்ட நூலில் ஞானசாதனமாகவுள்ள சாதன சதுஷ்டயம் கூறப்படுமிடத்தில் சந்யாசத்தைப்பற்றிச் சொல்வானேன்? சந்யாசம் சாதன சதுஷ்டயங்களில் ஒன்றல்லவே? ஆகவே, அதைக்குறித்து இங்கு விவரித்துச் சொல்வது எவ்வாறு பொருந்தும்? என்னும் ஆசங்கை நிகழுமாகலின் அதற்குக் காரணம் கூறுகிறார்.)

சாதன சதுஷ்டயங்களில் மூன்றாவதாகிய சமாதிஷட்கசம்பத்தியில் உபரதி யென ஒன்று கூறப்பட்டிருக்கின்றதன்றே. உபரதி என்னும் சப்தத்திற்கு முதலில் காணப்படும் பொருள்களிலிருந்து நிவிர்த்தியாதல் என்பது பொருள். இந்த உபரதியும் முக்கியம் அமுக்கியம் (கௌணம்) என இருவகைப்படும். எங்ஙனமெனின், *சப்தவிருத்திக்கு (சப்தத்தால் அறியப்படும் அர்த்தத்திற்கு) திருசிய வஸ்துக்களை விடுதல் அதாவது காணப்படும் வஸ்துக்களினிடத்துள்ள அபிமானத்தை விடுதல் என்பது முக்கியார்த்தமாம். கர்மத்தைமாத்திரம் விடுதல் என்பது அமுக்கியார்த்தம். எனவே கர்மத்தை விடுதலாகிய கர்மசந்யாசமானது சிரவணத்திற்கு அங்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

* சப்தவிருத்தியெனினும் சக்திவிருத்தியெனினும் சொல்லாற்றல் எனினும் ஒக்கும்.



(கர்மத்தை மேற்கொண்டுள்ளவனுடைய மனம் சிரவணஞ் செய்யப் புகுங்காலத்தில் அச்சிரவணத்தில் நிலைபெற்றிராமல் பாகிய (வெளி) வியவகாரங்களில் சென்றலைந்துகொண்டிருக்குமாகலின் அங்ஙனம் செல்லவிடாமல் சிரவணத்தில் நிறுத்தும் பொருட்டுக் கர்மங்களை விடுதலாகிய கர்மசந்யாசம் அத்தியாவசியமாம். ஆகவே இது சிரவணத்திற்கு அங்கமாகவுள்ளது. ஆனால் கர்மங்களை விடுதல் மாத்திரம் போதாது. கர்மங்களை விடுதல் முதல் அப்பியாச (அங்க) மாகக் கொள்ளப்பட்டிருக்கிறதேயொழிய அதுவே முக்கியமல்ல. எந்த எந்தப் பிரிய வஸ்துக்களைக் காண்கின்றோமோ அந்த அந்த வஸ்துக்களினிடத்துள்ள அபிமானத்தை விடுவதே அத்தியாவசியமானதாம். மனம் ஓரிடத்தில் நிலைபேறுடையதாகாமல் ஓடுவதற்குக் காரணம் விஷயங்களினிடத்துள்ள அதாவது திருசிய வஸ்துக்களினிடத்துள்ள ஆசையேயென்பது ஆராயுமிடத்துப் புலனாம். ஆகையால் மீண்டும் மீண்டும் தலையெடுக்கும்படியான மேல் கிளைகளை வெட்டுவதைக் காட்டிலும் மரத்தின் ஆணிவேரையே பிடுங்கி எறிந்துவிடுவோமாயின், அம்மரம் மறுபடியும் தலையெடுக்காமல் உலர்ந்துபோகுமதுபோல, மனம் ஓடி யுழல்வதற்குக் காரணமான விஷயாபிமானத்தையே விட்டுவிடின் மனம் எங்கும் ஓடி யுழலாமல் சிரவணத்தில் நிலைத்துநிற்கும். இவ்வாறு விஷயாபிமானத்தை விடுவதே சந்யாசமாம். இதுவே உபரதி சப்தத்தின் முக்கியார்த்தமாம். உபரதி என்னும் பதத்திற்கு சந்யாசம் என்பது பொருளாதலால் அச்சந்யாசம் ஈண்டு கூறப்பட்டது.)

**சங்கை:**—பிரதானமாக நாம் அடையவேண்டியது வேதாந்த சிரவணமேயல்லவா? அதைச் செய்தல்போதாதோ? அங்கபூதமாகிய அப்பியாசமேன்?

**சமாதானம்:**—பிரதானகாரியம் (அங்கி) சித்திப்பதற்காக அங்கபூதம் (அப்பியாசம்) அவசியம் அனுசரிக்கப்படவேண்டும். அங்கம் லோபமானால் (சரியாகச் செய்யப்படாவிட்டால்) பிரதானவஸ்து சித்திக்காது. (இது உலகானுபவத்தில் பிரசித்தம்.) ஆகையால் இவ்வுலகத்தும் பரலோகத்துமுள்ள விஷய போகங்களினின்று நன்றாய் விரக்தி யடைந்தவனாய்ச் சந்யாசங்கொள்ளவேண்டும். விரக்தி யில்லாதவன் கொள்ளும் சந்யாசம் நிஷ்பலமாம். சந்யாசங் கொண்டபின்பு பூர்வ விஷயங்களை நினைத்தலுங் கூடாது.

### சிரத்தை.

(சமாதி யாறனுள் உபரதிக்குப் பின்னதாகிய சிரத்தை நிரூபிக்கப்படுகின்றது.) குருவாக்கியங்களினிடத்தும் வேதாந்த வாக்கியங்களினிடத்தும் இவை சத்தியமாம் (உண்மை) என்னும் நிச்சயவடிவ புத்தி எதுவோ அது சிரத்தையாம். சிரத்தையுடையவர்களுக்கே முத்தி சித்திக்குமன்றி அஃதிலார்க்குச் சித்தியாது. வேதமும் 'சௌமியா! சூக்ஷ்மமாகிய தத்துவஞானம் உனக்குக் கூறப்பட்டது. இதில் சிரத்தைவை' எனக் கூறுகின்றது. சிரத்தையில்லாதவனுக்குப் பிரவிர்த்தி யுண்டாதலில்லை. பிரவிர்த்தி யில்லாவிட்டால் காரியம் கைகூடாது. சகலரும் அசிரத்தையால் அடிபட்டே சம்சாரமாகிய பெருங்கடலில் ஆழ்கின்றனர். தெய்வத்தினிடத்திலும் வேதத்தினிடத்திலும் குருவினிடத்திலும் மந்திரத்தினிடத்திலும் தீர்த்தத்தினிடத்திலும் பெரியோரிடத்திலும் ஒருவன் எவ்வளவு நம்பிக்கை (சிரத்தை) யுடையவனாயிருக்கிறானோ அதற்குத் தக்கபடியே [illegible] பிரம்ம மிருக்கிறது என்னும் நிச்சயபுத்தியாலுண்[illegible] நம்பிக்கையில்லாவிடில் அதையறிதல் சம்பவியாது. அப்படி அந்த [illegible] இருக்கிறது என்னும் நம்பிக்கையும் சாஸ்திரத்தினிடத்தில் நம்பிக்கை [illegible]தால்தான் உண்டாகும். இல்லா

விட்டால் அந்த நிச்சயபுத்தி யுண்டாகாது. ஆகையால் குருவாக்கியத்திலும் வேதாந்த வாக்கியத்திலும் மிகுந்த நம்பிக்கையைக்கொண்டிருக்கவேண்டும். சிரத்தையுள்ள முமுக்ஷுவிற்கே மோக்ஷரூபமாகிய பலன் சித்திக்கும். சிரத்தையில்லாவிடின் சித்தியாது.

ஒருவன் மற்றொருவன் வார்த்தையை நம்பவேண்டுமாயின் அந்த வார்த்தையைச் சொல்பவன் உண்மையாளனென்று (மெய்யே பேசுவான் பொய் பேசமாட்டான் என்று) தெரிந்தால்தான் நம்பிக்கை யுண்டாகும். எப்பொழுதும் உண்மையே பேசுவோனுடைய வார்த்தையில்தான் யாவருக்கும் நம்பிக்கை யுண்டாகுமல்லவா? அதுபோல, வேதமானது ஈஸ்வரவாக்கியமாகலின், அது உண்மையென்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை. இனி, குருவின் வாக்கியத்தில் எப்படி நம்பிக்கை யுண்டாவதெனின், 'முக்தியடைந்தவன் ஈசுவரசொருபன்' ஆகலின் அத்தகைய (ஜீவன் முக்த நிலைமையிலுள்ள) குருவின் வாக்கியமும் ஈசுவரவாக்கியம் போன்றதேயாகும். அதனால் விவேகிகளாகிய சத்புருஷர்களுக்கு வேதாந்த குரு வாக்கியங்களிடத்தில் நம்பிக்கை யுண்டாகின்றது.

## சமாதானம்.

மனத்தை விஷயங்களிற் செல்லவொட்டாமல் தடுத்து ஆத்மவஸ்துவினிடத்தில் நிறுத்துதல் சித்த சமாதானம் எனப்படும். ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டுமெனக் கருதுவோர் தம் மனத்தை வேறிடங்களிற் செல்லவிடாமல் தடுத்து, தாம் எடுத்துக்கொண்ட காரியத்தினிடத்திற் சிதையாமல் நிலைபெற்றிருக்கச் செய்யவேண்டிய தவசியம். மனம் வேறிடம் சென்றிருந்தால் எவ்வளவு முயற்சிசெய்தாலும் காரியம் கைகூடாது. எல்லா முயற்சிகளும் வீணாகும்.

திருஷ்டாந்தமாக:—ஓர் லக்ஷியத்தை அடிக்க விரும்புகிறவன் தன் மனத்தையும் பார்வையையும் கைகளையும் பாணத்தையும் ஒரே இடத்தில் (அக்குறியில்) அசையாமல் நிறுத்தினால் குறிப்பிட்டதை அடித்து வீழ்த்தலாம். அப்படிக்கின்றிச் சிறிதேனும் குறி தவறுமானால் வீழ்த்த முடியுமோ? முடியாது. அதுபோல, ஆத்மாவை யறிய விரும்புவோனுக்குச் சித்த சமாதானம் அவசியமென்றறியவேண்டும். ஆகையால் காரியசித்திக்கு முக்கிய காரணமாயிருப்பதால் சமாதானமானது மோக்ஷாபேக்ஷையுள்ளவர்களுக்கு அவசியமாயிருத்தல் வேண்டும். இந்தச் சமாதான முண்டாகவேண்டுமாயின், மிக்க தீவிரமான விரக்தியும் பலனை யடையவேண்டுமென்னும் பேராவலும் இருக்கவேண்டும். இந்த இரண்டுமிருந்தால் சமாதானம் உண்டாகும். ஆகவே சித்தசமாதானத்திற்கு மேற்கூறிய இரண்டுமே முக்கியகாரணங்களாம்.

இதுகாறும் கூறிய சமாதியாறும் முக்தியடைவதற்கு முக்கிய சாதனங்களாம். வேதமானது பிரம்மசரியம் முதலானவைகளையும் முக்தி சாதனமெனக் கூறியிருப்பினும் அவையெல்லாம் பகிரங்கசாதனங்களேயாம். இச் சமாதிஷட்கமே அந்தரங்க சாதனமெனப் பெரியோர் அபிப்பிராயப்படுகின்றனர். பகிரங்கத்தைவிட அந்தரங்கமே சிறந்ததாகலின் ஞானத்தையடைய விரும்புவோர் சமாதிஷட்க சம்பத்தியை முக்கியமாகக் கொள்ளவேண்டும். போர்வீரனுக்குத் [illegible]மொன்றுமட்டு மில்லாவிட்டால் அவன் எவ்வளவு ஆயுதங்களை [illegible]து பயன்? ஒன்றுமில்லை. அதுபோல, அந்தரங்[illegible]மான [illegible]திஷட்க சம்பத்தியை யடையாதவன் எவ்வ[illegible]ரவணம் செய்தாலும் [illegible]ல்லை.

([illegible]தொடரும்) பூ. ஸ்ரீ[illegible]ன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

187485



# வர்த்தமானப்பகுதி

மரத்தூளில் சர்க்கரை:—சென்ற ஜூலை மாதத்தில் லண்டன்மாநகரில் ரசாயன சாஸ்திரிகளின் மகாநாடு (Congress of Chemists) ஒன்று நடைபெற்றது. அம்மகாநாட்டினர் பிரயோஜனமற்ற வஸ்துக்களினின்று பிரயோஜனமான பொருள்கள் உண்டாக்கப்படுமென்று ருஜு செய்திருக்கின்றனர். அவர்கள் மரத்தூளிலிருந்து சர்க்கரையை உண்டாக்கும் விதத்தைக் காட்டியுள்ளார்கள். மரத்தூளிலிருந்து சர்க்கரையை யுண்டாக்கும் தொழிலுக்காக 25,0000 பவுன் ஆரம்பச் செலவாயிற்று. உலர்ந்த மரத்தூளில் அதிகக்கெட்டியான (Hydro Coloric Acid Solution) ஹைட்ரோ குலோரிக் ஆஸிட் சொலூஷன் எனும் திராவகத்தை ஊற்றிக் கலந்தால் பழவகைகளிலிருந்து எடுக்கப்படும் ஒருவித சர்க்கரையாக அத்தூள் மாறுகிறது. இவ்விஷயம் இதற்கு முன்னமே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 100 பவுன் உலர்ந்த மரத்தூளிலிருந்து 65 பவுனுக்கு மேலான சர்க்கரை கிடைக்கிறது. இவ்வாறு கிடைப்பது சந்தோஷத்தைத் தரத்தக்க விஷயமாகும். பழவகைகளிலிருந்து எடுக்கப்படும் சர்க்கரை உலகத்தில் ஆண்டொன்றுக்கு இருபதல்லது முப்பதுலட்சம் டன் நிறைகொண்ட அளவுக்குச் செலவாகிறபடியால், மரத்தூளைக் [illegible]ண்டு மேற்கூறிய சர்க்கரையை வியாபாரமுறையில் உண்டாக்கினால் நலம் உண்டாகும். உலகத்தில் வெட்டப்படும் மரங்களில் நூற்றுக்கு 20 வீதமான மரங்கள் தூளாகவும் சிறு சிறு கட்டைகளாகவும் பயனற்றுப் போய் விடுகின்றன. அவற்றை இவ்வாறு பயன்படுத்துவது மிகச் சிறந்ததாகும்.

* * * *

கம்பி இல்லாத் தந்தியின் விநோதங்கள்:—உலகத்தின் ஒரு கோடியில் இருக்கின்ற மனிதன் இன்னொரு கோடியிலுள்ள மனிதனுடன் பேசவும், அவனைக் காணவும் சந்தர்ப்பங்கள் வாய்க்கக்கூடுமென்பது செனட்டர் மார்க்கோனியின் கூற்றால் தெரியவருகின்றது. இங்கிலாந்தில் இரட்டையான ஸ்படிகங்களை (Crystal Sets) வைத்து அவைகளின் மூலமாய் உலகத்தின் பல பாகங்களில் நடக்கும் பிரசங்கங்களையும் ஆடல் பாடல்களையும் கேட்கவும் பார்க்கவும் கூடுமென்று ஸ்ரீமான் மார்க்கோனி தீர்க்க தரிசனங் கூறினார். கம்பியில்லாத் தந்தியின்மூலமாக ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பாலுள்ள மனிதர்களின் உருவங்களையும், பிட்சர் டிரான்ஸ் மிஷன் (Picture Transmission) என்னும் ஏற்பாட்டால் அதிக தூரத்திலுள்ள மனிதர்களுடைய உருவங்களையும் காணும் வித்தையை வியாபாரத்துறையில் கொண்டுவர சென்ற மாதத்தில் கம்பெனி ஒன்று ஏற்பாடாகியுள்ளது. அக்கம்பெனியார் கிறிஸ்ட்மஸ் பண்டிகைக்குள் முப்பதுபவுன் விலைக்கு [illegible] ஒரு இயந்திரத்தைச் செய்து விற்க ஏற்பாடுசெய்து வருகி[illegible]ள்.

* * *

ஓர் கட்டுப்பாடு:—இராமநாதபுரம் ஜில்லா திருப்பூவணம், புதூர் மேலத் தெருவிலுள்ள ஜனங்கள் யாவரும் சித்திரை [illegible]0ல் யன்று ஓர் கூட்டங்கூடி அத்தெருவிலுள்ள யாவரும் மதுபானஞ் செய்[illegible]து; சீட்டு முதலிய விளையாட்டுகளை ஒருவரும் அனுசரிக்கக்கூடாது; [illegible] நாடகத்தையுள்ள இடங்களில் நிற்கவும் கூடாது என்று கட்டுப்பாடு செய்திருக்கின்றனராம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரபவ௵ ஆடி௴—கலியுகாதி 5029, சாலிவாகனம் 1850, பசலி 1336—கொல்லமாண்டு 1102—ஹிஜரி 1346
இங்கிலீஷ் 1927௵ ஜூலை௴—ஆகஸ்டு௴

| ஆடி | ஜூலை | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | சனி | துதி38-40 | திரு34-10 | சித்60 | |
| 2 | 17 | ஞா | திரி33-8 | அவி30-35 | ம30-35சி | தக்ஷிணயன புண்யகாலம் |
| 3 | 18 | திங் | சது27-8 | சதை26-35 | சி26-35ம | கரிநாள், சாந்திரதிரிதிகை |
| 4 | 19 | செ | பஞ்20-50 | பூரட்22-18 | ம22-18அ | விதைவிதைக்க |
| 5 | 20 | புத | சஷ்14-38 | உத்18-5 | சி18-5ம | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 6 | 21 | வியா | சப்8-40 | ரேவ14-8 | சி14-8அ | பும்சவனம், சீமந்தம் |
| 7 | 22 | வெ | அஷ்3-5 நவ58-3 | அஸ்10-35 | அ10-35சி | சீமந்தம், வித்தியாரம்பம் அவமாகம், சுபமுகூர்த்தம் செய்ய |
| 8 | 23 | சனி | தச53-33 | பர✕7-30 | சி7-30அ | கிருத்திகை, மாடுவாங்க |
| 9 | 24 | ஞா | ஏகா49-43 | கிரு5-5 | சித்60 | சர்வ, மத்வ, ஏகாதசி |
| 10 | 25 | திங் | து46-40 | ரோ3-25 | அமி60 | விதைவிதைக்க |
| 11 | 26 | செவ் | திர44-33 | மிரு2-25 | சி2-25ம | வியாதியஸ்தர் குளிக்க |
| 12 | 27 | புத | சது43-10 | திரு2-15 | சித்60 | மாசசிவராத்திரி |
| 13 | 28 | வியா | ●42-53 | புன3-5 | அமி60 | சர்வத்திர அமாவாசை |
| 14 | 29 | வெ | பிர43-33 | பூசம்5-3 | மர60 | சிராவணசுத்தம் |
| 15 | 30 | சனி | துதி46-8 | ஆயி8-8 | ம8-8அ | |
| 16 | 31 | ஞா | திரி49-23 | மக12-23 | ம12-23சி | |
| 17 | 1 | திங் | சது53 58 | பூர17-48 | சித்60 | |
| 18 | 2 | செவ் | பஞ்59-20 | உத்24-13 | அ24-13ம | |
| 19 | 3 | புத | சஷ்60 | அஸ்31-20 | ம31-20சி | |
| 20 | 4 | வியா | சஷ்5-15 | சித்38-53 | சி38-53அ | |
| 21 | 5 | வெ | சப்11-10 | சுவா46-0 | சித்60 | |
| 22 | ஆகஸ்டு 6 | சனி | அஷ்15-18 | விசா52-23 | சித்60 | |
| 23 | 7 | ஞா | நவ20-58 | அனு57-30 | மர60 | |
| 24 | 8 | திங் | தச23-40 | கேட60 | சித்60 | |
| 25 | 9 | செவ் | ஏகா24-43 | கேட்0-48 | மர0-48அ | சர்வமத்வ ஏகாதசி |
| 26 | 10 | புத | து23-40 | மூல2-20 | ம2 20அ | பிரதோஷம், கடன்தீர்க்க |
| 27 | 11 | வியா | திர20-43 | பூரா1 55 உத்-59-48 | சித்60 | அவமாகம், சுபமுகூர்த்தம் சீமந்தம், உழவுசெய்ய |
| 28 | 12 | வெ | ச○16-5 | திரு56-8 | மர56-8சி | பௌர்ணமி வரலக்ஷ்மீ விரதம் |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | அவி51-20 | சி51-20அ | காயத்திரி ஜெபம் |
| [illegible]0 | 14 | [illegible] | [illegible] துதி5[illegible] | சதை45-50 | சித்60 | சிராவணபகுளம், அவமா[கம் |
| 31 | 15 | திங் | திரி47-[illegible] | [illegible]40-5 | ம40-5சித் | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 32 | 16 | செவ் | சது40-[illegible] | [illegible]34-20 | அ34-20சி | சிம்மரவி நா-33-55-வி. |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | ராகு |
| | 11-மிது-வ-பு<br>19-கட-புத<br>25-கன்-சுக் | | சூரி புத |
| | | | சுக் செவ் |
| கே | சனி | | |

PRINTED [AND PUB]LISHED BY N. MUNISAWMI MUDALIAR,
[A]T THE "ANANDA BODHINI" POWER PRESS,
10, VENKATESA MAISTRY ST., MADRAS.


உட் என்பவருடைய

## மலேரியா மாத்திரைகள்

### மலேரியாவிற்கு நிகரற்ற நிவாரணி

மலேரியா என்னும் ரோய் சாதாரணமாக குளிர்ஜுரம், பித்தஜுரம், முறைஜுரம் என்னும் பெயருடன் விளங்குவது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. இந்த ஜுரம் வந்தால் தேகத்தில் வலியும் வாந்தியும் குளிரும் உண்டாகிக் கடினமாக ஜுரம் அனல் வீசிக் காய்ந்து இரண்டு மூன்று மணி நேரத்தில் தானாகவே, விட்டுவிடுகிறது. இதற்கு நாம் பொதுவாகக் கொய்னா வையே உபயோகித்து வருகிறோம். அதனால் பித்தம், பசிமந்தம், காதடைப்பு முதலியவை உண்டாகின்றன. தவிர கொய்னா சாப்பிட்டவுடன் ஜுரம் நின்றாலும், மறுபடியும் ஒரு வாரமோ, பக்ஷமோ, மூன்று வாரங் கழித்தோ ஜுரம் வருமென்பதை நீங்கள் கவனித்திருக்கலாம்.

இம்மாதிரி நின்று நின்று ஜுரம் வருவதால், ஜுரக்கட்டி, பலஹீனம், சோகை முதலியவை உண்டாகி மனத்தளர்ச்சியும், வியாகூலமும் ஏற்படுகின்றன. ஆதலால் நீங்கள் மேற்கூறிய வியாதிகளினின்றும் சுகமடைய விரும்புவீர்கள் அல்லவா? அவைகளைப் பற்றற ஒழிக்கவே,

"உட் என்பவரின் மலேரியா மாத்திரைகள்"

வெளிவந்திருக்கின்றன. இவைகளைத் தினந்தோறும் சாப்பிட்டால், ஜுரம் நீங்கி, இரத்தம் சுத்தியாகி, தேகக்கட்டும், உடம்புக்கு ஒரு வனப்பும் உண்டாகும். இவற்றை ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால் இவைகளின் அதிசய குணமும் மேலே குறிக்கப்பட்டிருக்கும் விஷயங்களின் உண்மையும் விளங்கும். கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**32-மாத்திரைகளடங்கிய புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.**

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## கவனியுங்கள் ! கவனியுங்கள் !

## தீபாவளி வந்துவிட்டது !

குறைந்த விலை ! "பறந்த தினுசுகள்" சிறந்த ஜவுளி !

நம்மிடம் நம் நேர் பார்வையில் தயாரிக்கப்பட்டனவும் பிற ஊர்களிலிருந்து வரவழைக்கப்பட்டனவுமான நாகரீக நயம் பட்டுச் சேலைகள், அங்கவஸ்திரங்கள் முதலிய ஜவுளிகள் பலவும் விலை சரசமாகக் கிடைக்கும். தோட்டத்து கூலிகள், கங்காணிகள், மற்றுமுள்ள பிரபுக்கள், யாவருக்கும், தேவைப்படி வி. பி. மூலமாயும், பாங்குகள் மூலமாயும் அனுப்பப்படும். தேவைக்கு உடனே எழுதுங்கள்.

இனம் !! கேட்லாக் இனம் !!

விசாலாக்ஷி அண்கோ,

மதுரை. (தெ. இந்தியா.)

# ஞானசெல்வாம்பாள் அல்லது

## இரண்டு சகோதரிகள் 5-பாகம்

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. நூற்றுக்கு மேற்பட்ட பல அத்தியாயங்களையுடையது; "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறு போல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத்தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் மேலும் ஆனந்தமாக முடிவு வரை சென்றுகொண்டேயிருக்கும். படிப்பவர்கள் இப்புத்தகத்தைக் கைவிடாதபடி ஆகாரமுண்ணுங் காலத்திலுங்கூட விரித்தபடியே பார்த்துக்கொண்டு சாப்பிடும்படி அவ்வளவு இனிமை இந்நாவலில் அமைந்திருக்கின்றது.

கதாநாயகிகளாகிய ஞானம்பாள், செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளும், தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருந்ததால் அடைந்த பல வகைத் துன்பங்களும், வஞ்ச நெஞ்சர்களாகிய படுமோசக்காரர்களால் நிரபராதிகளாகிய பலர் பெரிய பெரிய விபத்துக்களுக்குள் சிக்கி மீள்வதும், பஞ்சமாபாதகர்கள் அஞ்சாமல் நல்லோர்க்கியற்றும் சஞ்சலச் செயல்களும், நெஞ்சு திடுக்கிடும் விஷயங்களும், முடிவில் தீயோர் பல ஆபத்துகளில் சிக்கி அடியோடொழிவதும், நல்லோர் சுகமடைவதும், இன்னும் எண்ணிறந்த பற்பல அற்புத விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் விலை ரூபா 1 10 0
ஐந்து பாகங்களும் சேர்த்து வாங்குவோருக்கு விலை ரூபா 9 0 0

## அர்ஜுனலிங்கும், சுந்தரும்.

(ஸ்ரீமாந் - ஆரணி - குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.)

இது, இப்போது புதிதாக வெளிவந்திருக்கும் நாவல். இதில் இரண்டு துப்பறியும் நாவல்கள் அடங்கி யிருக்கின்றன. இவற்றுள், துப்பறியும் நிபுணர்கள் சாமார்த்தியமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதோடு ஒரு குரங்கும் கிளியும் மர்மமான கொலைக்கேஸை வெளியாக்குவது விநோதமாயிருக்கும்; குற்றம் வெளியாகியும் குற்றவாளி விடுதலை யடைதல் ஆச்சரியமாயிருக்கும்.

இதன் விலை அணா 2.

**காமவல்லி** காமலீலை நிறைந்தது, இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தைவிளக்குவது. இதன் விலை அணா 8

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# கைத்தொழில் புத்தகங்கள்



சலவை சோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரகசிய மை, சர்பத்து, செயற்கை தங்கம், பெப்பர்மெண்டு, ரசம் பூசுதல், ரோமசங்காரி, கூந்தல் தைலம், தேள் விஷ சஞ்சீவி, வீரிய விர்த்தி மாத்திரை முதலியவைகள் அடங்கிய "1000தொழில்முறைகள்" விலை ரூ. 4-0-0 "சோப் தொழில்" 100-பக்கம் படங்களுடன் ரூ. 1. தீக்குச்சித் தொழில் ரூ. 1.

## கைத்தொழில் கேட்லாக் இனாம்!

ஆர்ட் புக்ஸ் கம்பெனி, 14, திருச்சிராப்பள்ளி.

உண்ணும் உணவிற்கு ஜீரணசக்தி ...?

முதல்தரமான—A Quality

# பெருங்காயம்.

அநேகர் உணவை இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததை தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும்.

வேண்டுவோர்கள் தெரிவித்து வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2. } தபாற்கூலி
½-இராத்தல் ரூபா 1-1-0. } வேறு.

# மலச்சிக்கல்

எல்லா வியாதிகளுக்கும் மலச்சிக்கலே காரணம் என்பது சுருதி யுக்தி அநுபவங்களால் தெரிந்துகொண்ட விஷயம். தினந்தோறும் மலம் தாராளமாய்க் கழிந்துவிட்டால் வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலையில் நிற்கும்.

சில தினங்களில் நீங்கள் மிக ஆரோக்கியமாய் இருப்பீர்கள். அதற்கு காரணம் என்னவென்று யோசித்திருப்பீர்களானால் மலம் தாராளமாய்க் கழிந்ததனாலேயென்று தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆகையால் நோயுள்ளவர்களும் நோய் இல்லாதவர்களும் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

நமது திராட்சைப்பழ லேகியமானது மலத்தைத் தாராளமாய்க்கழித்து சகல நோய்களையும் கண்டித்து தேகத்தை ஆரோக்யமாய் வைத்திருக்கும்.

முழுவதும் பச்சிலை, புஷ்பம், பழம், தேன் இவைகளைக்கொண்டு பரிசுத்தமாகத் தயார் செய்யப்பட்டது. குமட்டல் வாந்தி காகநப்பு முதலிய கெட்ட செய்கைகள் ஒன்றும் கிடையாது. வாளம் முதலிய பேதியாகும் மருந்துகள் கண்டிப்பாய்ச் சேர்க்கப்படவில்லை யென்பதற்கு உத்தரவாதம் செய்கிறோம். சாப்பிட மிக இனிப்பாய், இருக்கும்.

டப்பி 1-க்கு ரூ. 1—4—0 4-டப்பி ரூ. 4—8—0

## நாலுபில்லை மூக்குக் கண்ணாடிகள்.



இவை கண்களுக்கு குளிர்ச்சி யுள்ளது. இவை உபயோகிப்பதினால் வெய்யிலுன் உபத்திரவும் இல்லாமலும் கண்களுக்கு தூசி, மண், முதலியதும் படாமலும் கண்கள் சுத்தமா யிருக்கும்; இதன் கம்பிகள் எப்பொழுதும் வெள்ளையைப்போல் வெண்மையாயிருக்கும்; இதிலும் பச்சை, ஊதா, சாம்பல் நிறம், மேகவர்ணம் முதலியது உண்டு.

நாலுபில்லை மூக்குக்கண்ணாடி விலை ரூபா 1—4—0

இதில் மேகவர்ணமுள்ள அதிக குளிர்ச்சியுள்ள உயர்ந்த 4-பில்லை கண்ணாடி விலை ரூபா 3—0—0

---

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## மர்மங்கள் வெளியாய்விட்டன !

# எதன் மர்மங்கள்?

# மணவாழ்க்கையின் மர்மங்கள்

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர் வேத, யூனனி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக் கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியம்; கையி லெடுப்பதே போக்கியம் மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் கோர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலை யாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்தினவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் எம்மால் வெளியிடப்பட்ட "கோக் கோகக்கோலம்" என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மண வாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—4—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | 0 | மதனாதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 8 | 0 | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |

### வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | ரூ7 | 8 | சௌந்தர கோகிலம்2பாகம் | ரூ. 3 | 12 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கையர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

### தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| கமலாக்ஷி | 1 | 12 | ஞானசம்பந்தம் | 1 | 4 |
| ஞானபிரகாசம் | 1 | 8 | சிவஞானம் | 1 | 4 |
| ஞானாம்பிகை | 1 | 8 | விஜயசுந்தரம் | 2 | 0 |

### ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விஜயராகவன் | ரூ. 1 | 0 | மோஹனசுந்தரம் | ரூ. 0 | 12 |
| இராஜேந்திரன் | 1 | 0 | ஆநந்தகிருஷ்ணன் | 0 | 12 |
| இராஜாம்பாள் | 0 | 12 | வரதராஜன் 2-பாகம் | 2 | 0 |
| சந்திரகாந்தா | 0 | 12 | ஜெயரங்கன் அச்சில் | | |

விலாசம்:—சூரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

---

**அதிரகசிய நூல்!** **அற்புத வசிய நூல்!**

இதனால் சகல வசிய சக்தியையும் பெறலாம். பிறரை வசீகரித்தல், ஜீவப்பிராணிகளைத் தம் வயப்படுத்தல், ஔஷதமின்றிப் பிணிகளைத் தீர்த்தல், திரிகால அறிவைப் பெறல், தூர திருஷ்டி தூர சிரவணம் முதலிய ஹிப்னடிஸ மெஸ்மெரிஸ சாஸ்திர ஆராய்ச்சியுள்ள அற்புதங்கள் சித்திரப் படங்களுடன் இதில் அடங்கியுள்ளன.




விலை ரூபா 1—4—0

சதிபதிகளின் மர்மம் (அல்லது)

## மானிடரகசிய சாஸ்திரம்.

இதில் வசந்தனுக்கும் சுலோசனைக்கும், வினவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்னஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்றவிதமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், இன்னவிதமாக சுகிக்க வேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும் மாதர்களுக்கு அமிர்தநிலை எந்த காலங்களில் எவ்விடத்தில் இருக்கும் என்பதையும். அதை எவ்விதமாய் நிலை பெயர்க்க வேண்டுமென்பதையும் பிரகஸ்பதிபகவான் தேவேந்திரனுக்கு அருளிச்செய்த உலோகாயத சம்மதமுமான விஷயங்கள் அமைந்துள்ளன. இன்னும் அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப்போன்ற அரியபெரிய மர்மங்கள் இந் நூலில் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றன. கண்களைக் கவரும் அழகிய சித்திரபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1 0 0

## மாயாஜால விநோதம் 2000

நண்பர்களே! நீங்கள் ஆனந்தமாக இருக்கவேண்டுமானால் இப்புத்தகத்தை வாங்கிப்பாருங்கள். இதைப்படிப்பதால் இங்கிலீஷ் கைப்புரட்டு வித்தைகள், மலையாள வித்தைகள், கணித வித்தைகள், சைன வித்தைகள், பீதாம்பர வித்தைகள், பிரான்சு வித்தைகள், மூலிகை சல்லிய வித்தைகள், கண்கட்டு வித்தைகள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

அஷ்டமாசித்திகள் செய்யலாம்; வசிய வகைகள் செய்யலாம்; மணலைக் கிளறி விநாயகர் காட்டலாம்; மகேந்திரஜாலம் செய்யலாம்; இந்திரஜாலம் செய்யலாம்; பட்டணங்களைத் தோன்றச் செய்யலாம்; நினைத்த தேவர்களைக் காட்டலாம்; கோகர்ண வித்தை, கண்கட்டு ஜாலம், செய்யலாம்; பாதாள அஞ்சனம் செய்யலாம்; சர்வ வசியம் செய்யலாம்; பச்சைப்பாம்பு மேய்தல் காட்டலாம்; பேயாட்டுதல், மாஞ்செடி முளைக்கவைத்தல், வயிற்றில் நூல் எடுப்பது, ஜால காரடி வித்தைகள், பாதாள மை ஜாலம், மாரண ஜாலம், மோடி வைக்கும் வித்தை, மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம், சத்துரு நாசமாகும் ஜாலம், காசுக்கள் உண்டாக்கும் வித்தை, இருட்டில் சூரியனைக்காட்டும் ஜாலம், மூப்பு செய்யும் ஜாலம், சர்வ வாத்திய ஜாலம், மணலை அல்வா செய்யும் ஜாலம், இராஜவசியம், எக்காளம் வாசிக்கும் ஜாலம், குட்டிச்சாத்தான் ஜாலம், வழக்குகள் வெல்லும் ஜாலம், பூதப்பிசாசுகளை விலக்கும் ஜாலம், சொக்குத்தூள் ஜாலம், குறி சொல்லும் ஜாலம், இவை முதலியவற்றையெல்லாம் செய்யலாம்; இவைபோன்ற அற்புத ஜாலம் 2000 இதிலடங்கியிருக்கின்றன. விலை ரூபா 1.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.

நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0



## பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

## தனித்தனி ரப்பர் இங்கிலீஷ் எழுத்துப்பெட்டி.




இந்த ரப்பர் எழுத்துப் பெட்டி ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டியது, ஏனெனில் அச்சடிக்க முடியாத சில்லறை வேலைகளை இதனால் முடிக்கலாம். அதுவுமல்லாமல் கார்டுகளிலும், கவர்களின்பேரிலும், கடிதங்களின்பேரிலும் அச்சடிக்கவும், இன்னும் அநேக சிறிய வேலைகளுக்கும் இது வெகு அநுகூலமானது. 1-வது A. B. C. D. முதலிய எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் 3-எழுத்துக்களும், 1-செட் எண்களும் கூடிய 120 - எழுத்துக்கள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா 1.

2-வது A. B. C. D. முதலிய ஒவ்வொரு எழுத்திலும் 6 - எழுத்துக்களும் எண்களும் கூடிய 250 - எழுத்துக்கள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா 2—4—0

3-வது ஷை 300-எழுத்துக்கள் அடங்கியது விலை ரூபா 2—12—0

இவ்வெழுத்துப்பெட்டியுடன் பேட், சிராவணம், எழுத்துக்களை அடிக்கிக்கொள்ளக் கம்போஸ் ஸ்டிக் ஆகிய 3 சாமான்கள் அனுப்பப்படும்.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உடன்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிசாற்றதான

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

## காந்தசக்தி வைத்திய சாஸ்திரம்.
(தமிழ்ப் பதிப்பு)

இப்புஸ்தகமானது, ஔஷதப் பிரயோக மின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்கமடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் தீர்த்துக் கொள்ளக்கூடிய பலவழிகளையும் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பல வியாதிகளையும் காந்த சக்தினால் தீர்க்கும் மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



இதன் விலை ரூபா 1—0—0

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது, யாவரும் தெரிந்துகொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். விலை ரூபா 2—0—0



இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167,
மதராஸ்.

## புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சொறிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு, தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம்வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கவனிக்கும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரேதடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்
### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஓடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மாாக்கண்டருப்பு, நெய் இவைகளை அதிகமாகப் புசிக்கத் தள்ளக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவரவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

**பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால்சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5. ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தாபால்பெட்டி நெ. 167, மதராஸ்**

# நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளை கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவிவாரி வருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீக்கிக் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



# ஜி. கியூர் வெள்ளை என்னும்

## கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூலத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை. பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.

# கண்நோய் மருந்து.

இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களி னின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத் தோர்க்கும் உண்டாகும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4- மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

# காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலமுள்ள

# சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு, இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1-8-0.




விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

## சீதபேதி (டிசென்டரி) பவுடர்.



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமுங் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல்,மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ண பிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளா திருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோ லீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து இதற்கு நிகரான சுகந்த மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.




கிரயம் புட்டி 1-க்கு அணா 10. ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில்பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

**இரத்தினபுரி இரகசியம் 2 பாகம்** — 4 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றிய நீதிகள் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

**அமராவதி 2 பாகம்** — 4 0 0

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுமிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத்தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**மஞ்சள் அறையின் மர்மம்** — 1 8 0

இதுகாறும் அநேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதினைப் படிப்பதால் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும்நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும் குற்றத்தைக் கண்டுபிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம்நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**குலசேகரன்** — 1 12 0

இது, ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர்குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைபோல் அன்னியரால்வளர்க்கப்படுவதும்,பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் இவனெதிரிற்றோன்றி இவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவிசெய்வதும் இக்கதையில் மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.

**குணசுந்தரன்** — 0 12 0

கீழ்மக்கள் சகவாசத்தால் தீமையே உண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. இதில் கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்குகள் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

**தினகரசுந்தரி** — 1 0 0

இதில்,இக்கதாநாயகி ஆண்வேடந்தரித்துத் தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய தோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவது மிக்க வியப்பாயிருக்கும்.

**நிமித்தியக்குறி சாஸ்திரம்** — 0 2 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

**ஆனந்தஸிங் 2 0 0**

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்க ளனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதில் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்த ஸிங்கின் அதிசயபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடை யோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். 492-பக்கங்கள் கொண்டது; விலை ரூபா 2.

**கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை 0 5 0**

கலியாணத்தில் தாலிகட்டுவதைக்கூட மறந்துவிடுவதுண்டா என்று சந்தேகப்படவேண்டாம். சில மௌட்டிகமான ஜனங்களிடத்தில் மெய்யாகவே இச்சம்பவம் நடந்திருக்கின்றது. அதை அனுசரித்தே இக்கதை எழுதப்பட்டிருக்கின்றது. இதைப் படிக்கப் படிக்க அடங்காச் சிரிப்புண்டாகும்.

**அங்கதன் 0 4 0**

இச்சரித்திரம் இதிகாச ரத்நமாகிய இராமாயணத்தின்கண் இருப்பது; அறிவமிந்த மகவின் சுகுணங்களை இனிதெடுத்துக் காட்டவல்லது. இதில், அங்கதன் தூதுபோகுந் திறமும், எதிரியின் நயவஞ்சகப் பேச்சுக்கிணங்காமல் வந்த காரியத்திற் றிடமனதோடிருந்து, அவனது துர்ப்பலங்களை நிர்ப்பயமாய் எடுத்துரைக்குஞ் சாதுரியமும் படிப்பவர்க்குங் கேட்பவருக்கும் உற்சாகத்தையும் மனக்களிப்பையும் தரும்.

**சம்பந்தமூர்த்தி 0 7 0**

இப்புத்தகம் சகோதர நேசத்தைப்பற்றிப் பேசும் அருமையானநாவல். இதில், சம்பந்தமூர்த்தியென்னும் மூத்தவன் தன் அன்னையிடம் காட்டும் அன்பும், தன்மீது வீண்பழிசுமத்திய தன் தம்பியிடம் காட்டும்விசுவாசமும், கடைசியில் தன் அன்னையின் மனத்திருப்திக்காகத் தன் தம்பி செய்த கொலைக் குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவனை விடுவிக்கும் உதாரகுணமும் படிப்பவர்களுக்குப்பெரும் வியப்பை யுண்டாக்கும்.

**வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் 0 10 0**

இது, எட்டு மாதுசிரோமணிகளின் வீரச்செயலை விளக்குவது. இதில் அவர்கள் கற்போடு சுத்தவீரரான ஆடவரும் அஞ்சி பிரமிக்கத்தக்க வீரத்தன்மை காட்டுவதும், அவர்களின் புத்தி சாதுரியமும், பிராணனைத் துரும்பாய் மதிக்கும் தைரியமும் உற்சாகத்தை உண்டு பண்ணும்.

**ஸ்ரீ ராமாயண ஓடம் 0 3 0**

இந்த ஸ்ரீராமாயண ஓடம் எளிய நடையில்பாடி அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப்படித்து எளிதில் ஆறுகாண்டங்களின் சரித்திரங்களையும் நன்குணர்ந்து சந்தோஷிக்கலாம்.

**பகவத்கீதா சங்கிரகம் 0 2 0**

இது, பகவத்கீதை யென்னும் அரியநூலின் இரத்னச் சுருக்கம், தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ளது.



**பவளத்தீவு 2-பாகம் 3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிகக் களிப்பை யளிக்கும். விலை ரூபா 3.

**அற்புத நவநீத ரம்பை 1 0 0**

இதில், கதாநாயகி பருவகாலமடைந்து மணமின்றிச் சகல வித்தைகளிலும் புத்தி மீறின தன் தமையனை யழைத்துக்கொண்டு புரவியின்மீதேறி வனத்திற் சென்று வேட்டையாடி யிரவில் காவில் அவனுடன் துயில் செய்து பொழுதுவிடிந்தவுடன் விழித்தெழுந்து தமையனைக் காணாது பதறி அருகிலிருந்த வனங்களிற் புகுந்து அலைந்து தியங்குவது சோகரசமாயிருக்கும். பின்பு கேசரிமார்க்கம் பறந்து தனது தமையனை யெடுத்தேகிய பஞ்சமுக இராட்சதனை சம்மாரஞ்செய்வது பயங்கரமாயிருக்கும்.

**சண்டோபாக்கியானம் 0 6 0**

இது புதிதாகச் செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட ஓர் உண்மைச் சிவபக்தனுடைய புண்ணிய சரிதை. பிரமோத்தர காண்டத்திலிருக்கும் கிளைக் கதைகளுள் ஒன்றாகும். சிவ ஸ்தோத்திரப் பாடல்களும், சோபமும் பக்தியும் நிறைந்த செய்யுட்களும், நீதிச் செய்யுட்களும் சேர்க்கப்பட்டு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

**பீஷ்மவிஜயம் 0 10 0**

பீஷ்மர், ஒப்புயர்வற்ற வீரர், ஸத்திய ஸந்தர், பிதுர்பக்தி வாய்ந்தவர், மகா நீதிமான், இராஜதந்திர நிபுணர், கடவுட்பக்தி வாய்ந்தயோகி—இத்தகைய மகானுடைய குணங்களெல்லாம் இச்சரித்திரத்தில் வெகு அழகாகச் சிறந்த நடையில் விளக்கியுள்ளன.

**தசாவதார மகிமை 0 6 0**

உலகத்தில் தருமங்குறைந்து, அதருமம் தலை யெடுக்கும்போது, சாதுஜனங்களை ரக்ஷிக்கவும், அசாதுக்களை சிக்ஷிக்கவும் நான் அவதாரஞ் செய்கிறேன் என்று பகவான் கீதையில் கூறியபடி, தாம் எடுத்தருளிய அவதாரங்கள் பலவற்றிலும் சிறந்துள்ள "தசாவதாரங்களின் மகிமை" கள் செந்தமிழ் நடையில் விளக்கமாக இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

**ஞானரத்தினம் 0 4 0**

இது, வேதாந்தஞானத்தைப்பற்றிய சில சிந்தனைக்கட்டுரைகள் அடங்கியநூல்.

**கோமளவல்லி 0 8 0**

இதில், கோமளவல்லி அம்மாளுக்கும் சத்தியவல்லி அம்மாளுக்கும் நடந்த சக்களத்திப் போராட்டம் லீலாவதிக்கும் சுலோசனாவுக்கும் ஏற்பட்ட அக்கா தங்கை சக்களத்திப் போராட்டத்திற்கு அதிகமாயிருக்கும். கோமளவல்லியால் துரத்தப்பட்ட உத்தமி சத்தியவல்லி காளியம்மன் ஆலயத்திலிருந்த ராக்ஷசன் பிராணனை யடியோடு வாங்குவதும் இன்னும் அனேக சாமர்த்தியங்களும் விளங்கும்.

**கனகரத்தினம் 0 8 0**

இஃதோரினிய நாவல். இதற்கொப்பான நாவல் இதுவரையில் வெளிவந்திராதென்பது திண்ணம். இதில் சோகரசம் இத்தன்மைத்தென நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

**இந்திராபாய்** 2 8 0

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலியயாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன்சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துகளிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டுபிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையை யுண்டாக்கும்.

**தபால் கொள்ளைக்காரர்கள்** 0 14 0

இந்நாவலில் கல்வியும், சூக்குமபுத்தியும் அதோடு செல்வமுமுடையவன் உள்ளுக்குள்ளாகவேயிருந்து தபாலில்வரும் விலையுயர்ந்த பொருள்களைக் களவாடுவது அதியாச்சரியமாக விருக்கும். துப்பறிபவன் பன்முறை பிராணாபத்தில் சிக்கி, அக் களவு நடக்கும் இரகசியவழியையும், கொலையைப்பற்றிய உளவையும் அறிந்து,கடைசியில் அக்கள்ளக்கூட்டத்தைப் பிடிப்பது அதிசயத்தை யுண்டாக்கும்.

**லோகநாயகி** 1 0 0

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களுக்குத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்பட்டு வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும்.

**மதனாம்பாள் 2-பாகம்** 3 0 0

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

**மதிசூதனன்** 0 10 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில், படிக்கப் படிக்கப் பரமானந்தத்தைத் தரும் விகடங்கள் குருசிஷ்ய தர்க்கபாவனையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**ஜீவகன்** 1 0 0

இது, பஞ்சகாவியங்களில் முதன்மைபெற்றதாகிய சீவகசிந்தாமணிக் கதையாம். எல்லாச் சரித்திரங்களினும் ஜீவகன் சரித்திரம் பெயர் பெற்றதென்பதைக் கற்றோர் யாவருமுணர்வர். ஆயினும், சிந்தாமணி பழைய செய்யுட் காவியமாகவும், கடின வுரையோடுகூடியதாகவு மிருப்பதால் அதிலுள்ள இனியகதையை யாவரும் படித்துணர்தல் அரிதாயிருந்து வந்தது. அக்குறை நீங்கவே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

ஓம்
பரப்பிரஹ்மணேநமஃ

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(*ALL RIGHTS RESERVED.*)

| தொகுதி 13 | பிரபவஞு ஆடிமீ கஉ<br>1927ஞு ஜூலைமீ 16உ | பகுதி 1 |
|---|---|---|

187485

## கடவுள் வணக்கம்.

பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மை காட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றோய்ந்த
பாவியேன் பரிசு காட்டித்
தாரான மாய்நிற்க நிற்சிந்தை காட்டிச்
சதாகால நிஷ்டை யெனவே
சகசநிலை காட்டினை சுகாதீத நிலையந்
தனைக்காட்ட நான் செல்லுமோ
காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றி மழை பொழிதல் போற்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கம்மியா னந்த வெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவு முகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே. (1)

---

மின்னை யன்னபொய் வாழ்க்கையே நிலையென மெய்யாம்
உன்னை நான்மறந் தெவ்வண முய்வண முரையாய்
முன்னை வல்வினை வேரற முடித்தென்று முடியாத்
தன்னைத் தன்னடி யார்க்கருள் புரிந்திடுந் தக்கோய். (2)

---

எம்ப ராபர வெம்முயிர்த் துணைவவென் றிறைஞ்சும்
உம்ப ரிம்பர்க்கு முனக்கணே நடிக்கின்ற யுன்றன்
அம்பொன் மாமலர்ப் பதத்தையே துணையென வடிமை
நம்பி னேனினிப் புரப்பதெக் காலமோ நவிலாய். (3)

---

## அரும்பொருள் விளக்கம்.

1. 'பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற பரவெளி' என்றது பரமாகாய வெளியில் அளவுகடந்த அண்டங்கள் இருத்தலை நோக்கியாம். இதனால் பூதாண்டம், தேவாண்டம், மகாண்டம், அகிலாண்டம், சுவாண்டம், பகிரண்டம், பத்மாண்டம் முதலிய அண்டங்கள் அடங்கினமை காண்க. இவ்வாறு கோடானுகோடி யண்டங்களைத் தன்னுள் அடக்கிவைத்துக் கொண்டிருந்தாலும் அந்தப் பரவெளி நிலையற்றதெனவும், தத்துவங்களின் காரியமாய் சடமெனவும் ஆசிரியர் தெரிந்துகொண்டமையின் 'பரவெளியின் உண்மைகாட்டி' என்றார். மனம் இந்த அசத்தான காரியங்களிலேயே ஊன்றி வியாபித்து வீணே யுழல்வதை நோக்கி, 'பற்று மனவெளி காட்டி' என்றும், அம் மனம் போனவழியே அறிவை நுழைத்து அலையும் நிலைமையை விளக்கினமையின் 'மனவெளியினிற் றோய்ந்த பாவியேன் பரிசுகாட்டி' என்றும், மேற் சொல்லியவை யனைத்திலும் சிறிதுங் கவலை வைக்காமல் மனத்தை ஒன்றுபடுத்துந் தன்மையைக் குறிப்பித்தமையின் 'தாராளமாய் நிற்க' என்றும், அங்ஙனம் ஒன்றுபட்ட மனமானது எக்காலத்தும் நியானத்துடனே நிற்கும் நிலையில் வைத்தமையின் 'சதாகால நிஷ்டையெனவே சகசநிலை காட்டினை' என்றும், இத்தன்மையான சோபானநிலைகள் பரோபகாரமாகக் கூட்டிவைத்தும், மேலான சுகம் உதிக்கும் சுத்தாத்துவித அனுபவப் பேற்றினைக் கூட்டிவைப்ப தென்றோ வென்பார் 'சுகாதீதநிலையந்தனைக்காட்ட நாள் செல்லுமோ' என்றுங் கூறினார்.

காரார வெண்ணரு மனந்த கோடிகணின்று = எண்ணரும் அனந்த கோடிகள் (ஆகிய) கார் (மேகங்கள்) ஆரநின்று (நிறைந்து நின்று).

கால்வீசி = காற்றுவீசி.

கம்மி = மூடிக்கொண்டு.

சோராது = இடையறாது.

2. அடியார்களுக்கு அவர்களுடைய சென்மாந்தர வினைகளை ஒழித்துக் கிருபைபுரியும்படியான இறைவனே! மின்னலைப்போன்று நிலையற்ற வாழ்வை நிலையானதென்று மயங்கி, சத்தாகிய உன்னை மறந்து நான் உஜ்ஜீவிப்ப தெப்படி? என்று இப்பாடலில் வருந்துகிறார்.

3. எமது சுவாமியே! உன்னை வணங்கும் விண்ணுலகத்தார்க்கும் மண்ணுலகத்தார்க்கும் இரங்கி அவர்களுடைய மனத்தினிடத்தே நடனஞ் செய்கின்றாய்; உனது திருவடியையே நம்பியுள்ள அடியேனை ரக்ஷித்தருள்வது எக்காலம்? என்று இச்செய்யுளில் வேண்டுகிறார்.

புரத்தல்-ரக்ஷித்தல்.

*

---

**சுவர்ணாம்பாள்** 0 12 0

இதில், துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும்.

**பூங்கோதை** 0 10 0

இதில், பூங்கோதையின் கற்புள்ள நடைக்கையும், பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்திபுகட்டும். அக்கிரமஸ்தரைக் கடவுள் எப்படியும் தண்டிக்கிறார் என்பதும், உத்தமர்க்கு ஆச்சரியமான விதமாய் நல்ல க்ஷேமத்தை யளிக்கிறார் என்பதும் இக்கதையால் நன்கு நிரூபிக்கப் படுகின்றன.

**மின்சாரமாயவன்** 1 8 0

இதில், எலக்டிரிக் கண்ணன் பெரியண்ணன், ஸார்ஜெண்ட் கமலநாதன் இவர்களுடையபெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், எலக்டிரிக்கண்ணன் பிச்சாண்டிபுரம் பிரயாணம்போவது, கமலநாதன் அதிக சாமர்த்தியசாலியாயிருந்தும் எலக்டிரிக் கண்ணனுக்கு ஐக்கியப்படல், ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்னபுரியில் உலாவுதல், முதலியன வேடிக்கையான ஆச்சரியமாயிருக்கும்.

**விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக்கொலை** 1 6 0

இக் கதையில் மூன்று அதிசயக் கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைதுசெய்யப்படுகிறான். கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும், புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமார்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப் படுவதும், நிரபராதி விடுவிக்கப்படுவதும் மிக்க அதிசயத்தை விளைவிக்கும்.

**பத்மாவனி** 0 14 0

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவ்வனைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும்.

**மதனபூஷணம்** 1 0 0

இதில் குற்றவாளி, உயிரோடிருப்பவனை இறந்துவிட்டவனாகவும், இறந்துபோனவனை உயிரோடிருப்பவனாகவும், படித்தோர் நம்பும்படிசெய்வது மிக்க வியப்பை யுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது.

**மலையாள பகவதி** 1 0 0

இது, அடங்கா நகப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெகஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின்புளுகர், முதலிய சண்டப்பிரசண்டயுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திடீர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத்தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும்.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

**ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும் 1 12 0**

இதில், இம்மகானுடைய அற்புத சரித்திரம், ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, மூமூட்சுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற் கிடையூறுகள், பெண்ணாசை பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர் லக்ஷணம், சந்நியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரிய போதனை, சித்திகள், கர்மநியதி முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகாநந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**கைவல்ய நவநீத வசனம் 1 8 0**

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது, எவரும் எளிதில் வாசித்துணரும்படி எம்மால் வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்திமார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

**குசேலோபாக்கியான வசனம் 1 0 0**

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின்சிறப்பு, அவந்திக்கடுத்த மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலரை அவர் … வி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணு தோத்திரஞ் செ… முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

**மெய்க்காதல் 0 8 0**

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில் நட்பின் தன்மையும், தீச்செயலால் வருங் கேடுகளும், குணமுள்ள ஸ்திரீகள் கற்பைக்காப்பதும் இன்னும் பல விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. கதாநாயகி தன் மணப்பந்தலிலிருந்து நள்ளிருளில் வெளிச்சென்று போய்க்கொண்டிருக்கும்போது அவள் புத்தி சாதுர்யத்தினால் ஒரு தூர்த்தனை ஏமாற்றித் தன் கற்பைக்காத்துக் கொள்ளுதலும், அவளுக்குக் கலியாணமாகின்றதும் மிகவும் வியப்பாயிருக்கும்.

**கற்கோட்டை 2 0 0**

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். நீதியைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**


# ஆனந்தபோதினி

பிரபவ௵

ஆடி௴ ௧௳


## நம் போதினியின் 13-வது ஆண்டு.

**எ**ங்கும் நிறைந்த பரஞ்சோதியாகிய முழுமுதற் கடவுளின் கருணையால் நடைபெற்று நாடோறும் செழிப்புற்று வளர்ந்தோங்கிவரும் நம் ஆனந்தபோதினிக்கு இந்த ஆடி௴ 1௳ 13-வது ஆண்டு தொடங்குகிறது. இப்பத்திரிகையானது தோன்றிய நாள் தொட்டு மதபேதம், வகுப்புபேதம் முதலியன இன்றிப் பொது நோக்கத்துடன் எல்லோருக்கும் பயன்படத்தக்க பற்பல கட்டுரைகளைக் கொண்டு வெளிவருவதனாலேயே, இதனைப் பலரும் விரும்பி வருடந்தோறும் இதற்குப் பல ஆயிரக்கணக்கான சந்தாதாரர்களாகச் சேர்ந்து இப்போது இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்களிருக்கின்றனர். சென்ற ஆண்டில் இது, தேசபக்தர் சரித்திரங்களுடனும், தேசநலத்தை விருத்தி செய்யத்தக்க பல கட்டுரைகளுடனும், சைவம், வைஷ்ணவம், வேதாந்தம், பொது நீதி, கைத்தொழில் விவசாயம், வியாபாரம், வைத்தியம், உலக அதிசயங்கள், மாதர்நீதி, மாணவர் போதனை, கல்விவிருத்தி, வர்த்தமானங்கள் முதலிய பலவற்றைப்பற்றிய வியாசங்களுடனும், பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிகளையும் விளக்கும் சித்திரப்படங்களுடனும், அதற்கு முந்தின வருடங்களினும் அதிகமாக 48 பக்கங்களுடனும் வெளிவந்தபடியால் தமிழர்க்கு இதன்பால் முன்னினும் அதிக அபிமான மேற்பட்டு இதற்கு அநேகம் புதிய சந்தாதாரர்கள் சேர்ந்ததோடு மேலும் மேலும் பலரைச் சேர்த்துக்கொண்டும் வருகிறார்கள். பலர் ஜீவிய சந்தாதாரர்களாகவும் சேர்ந்துள்ளார்கள்; அநேகம் கல்விமான்களாகிய அறிஞர்கள் உயர்ந்த பல கட்டுரைகளை யெழுதியும் உதவிபுரிந்து வருகின்றார்கள். இவ்வாறு நண்பர்கள் பலவகையிலும் நம் போதினி மீது அபிமானஞ்செலுத்தி வருவதால் மற்ற வருடங்களைக் காட்டினும் இவ்வருடத்தில் சந்தாதாரரின் தொகை அதிகரித்திருக்கின்

றது; மேலும் சந்தாதாரர்கள் சேர்ந்தவண்ணமாகவே யிருப்பதால் இன்னும் அதிகரிக்கக்கூடும். இங்ஙனம் சந்தாதாரர்கள் போதினிமீதன்புவைத்து, "மேல்நாட்டிலுள்ள பத்திரிகைகளைப் போல் அதிகரித்த சந்தாதாரர்கள் உள்ள பத்திரிகைகள் நம் தமிழ் நாட்டில் இல்லை" என்று பலர் கூறும் ஒரு பெருங்குறை நிவர்த்தியாகும்படி இதன் சந்தாதாரரின் எண்ணிக்கை அதிகரிக்கச் செய்துவருவது பற்றி நாம் அளவில்லா ஆனந்த மெய்துவதோடு அவர்களுக்கு என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மேலும் நாம் சென்ற வருடத்தில், பத்திரிகை வேண்டியவர்கள் சந்தாத்தொகையை முன்னரே அனுப்பிவிட வேண்டுமென்றும், வேண்டாதவர்கள் அவ்விவரத்தைத் தெரிவித்துவிடவேண்டுமென்றும், இவ்விரண்டிலொன்றையும் செய்யாதவர்க்கு வி. பி. யனுப்பப்படுமென்றும் தெரிவித்தபடி பெரும்பான்மையோர் சந்தாத் தொகையை முன்னரே அனுப்பிவிட்டார்கள்; சிறு பான்மையோர் பத்திரிகை வேண்டாமென்று தெரிவித்துவிட்டார்கள்; அவ்வாறு தெரிவிக்காமலும், பணமனுப்பாமலு மிருந்தவர்களுக்கு வி. பி. யனுப்பினோம். அவர்களிற் பெரும் பான்மையோர் அபிமானத்துடன் வி. பி. யைப் பெற்றுக்கொண்டார்கள்; சிலர் மட்டும் வி. பி. யைத் திருப்பி நமக்குச் சொற்ப நஷ்டத்தை உண்டாக்கினார்கள். இவ்வாறு திருப்பியவர்களும், பத்திரிகை வேண்டாமென்று தெரிவித்தவர்களும் மிகக்குறைந்த சிலரேயாதலாலும், பணம் செலுத்தியவர்களும், வி. பி. யைப் பெற்றுக்கொண்டவர்களும் மிகப் பலராதலாலும், மேலும் மேலும் சந்தாதாரர்கள் சேர்ந்துகொண்டேயிருப்பதாலும் விலகிக்கொண்ட சந்தாதாரர்களைப்பற்றி நம் பத்திரிகைக்குக் குறைவுநேர்ந்ததாகக் கருத இடமில்லை. ஆனால், வேண்டாமென்ற விவரத்தை முன்னரே தெரிவித்துவிடாமல் வி. பி. வந்தபின் திருப்பி வீணே நமக்குச் சிறிது நஷ்டத்தை உண்டாக்கியவர்களின் மனப்போக்கைப்பற்றி மாத்திரம் வியப்புறுகிறோம். முன்பணமனுப்பியும், வி. பி. யைப்பெற்றும் நம் போதினியை ஆதரித்த நண்பர்கள் செய்த நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

நமக்கு வீண் நஷ்டமுண்டாகாதபடி பத்திரிகை வேண்டாமென்ற விவரத்தை முன்னரே தெரிவித்துவிட்ட நண்பர்களுக்கும் நன்றி கூறுகிறோம். ஆனால் அவர்களிற் சிலர் சந்தா நம்பரைத் தெரிவிக்காமல் எழுதி விட்டதால் ஒவ்வொருவர் விலாசத்தையும்



தேடிக்காணுதலில் மிகுந்த நேரப்போக்கும், சிரமமும் ஏற்பட்டன. இவர்கள் சந்தா நம்பரைக் குறிக்காமல் இவ்வாறு வீண் சிரமத்தை உண்டாக்கியதற்கு மட்டும் விசனிக்கிறோம்.

பத்திரிகையை நிறுத்திக்கொண்டவர்களில் சிலர், பார்ப்பனரைப் பழித்தற்கு இடந்தரவில்லையென்றும், சிலர் தங்களுக்கு விரோதமான மதத்தைப் பழிக்க இடந்தரவில்லையென்றும், சிலர் தமக்கு வேண்டாதாரை நிந்திக்க இடந்தரவில்லையென்றும், சிலர் தங்கள் வியாசங்களைப் பிரசுரிக்கவில்லையென்றும் காரணங் கூறி நிறுத்திக்கொண்டார்கள். நம் போதினி பொது நோக்கமுடையதாதலின் மதபேதம், வகுப்பு பேதங்களில் தலையிடுதல் முடியாது. வியாசங்கள் மாதந்தோறும் நூற்றுக்கணக்காக வருவதாலும், அவற்றுள் நல்லனவும், பிழைபட்டனவும் கலந்திருப்பதாலும், பத்திரிகையில் இடமுள்ளவரையில் நல்லவற்றைப் பிரசுரித்து வருவோம். மேலும் பத்திரிகையின் நிரந்தர வியாசக்காரர்கள் சிலருண்டு; அவர்களுடைய வியாசங்கட்குரிய இடம் தவிர மீதியிடமே இதர வியாசங்கட்குரியதாம். இக்காரணங்களால் சில கட்டுரைகள் வெளிவரக் காலம் நீட்டித்தலாகும்; சில நின்றுவிடுதலுங்கூடும். ஆதலின், இக்காரணங்களுக்காக நண்பர்கள் பத்திரிகையை நிறுத்திக்கொள்வது பொருத்தமாகாது. மீண்டும் அவர்கள் சந்தாதாரராகச் சேர்ந்துகொள்வதே நலமாகுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

முந்தின வருடங்களைப் போல் இவ்வருடத்தில் வி. பி. அதிகமாகத் திரும்பாததாலும், பத்திரிகையை நிறுத்திக்கொண்டவர் மிகச் சிலரேயாதலாலும், பத்திரிகையைப் பெற்றுக்கொண்டவரும், புதிய சந்தாதாரராகச் சேர்வோரும் அதிகரித்து வருவதாலும் தமிழறிந்த அன்பர்கள் நம் போதினிமீது மிகுந்த அபிமானம் வைத்திருக்கிறார்களென்பது நன்கு விளங்குகின்றது. இவர்கள் இவ்வாறு மேலும் மேலும் நம் பத்திரிகையை ஆதரித்து வருவதால் இன்னும் இதனை நல்ல விதத்தில் எல்லோருக்கும் திருப்தியுண்டாகுமாறு நடத்தவேண்டுமென்னும் பேரவா நமக்கதிகரித்து வருகிறது. இன்னும் நம் பத்திரிகையை அதிகப் பக்கங்களுடனும், இதுவரையிலும் வெளிவராத நூதன விஷயங்களுடனும், முகப்புப் படங்களுடனும் நடத்தவும், நம் ஆபீசுக்கென ரூபாய் இருபத்தையாயிரம் செலவிட்டுப் பெரிய கட்டிடமொன்று கட்டவும் உத்தே

சித்திருக்கிறோம். இப்போது சந்தாதாரராகச் சேர்ந்திருப்போரும், இனிச் சேர்வோரும் தங்களோடு மற்றொரு சந்தாதாரரையும் சேர்த்து விடுவார்களேயானால் இந்நோக்கம் எளிதில் நிறைவேறிவிடும். இவ்வாறு சந்தாதாரர்களைச் சேர்ப்பது நண்பர்களுக்கு மிகவும் சுலபமான காரியம்; அதனால் நமக்கேற்படும் நன்மையோ அளவிடற்கரியது. ஆதலின், எல்லா நண்பர்களும் போதினி மீதும் நம்மீதும் அன்பு செலுத்தி நம் எண்ணங்கள் பூர்த்திபெறுமாறு செய்து பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அன்பர்மனமே கோயிலாகக் கொண்டருளும் ஆதிமூர்த்தியாகிய இறைவன் நம் மனைவர்க்கும் நலந்தருவானாக.

ஓம் தத் ஸத்.

## இந்தியாவும் ஆரம்பக் கல்வியும்.

(ஆரம்பக்கல்வியாவது—சிறுவர்க்கு 5-வயதிலிருந்து சுமார் 15-வயது வரை போதிக்கப்படுவதாம்.)

‘ எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் ’

‘ எண்ணென்பவேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு ’

என்று தமிழ் மூதாட்டியாகிய ஔவைப்பிராட்டியாரும், பெருநாவலரும் கூறியுள்ளார்களாகையால், மனிதர்களாய்ப் பிறந்த நமக்குக் கல்வி இன்றியமையாததென்பது சொல்லாமலே விளங்கும்.

இப்போது இந்தியநாட்டின் கல்வி நிலையைக் குறித்து ஆய்ந்து, இந்நாடு கல்வித்துறையில் எவ்வளவுதூரம் முன்னேற்றமடைந்திருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டிய தவசியம். பண்டைக் காலத்தில் இந்தியா மற்றத்துறைகளில் விருத்தியடைந்திருந்ததைப் போல் கல்வித்துறையிலும் விருத்தியடைந்திருந்தது என்பதற்கு அநேக சான்றுகள் கிடைக்காமல் போகவில்லை. பண்டைக்காலத்தைப்பற்றிப் பன்னிப் பன்னிப் பேசிக்கொண்டிருத்தலில் பயனில்லை. போனதுபோக, இனி நடக்கவேண்டியவைகளைப் பற்றிக் கவனிப்பதுதான் அறிவுடைய மக்களால் விரும்பப்படும் செயலாகும்.



ஜனங்கள் குறைந்தது எழுதவும் படிக்கவுமாவது தெரிந்துகொண்டிருக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால் அதனால் எண்ணிறந்த கஷ்டங்கள் நேரிடுகின்றனவென்பது கண்கூடு. இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 33-கோடிக்குமேல் இருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ஜனத்தொகையைக்கொண்ட நம் இந்தியநாட்டில் ஆரம்பக்கல்வியின் நிலை எங்ஙனம் இருக்கிறது? மற்ற நாடுகளில் அது எங்ஙனம் இருக்கிறது? என்று கவனிக்குமிடத்து நம் நாடு அதில் மிகத் தாழ்ந்த நிலையிலிருக்கிறதென்பது விளங்குகிறது; இதர நாடுகளில் கல்வியானது விருத்தியடைந்தும், நம் நாட்டில் மாத்திரம் விருத்தியடையாமலும் இருக்கிறதற்கு முக்கிய காரணங்கள் என்னவென்று கவனிக்க வேண்டும்.

அங்ஙனம் கவனித்தால் விஷயங்கள் தெற்றென விளங்கும். 1921-ம் வருட இந்திய ஜனக்கணக்கின்படி பர்மா ஒழிந்த மற்றப் பிரிட்டிஷ் மாகாணங்களில் நூற்றுக்குச் சுமார் 7-பேர் கல்வி வாசனையுடன் கூடியவர்களாய் இருக்கிறார்கள். இத்தகைய நிலை பெரிதும் இரங்கத்தக்கதாம். இந்தியாவிலுள்ள சில சுதேச சமஸ்தானங்களுடன் பிரிட்டிஷ் இந்தியாவின் கல்வி நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், அது அவைகளுக்கு மிகக் கீழ்ப்பட்டிருக்கிறது. அது பின்வரும் அட்டவணையால் தெரியவரும்:—

| மாகாணம் அல்லது சமஸ்தானம் | கல்வி யறிவுள்ளார் நூற்றுக்கு |
|---|---|
| பர்மா தவிர மற்ற பிரிட்டிஷ் இந்தியா ... | சுமார் 7 |
| பரோடா .... | ,, 14 |
| கொச்சி ... | ,, 22 |
| திருவாங்கூர் ... | ,, 28 |
| பர்மா ... | ,, 31 |

இதன்படி இந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உட்பட்ட பரோடா, கொச்சி, திருவாங்கூர் ஆகிய இச்சமஸ்தானங்களின் கல்வி பிரிட்டிஷ் இந்தியாவின் கல்வி நிலையைக்காட்டிலும் அதிகமாக விருத்தியடைந்திருக்கிறதற்காக நாம் மகிழ்ச்சியே கொள்ள வேண்டும்.

இங்ஙனம் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ளவர்களின் கல்விக் குறைவை நிவர்த்திப்பதற்காக ஆங்காங்கு ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டும். 1919-ம் வருடச் சீர்திருத்தச்சட்டப்படி ஜனப் பிரதிநிதிகளாகிய மந்திரிகளுக்கு அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்பதை எவரு மறிவர். இத்தகைய மந்திரிகள் அறிவாற்றல்களில் தேர்ந்தவர்களாயும், ஜனங்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களாயு மிருத்தல்வேண்டும். இத்தகைய மந்திரி பதவிக்கு வரக்கூடிய சட்டசபை மெம்பர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஜனங்களுடையதா யிருக்கின்றது; அத்தகைய மனிதர் அறிவிற் சிறந்தவர்களாகவே யிருத்தல் வேண்டும்; அங்ஙனமாதற்கு ஆரம்பக்கல்வியே அடிப்படையாம்.

இத்தகைய வாக்காளர்கள் தங்களுக்குள்ள வாக்குக்களைச் சரியான வழியில் உபயோகிக்க அவர்களுக்குப் போதுமான ஆரம்பக் கல்வியை முதல்படியாகப் புகட்டவேண்டியது அத்தியாவசியமாகும்.

இந்தியாவிலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் கிராமங்களில் வசிக்கிறார்கள் என்ற விஷயம் அனைவர்க்கும் தெரிந்த தொன்றாம். இந்திய பொருளாதாரத்துறையில் விருத்தி யடைய வேண்டுமானால் அந்தக் கிராமவாசிகள் விருத்தியடையவேண்டும்; அதற்கு ஆரம்பக்கல்வியே இன்றியமையாததாம். கல்வி ஒன்றைக் கொண்டுதான் மானிடர்கள் முன்னேற்றம் அடையக்கூடும். மேல் நாட்டாருடைய முன்னேற்றத்திற்குக் காரணம் அவர்களிடம் ஏற்பட்டுள்ள கல்வியேயாம்.

இன்னும் இத்தகைய அரசியல் விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் முன்னேற்றம் அடைவதற்கு மாத்திரம் மானிடர்களுக்குக் கல்வி அவசியம் என்று எண்ணிவிடக்கூடாது. ஜனங்களின் சன்மார்க்க வாழ்க்கைக்கும் கல்வி இன்றியமையாததா யிருக்கிறது. இக்காலத்தில் பெரும்பாலாரிடத்துச் சன்மார்க்கக் கல்வி என்பது ஊமையன் கண்ட கனவை ஒத்திருக்கின்றது. இப்போது பள்ளிக்கூடங்களில் சன்மார்க்கபோதனை அவ்வளவாகக் கிடையாதென்றே கூறிவிடலாம். அங்ஙனம் இல்லாமல் இருப்பதால் அவர்கள் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளக்கூடாமல் தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்ற பிடிவாதக் கொள்கைகளில் புகுந்துழன்று திரிகின்றனர். பண்டைக்காலத்தில் ஆசிரியர்களால்



கதைகளின் மூலமாகவும் கீர்த்தனங்கள் மூலமாகவும் பிரார்த்தனைகள் மூலமாகவும் பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேயே நற்போதங்கள் போதிக்கப்பட்டு வந்தன. அப்போதனைகள் அவர்களுடைய மனத்தில் பசுமரத்தாணியைப் போன்று பதிந்து அவர்களுடைய பிற்கால வாழ்க்கையையும் தூய்மைப்படுத்தி வந்தன.

நம்முடைய முன்னோர்கள் 'கடவுளே மனிதனாய் இருக்கிறான், மனிதனே கடவுளாய் இருக்கிறான். நாம் அனைவரும் பிறப்பு இறப்பு இல்லாத ஒரு பரம்பொருளின் குழந்தைகள்' என்ற உண்மையை உலகத்தினருக்கு அறிவித்தவர்கள். அத்தகைய பெரியார்களுடைய கால்வழியில் வந்தவர்களாகிய நாம் தன்னம்பிக்கையையும், தீரத்தையும், சுய மரியாதையையும் இழந்துவிட்டுக் கோழைகளாய் இருக்கிறோம். அதற்குக் காரணம் கல்வியும் சன்மார்க்க போதனையும் இல்லாமல் போனதேயாகும்.

மேற்கூறிய கெடுதல்களையெல்லாம் நீக்கக்கூடியது சர்வமக்களுக்கும் கல்வி கற்பிப்பதேயாகும். அக்கல்வி நம் தேசத்திற்குத் தக்கதாய் இருக்கவேண்டும். அப்படிக் கல்வி கற்பித்தால்தான் நம்முடைய மக்கள் உறக்கத்தினின்றும் விழித்தெழுந்து நீண்டகாலம் வரை சன்மார்க்க வாழ்க்கையைக்கொள்ளச் சாத்தியம் ஏற்படும்.

மேல் நாடுகளில் அரசியல் முன்னேற்றத்துடன்கூட ஆரம்பக் கல்வித்துறை முன்னேற்றமும் சேர்ந்தாற்போல் விருத்தியாகியிருக்கிறது. ஜப்பானின் ஜனத்தொகையில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் போய்ப் படிப்பவர்களின் தொகை, நூற்றுக்குச் சுமார் 15-வீதம் இருக்கின்றது. ஜப்பானில் பள்ளிக்கூடத்தில் போய்ப் படிக்கும் வயதை அடைந்த நூறு பிள்ளைகளில் சுமார் 99-பேர் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று படித்து வருகிறார்கள். இங்கிலாந்து வேல்ஸ் ஆகிய இம்மாகாணங்களில் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்குப் பதினைந்துபேர் வீதம் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படித்து வருகிறார்கள். இந்தியாவிலோவெனில் 1924-ம் வருஷத்தில், ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்றுபேர் வீதம்தான் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் போய்ப் படித்துவந்தார்கள். இதைக்கொண்டு கல்வித்துறையில் நம் இந்தியாதேசமானது ஜப்பான் இங்கிலாந்து ஆகிய இந்நாடுகளுக்கு ஐந்து பங்குக்குமேல் தாழ்ந்திருக்கிறதென்பது ஐயமற விளங்குகிறது.

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஏற்படுவதற்குமுன் நம் நாட்

டின் அநேக பகுதிகளில் கல்வி விருத்தியடைந்திருந்ததற்கு அநேக சான்றுகள் கிடைக்கின்றன. 1815-ம் வருட ஜனக் கணக்கைக் கவனித்தால் பையன்களில் நூற்றுக்கு 30-பேர் வீதம் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து கல்வி பயின்றார்கள் என்பது தெரியவருகின்றது. பத்தொன்பதாவது இருபதாவது நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கல்வித்துறை மாறுதல்களினாலும், காலப்போக்குக் காரணமாகவும் கல்வியின் அபிவிருத்தி குறைவடைந்திருக்கிறது. மேற்கூறியபடி குறைந்த அளவில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படித்து வெளிவருகிறவர்களுங் கூட சிறிதுகாலங் கழித்துத் தாங்கள் கற்ற கல்வியை அடியோடு மறந்தவராகின்றனர். காரணம் அவர்களைச் சுற்றியுள்ளவர்கள் கல்வி வாசனை அற்றவர்களாயிருப்பதேயாகும்.

1919-ம் வருட சட்டசபை மூலமாய் மந்திரிகள் ஆரம்பக் கல்வியின் விருத்திக்காக அநேக காரியங்களைச் செய்யச் சந்தர்ப்பங்கள் வாய்த்திருந்தன. சட்டசபை அங்கத்தினர்களும் ஜனங்களிடை குடிகொண்டுள்ள அறியாமையை ஒழிக்கப் பாடுபட்டுள்ளார்கள்; எனினும் மந்திரிகள் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்கள் முழுவதையும் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாமல் சிறிது காட்டி விட்டுவிட்டனர். இது திருப்திதரக்கூடியதாயில்லை. இனியேனும் மந்திரிகள் தங்களுக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு கல்வித்துறையில் அதிகமான விருத்தியை யுண்டாக்குவார்களென்று நம்புகிறோம்.

பம்பாய், சென்னை, மத்தியமாகாணம் ஆகிய இம்மூன்று மாகாணங்களிலும் ஜனத்தொகையில் நூற்றுக்குச் சுமார் 20, 17, 9 பேர் வீதம் நம்மவர் பள்ளிக்கூடங்களில் 1923-ம் வருஷத்தில் படித்து வந்தார்கள். 1924-ம் வருடத்தில் அவர்களின் தொகை சுமார் 20; 19; 9-க்கு எட்டியது. இதைக்கொண்டு இந்தியாவில் முன்னேற்றமடைந்த மாகாணங்களிலும் கல்வி அபிவிருத்தி மெதுவாக நடைபெறுகிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். சென்னை மாகாணம் கல்வித்துறையில் விருத்தியாவதுபோல மற்ற மாகாணங்களும் விருத்தியானால் இன்னும் நாற்பதுவருடகாலத்தில் இந்தியாவும் கல்வித்துறையில் மற்ற மேல்நாடுகளுக்குச் சமமாக வந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை இராஜதானியைச்சேர்ந்த முனிசிபாலிட்டிகளும், ஜில்லாப்போர்டு, தாலுகாபோர்டு ஆகிய ஸ்தல ஸ்தாபனங்களும் ஆரம்



பக்கல்வியை விருத்திசெய்வதற்காக உழைத்து வருகின்றனவெனினும் அவைகளுடைய உழைப்பு போதுமான அளவைக்கொண்டதாயில்லை. இனியேனும் அவைகள் ஆரம்பக் கல்வி விஷயத்தில் இன்னு மதிகமான சிரத்தை செலுத்திப் பிள்ளைகள் அனைவரும் கல்வி வாசனையைப் பெறும்படி செய்தல் வேண்டும். ஆரம்பக் கல்வியைக் கட்டாயப்படுத்திவிடவேண்டும். சில முனிசிபாலிட்டிகளும் ஸ்தலஸ்தாபனங்களும் அங்ஙனம் செய்திருக்கின்றன. அவர்களை நாம் மிகக் கொண்டாடுகிறோம்.

நமது சென்னைநகரைச்சேர்ந்த முனிசிபாலிட்டியாரும் ஆரம்பக்கல்வி விஷயமாய்ப் பெரிதும் உழைக்க ஆரம்பித்துள்ளனர். அநேக பேட்டைகளில் கட்டாயப் படிப்பையும் அமுலுக்குக் கொண்டுவந்துள்ளார்கள். இன்னும் அவ்விஷயத்தில் அவர்கள் தீவிரமாய் உழைக்கவேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

ஆரம்பக்கல்வியை விருத்தியாக்க நியமிக்கப்பட்டவர்களும் இனி நியமிக்கப்படுகிறவர்களும் அவ்விஷயங்களில் உயர்ந்த நோக்கத்தைக்கொண்டவர்களாயும், அநுபவசாலிகளாயும் இருக்கவேண்டும். மேல்நாட்டுப் பட்டங்களைக் கொண்டவர்கள்தாம், அதற்குத் தகுதியானவர்கள் என்ற குருட்டு எண்ணமும் ஒழியவேண்டும். பிள்ளைகளுக்குச் சன்மார்க்கம் போதிக்கப்படவேண்டும். அதற்கான புத்தகங்களைப் பாடபுத்தகங்களாக அமைக்கவேண்டும். சிறுவர்களுக்குக் கைத்தொழிலும் கற்றுக்கொடுக்கவேண்டும். இவைபோன்ற விஷயங்களால்தான் ஆரம்பக்கல்வி பயனை அளிக்கும்.

ஓம் தத் ஸத்.




## ஸ்ரீ மாதவ கோவிந்த ரானடே.

ஒவ்வொரு தேசத்திற்கும் அங்கு ஜனிக்கும் பெரிய அறிவாளிகளே நிகரற்ற செல்வமாகின்றனர். அவர்களால் நாட்டின் பெருமை பெருகுகின்றது. கற்றவர் கூட்டத்திற்கு அன்னோர் உற்ற தலைவராய் விளங்குகின்றனர். அவர்கள் மக்களிடத்து அரசியல் ஞானத்தைப் பெருக்கித் தமது தொண்டையியற்றி இகத்தி லழியாப் புகழையும் பரத்தில் மோக்ஷத்தையும் அடைகின்றனர். பொன்னினும் நவமணிகளினு மிக்க அத்தேசபக்தருள் ஸ்ரீ மாதவ கோவிந்த ரானடே முதன்மையானவர்.

## பிறப்பு பாலியம் கல்வி.

இப்பெரியார் 1842-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 18-ம் நாளில் நாட்டினெழில் சிறக்கப்பிறந்தார். இவருடைய மூதாதையரைப்பற்றிய சரித மெதுவும் தெளிவாகக் கிடைக்காவிடினும் இவருடைய பாட்டனாரின் தந்தை சாங்கிலீ சமஸ்தான வக்கீலாகவும், பாட்டனார் பூனா ஜில்லாவில் ஒரு நிர்வாக உத்தியோகஸ்தராகவும், தந்தை நாஸிக்கைச் சேர்ந்த நிப்காட் (Niphad) என்ற ஊர் மம்லத்தாரின் குமாஸ்தாவாகவு மிருந்தது தெரியவருகிறது. ரானடேயுடைய முன்னோர் செல்வவந்தருமல்லர்; மிக்க ஏழையருமல்லர்; நடுத்தர ஸ்திதியுடையவர்கள். அவர்கள் மகாராஷ்டிராகுலத்தைச் சார்ந்தவர்கள். சிறு பிராயத்தில் இவர் தொன்மையான திண்ணைப்பள்ளிக்கூடத்திலே வாசித்து வந்தார். ரானடே பதினோராம் பிராயத்தை யடைந்த உடனே இவருக்கு ஆங்கிலம் கற்பிக்கவேண்டி, இவருடையபெற்றோர்கள் இவரைக் கோல்காப்பூர் கலாசாலைக் கனுப்பினர். ஆங்கு பயின்றபின்னர் இவர் பம்பாய் நகரிலுள்ள எலிபின்ஸ்டன் கலாசாலையிற் சேர்ந்து வாசித்துவந்தார். இவர் மாணவரா யிருக்கும்பொழுது, 'மகாராஷ்டிர மன்னர்கள்' என்பது பொருளாக ஓர் வியாசமெழுதி வெளியிட்டார். அக்கட்டுரையில் ஆங்கில அரசாட்சியின் சில பொருத்த மற்ற விஷயங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருந்தமையாலும், மகாராஷ்டிரர்களின் மன எழுச்சிக்குக் காரணமான தீவிர தேசாபிமானச் சொற்க ளடங்கியிருந்தமையாலும் அக்கலாசாலையின் ஐரோப்பியத்தலைமை யாசிரியர் சினந்து இவருக்கு ஆறுமாத உபகாரச் சம்பளத்தைக் கொடாதொழிந்தனராம். இவரால் கலாசாலை மாணவர்களுக்குத் தாய் நாடு, தாய் மதம் என்ற உணர்ச்சி யேற்பட்டது. எலிபின்ஸ்டன் கலாசாலையில் ரானடே தலைமாணாக்கராகி 1862-ல் கலாகுமாரப் பரீக்ஷையில் (B. A.,) ஆங்கிலத்தில் முதன்மைபெற்றுத் தேறினார். 1865-ல் இவர் கலாதிகாரராகி (M. A.,) ஓர் தங்கப்பதக்கமும் பரிசாகப் பெற்றார். 1866-ம் ஆண்டில் இவர் சட்டப் பரீக்ஷைக்குச் சென்று பட்டதாரியானார். பெரும்பாலும் இவர் அரசாங்கத்தாரிடமிருந்து உபகாரச் சம்பளம் பெற்றே கல்வி பயின்றார்.

## உத்தியோகம்.

ரானடேக்குப் பின்பு கல்வி இலாகாவில் மராத்தி பாஷா மொழிபெயர்ப்பாளர் வேலை கிடைத்தது. சில ஆண்டுகள் சென்ற பின்னர் இவருக்குக் கோலாப்பூர் சமஸ்தான நியாயமன்றத்தின் தலைமை குமாஸ்தா பதவி யளிக்கப்பட்டது. இவ்வுத்தியோகத்திலும் இவர் நீடித்திருக்கவில்லை. 1872-ல் இவர் போதகாசிரியர் வேலையை விரும்பி எலிபின்ஸ்டன் உயர்தரக் கலாசாலையில் ஆங்கில ஆசானாக அமர்ந்தார். பேசுவதிலும், விஷயங்களை விளக்கிக் கூறுவதிலும் இவர் அதிக நிபுணத்துவ மடைந்திருந்தமையால் மாணவர்களால் பெரிதும் போற்றப்பட்டு வந்தார்; மகாராஷ்டிர மன்னர்களின் தோள் வலிமையைச் சிறப்பித்து மாணவர்கட்குத் தேசபக்தியை யூட்டிவந்தார். சிவாஜியின் சரித்திரத்தில் ரானடேக்கு அதிகப் பிரியமுண்டு. சத்தியமானவரன் கொண்ட சிவாஜியின் வீரத்தைத் தாளில் மைகொண்டெழுதி மாணவர் மனதில் சுதேச உணர்ச்சியுண்டாக்கிச் சிறந்தார் ரானடே. இதன்பிறகு இவருக்கு நியாயவாத (வக்கீல்) தொழிலில் பிரிய மேற்பட்டது. சிலகாலம் இவர் பம்பாய் மாகாண நியாயஸ்தலத்தில் தொழில் நடாத்திவந்தார். வழக்காடும் வழியில் அக்காலத்தில் இவர் மிகவும் சாமார்த்தியசாலியா யிருந்தமையால் அரசாங்கத்தார் இவரை 'சப் ஆர்டினேட் ஜட்ஜ்' ஆக நியமனம் செய்தனர். அதிலிருந்து இவர் மாகாண நியாயாதிபதியாகவும் (Presidency) Magistrate) சிறு குற்ற நியாயாதிபதியாகவும் (Small Cause Court Judge) இருந்து, படிப்படியாக உயர்ந்து 'ஹைகோர்ட் ஜட்ஜ்' (High Court Judge) ஆனார்.



இவர் நியாயாதிபதி வேலை பார்த்துவந்த காலங்களில் நிகழ்ந்த ஓர் முக்கிய சம்பவம் குறிப்பிடத்தக்கது; துரைத்தனத்தார் ராஜத்துரோகமான விஷயங்களில் ரானடே கலந்துகொண்டிருப்பதாகச் சம்சயித்து, தேசத்தில் குழப்பத்தை உண்டாக்கக்கூடிய கடிதப்போக்குவரவு சிலரால் நடப்பதாக எண்ணி, இவரை விசாரித்தபொழுது, இவர் தூர்த்தர்கள் தம்மைத் துன்பத்திலாழ்த்த அவ்விதம் செய்துவருவதை விளக்கிப் பகிரங்கமாக அக்கடிதங்களை ராஜாங்கத்தாரிடம் கொடுத்துவிட்டார். இவரை நிரபராதியென்றறிந்த் அவர்கள் இவரிடங்கொண்ட அபிப்பிராயபேதத்தை மாற்றிக்கொண்டனர். இவர் நீதி செலுத்திவந்தகாலத்தில் பொறுமையுடன் வாதி பிரதிவாதிகளுடைய உரைகளைக்கேட்டு, நிதானித்து உண்மையை ஆராய்ந்தறிந்து முடிவு கூறுவார். இவரது தீர்ப்பை மேலதிகாரிகள் புகழ்ந்து வந்தனர். தர்மதேவதை வாசஞ்செய்யும் நியாயஸ்தலத்தில் ரானடே சத்யவந்தராக விளங்கித் தண்டனைபெற்ற குற்றவாளியாலும் போற்றப்பட்டு வந்தார்.

## பாஷாபிமானம்.

நிகழ்காலத்தில், கல்வி சிலரால் உத்யோகத்தைக்கருதியும், சிலரால் பட்டம் பெறும் நோக்கத்துடனும் கற்கப்பட்டு, அவர்கள் கலாசாலையினின்றும் வெளிவந்த பிறகு தாம் அனைத்தையும் கண்டறிந்துவிட்டதாக நினைக்கக் கூடியதாயிருக்கின்றது. ரானடே அவ்வாறு எண்ணவில்லை. ஒருவன் தனது ஆயுட்காலம் முழுவதிலும் மாணவனா யிருக்கவேண்டுமென்பதே இவருடைய அபிப்பிராயம். இவர் மூன்று பாஷைகளில் நல்ல பாண்டித்திய மடைந்திருந்தார். மராத்தி, சமஸ்கிருதம், ஆங்கிலமான மும்மொழிகளிலும் இலக்கிய இலக்கணங்களில் ரானடேக்கு நல்ல வல்லமையுண்டு. இவருடைய தாய் மொழியான மகாராஷ்டிரபாஷையில் இவருக்கதிக அபிமானமுண்டு. இவர் மகாராஷ்டிரச் சரித்திரத்தை ஆங்கிலத்தில் ஆராய்ச்சியுடன் எழுதி வெளியிட்டார். அதனால் இந்துதேசச் சரித்திரம் முன்னரே வரைந்துள்ள மேனாட்டுச் சரித்திராசிரியர்களின் பொய்க்கூற்று நன்கு புலனாயிற்று. அந்நூலில் சிவாஜியின் உண்மைத் தேசாபிமானத்தைப் புகழ்ந்திருக்குமளவுகொண்டு ரானடேயின் தேசபக்தியினளவை நிர்ணயிக்கலாம். அர்த்தசாஸ்திரத்தில் இவர்

விசேஷப் பிரியங்கொண்டவர். இந்தியர்களின் சுதேசக் கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவற்றைக்குறித்து இவர் பத்திரிகைகளுக்குவரைந்த வியாசங்கள் எண்ணில. பம்பாய் சர்வகலாசாலையில் அக்காலத்தில் பிரபலராயிருந்த மேதா என்னும் பெரியாருடன் போதனுமுறை விஷயங்களில் ரானடே பலத்த வாக்குவாதஞ்செய்து தமது கொள்கையை ஸ்தாபித்தார்.

ஸ்ரீ லக்ஷ்மீகாந்தன்.

---

## கதரின் வெற்றி.

கதர்! கதர்! என்ற சொல்லை யடுத்துவருவது காந்தி யென்னுந் திருநாமம். தேசத் தாய் படும் இடும்பைக் காற்ருது அவள் துன்பம் நீங்கி இன்பம் ஓங்க அப்புனிதர் நல்லதோர் வழியை நல்கினர் நமக்கு! கயவஞ்சகம் நாட்டினில் மிக, ஏழைகள் படுந்துயர் எண்ணிலவாக, அன்பும் அறமும் அறவே குன்ற, தூய்மையும் வாய்மையும் மாய்ந்தனவாக, தாய் பிறர் கைப்படச் சகியாராகி, அப்பெரியோர் தொண்டு நயந்து, இன்றே நவிலுவேன் நன்றேயென்று, அருளும் ஆற்றலும் அளவினிலோங்க, தாய்த் திருநாட்டினோர் தனையரேயாகி, கதர்! கதர்! கதரெனக் கதறினர். அவாருளிய கைநூலாடை தாய்நாட்டி லன்பிலாத அஞ்ஞானத்தைப் போக்கிப் பாரதமக்களின் சீரிய உள்ளத்தில் மெய்ஞ்ஞான விளக்கேற்றுவதாயிற்று.

கதர் தோன்றி ஐந்தாண்டுகளாயின. ௧௯௨௨-ம் ஆண்டே அதன் ஜனன காலம். அவ்வருடமுதல் இந்துதேசச் சரித்திரத்திற்கே ஓர் புதிய சகாப்தமேற்பட்டதெனினும் பொருந்தும். காங்கிரஸ் இயக்கம் தோன்றிய காலம் முதல் தேசசேவை புரிந்துவந்த எத்தலைவரும் புகலாத ஓர் புது உண்மையை இத் தெய்வீகர் புகன்ருர்! 'கண்ணனே! துளவத்தாமனே! என் ஜன்ம பூமியின் நன்மைக்கோர் சிறந்தவழி யருளல்வேண்டு' மென்று உள்ளன்புடன் தோத்திரஞ்செய்த மகாத்மாவிற்குக் கடல்வண்ணன் தனது காங்கள் நான்கனுள் ஒன்றினில் கொண்ட சக்கரத்தைக் காட்டினன். அன்றுமுதலப் பொற்காமருளிய இராட்டினச் சக்கரத்தை அக்கரையுடன் சுற்றித் தக்க ஆடையொன்றைத் தாம் நூற்றணிந்துகொண்டு 'நான் கண்ட உண்மை' யென நவின்றனர் காந்தி! தலைவர்களனைவரும் கதரை ஆதரிக்கத்தொடங்கினர். காந்தியடிகள் கதராடையை உலகிற் குணர்த்தியது முதல் கைத்தொழிலால் மேன்மையை யடைந்த அயல் நாட்டாரு மவரைப் போற்றி நின்றனர்.

கதர்! பொதுநோக்குடையது; பாரதபூமியிற் ருேன்றிய ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பாரசீகர், ஜைனர் முதலான சகல மதஸ்தர்களும் எவ்வித ஆக்ஷேபனையுமில்லாமல் கதரை ஆதரிக்கலாம்! ஜாதிக்கொள்கையாற் சண்டையிடுவோர்க்கும் கதர் அவசியமானது. நமது நாட்டில் உற்பத்தியாகும் பருத்தியை நமது கையாலே இராட்டைகொண்டு நூல் நூற்று



ஆடையாக்கி அணியவேண்டுமென்பதே தெய்வாம்சமான அக்கதரியக்கத்தின் நோக்கம். உணவுக்கு வருந்தும் ஏழைமக்கள் உய்ய இக்கதரியக்கமே தக்க உபாயமாம். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையும், மதுவிலக்கும், தீண்டாமையொழித்தலும் ஆரம்பத்தில் தீவிரமாக அனுசரிக்கப்பட்டபோதிலும் காலப்போக்கி லவை நல்ல நிலைமையிலில்லை. ஆனுல் கதரியக்கமட்டும் மேன்மேலும் விருத்தியடைந்து வருகின்றது. ஏன்! அது சர்வ சமய, ஆசார சமரஸ முடையதாதலின் காந்தியடிகளை நாம் திருவள்ளுவராகக் காண்கின்ருேம்! குறளே நமக்குக் கதராகின்றது. இதற்கு இந்தியாவின் முப்பது கோடிமக்களும் மிடிமையைப் போக்க அடிமையாகின்றனர். இதனுற்ருன் கதரியக்கம் பாரதபூமியில் வேரூன்றிவிட்டது. இனி எவ்விதப் புதிய இயக்கப் புயற்காற்றும் அதை அசைக்க முடியாது! ஐரோப்பியர்கள் பல நாடுகளையு மடக்கியாளுவது வீரத்தாலன்று; வெம்போராலுமல்ல. வீரர்களின் உதிரத்தால் அவர்களது அரசாங்கம் நிறுவப்படவில்லை. கைத்தொழில் வியாபார முயற்சியால் அவர்களுடைய ஆட்சி அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் கைராட்டினம் சுழன்று கைத்தொழில் சிறந்த பண்டையநாட்களில் நமது நாட்டில் வறுமையில்லை; ஏழைகள் கண்ணீர் சிந்தினுரில்லை. கைராட்டினக் குடிசைக் கைத்தொழி லழிந்தபின்னரே தேச நலம் குன்றநேர்ந்தது. ஆதலால் 'தன் கையே தனக்குதவி' யென இராட்டினத்தைச் சுற்றி, மாண்ட கைத்தொழிலை மீட்கும் வழிபுகன்ருர் அடிகள்! கதரை அவர் பிரஸ்தாபித்தகாலத்தில், அவரது கதரென்னும் மோஹனஸ்திரத்திற்குத் தாஸரான ருஷிய ஞானியொருவர் "நான் இனி மிஸ்டர் காந்தியென்றழைப்பதைவிட்டு அவரை 'ஏழை பங்காளன்' என்றும், 'சாந்தமூர்த்தி' யென்றும், 'சத்யாவதார' னென்று மழைப்பேன்" என்ருர். இக்கால இயேசு இவரேயென்றனர் பாதிரிமார்கள்! மகாத்மாவின் மணிமொழிகேட்ட ஜர்மானியர் சர்க்காகொண்டு கைத்தொழில் பெருக்குகின்றனர். ஆப்கானஸ்தான அரசர் கதரணிகின்ருர். ஆனுல் நமக்குத்தான் கதரிடத்து 'முழு அன்பு' இன்னும் ஜனிக்கவில்லை. அவருடைய நல்லுரைகள் செவிடன் காதி லூதிய சங்கமாயிற்று.

கதரின் பொதுத்தன்மையே அதன் வெற்றிக்குக் காரணமாகின்றது. அடிகள் முடிவாக கதரபிவிருத்தியாலேதான் நமது நாட்டின் சுதர்மத்தை நிலைநாட்ட முடியுமென்று தீர்மானித்து அகில பாரத சர்க்கா சங்கம் ஒன்றை ஸ்தாபித்திருக்கின்ருர். அது மாகாணங்கள் தோறும் மகத்தான வேலை செய்து வருகின்றது. ௧௯௨௬-ம் வருட அறிக்கையில் ௨௪ இலட்சம் ரூபாய் பெறுமான கதர் உற்பத்தியாக்கப்பெற்றதென்றும், ௨௧ இலட்சம் ரூபாய் பெறுமான ஆடை விற்பனையா யிருக்கிறதென்றும் காணப்படுவதிலிருந்து வெகு விரைவில் கதரடைந்த வெற்றியை நாம் கண்டுகொள்ளலாம். ஆனுல் ஆண்டுதோறும் மேனுட்டிலிருந்து வரும் ௬௰ கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளினளவை நோக்குங்கால் நாம் திருப்தியடைய முடியாது.

கதரிடத்து எவருக்கும் வெறுப்பில்லை; விருப்பந்தான். ஆனால் அணிவதுதானில்லை. முதலில் அறிவாளிகள் கதரணிய வேண்டும். செல்வவந்தர்கள் கதருடுக்கவேண்டும். பாமர சமூகம் படித்தவர்களையே பின்பற்றுகின்றது. மாணவர்கள் ஆசானையும், வேலையாட்கள் எஜமானனையும், சிஷ்யர்கள் குருவையும் பின்பற்றுகின்றனர். ஆகையால் முதலில் ஆசிரியர்களும், எஜமானர்களும்,குருமார்களும் கதரை ஆதரித்து ஏனையோர்க்கு வழிகாட்டிகளாகவேண்டும். தற்கால மந்திரிமார்கள் கதரை வரவேற்றுபசரிக்கின்றனர். அரசாங்கத்தாரும் கதருடுக்கத் தடைபுரியவில்லை. கதர் எந்த ஜாதி, மத சுதந்திரத்திற்கும் தடையாயில்லாததால் அதனைத்தடுக்க எவர் மனமும் இடந்தராதென்க. ஆகவே, அதனைத் தரிப்பது இந்தியாவிற் பிறந்த ஒவ்வொருவருடைய சுதர்மமாம்.

அன்பர்களே! அடிக்கொரு ஊரில் நொடிக்கொரு மகாநாடு கூட்டி ஆகாயக் கோட்டைகட்ட அஸ்திவாரமிட்டதாற் பயனொன்றுமடைந்தபாடில்லை. தென்னாட்டில் பிராமணரல்லாத இயக்கம். வடநாட்டில் இந்து முகம்மதிய வம்பு. உள்ளன்புடன் தேசகைங்கர்யம் புரிவோர் வெகு அபூர்வம். வீண்வாதம் புரியும் டாம்பீகர்கள் நாட்டை அல்லற்படுத்துகின்றனர். காங்கிரஸைப் பலர் தம்மை விளம்பரப்படுத்திக்கொள்ள எண்ணி அன்று சேர்ந்து இன்று வெளியே நிற்கின்றனர். கூடின கோடி மகாநாடுகளும் வாடின. தேர்தல் காலத்தில் முழக்கஞ்செய்தவரெல்லாம் இப்போது உறங்குகின்றனர். வீட்டிலுடுக்க வெள்ளை மல்லும் வெளியில் போகும்போது வெண்கதரும் உடுத்தும் வேடதாரிகள் நாட்டினில் மிகுந்தனர். மஹாத்மாதான் என் செய்வார்? உணவை ஊட்ட முடியும். அதை விழுங்கச் செய்வது இயலாதன்றோ! அனைத்திற்கும் 'ஆம்' என்று தலையாட்டி அனுஷ்டானத்தில் முரண்பாடுடையா ரதிகரித்துவிட்டனர். மகாத்மா ஒரே உபாயமுளதென்றுரைத்தார். அதுதான் கதரின் வெற்றி! ஆதலால் தேசிய முகத்தில் எவ்வித கொள்கைப் பேதமுடையோராயினும் கதருடுக்கவேண்டும்! அதுவே நமது நாட்டிற்கு விடுதலை யளிக்கும்!

ஸ்ரீதரன்.

### காந்தி தரிசனம்.

பாரத தேசத்தில் 'காப்பி' என்னும் பானம் எத்துணை ஆதிக்கம் பெற்றுளதோ அத்துணை அளவு கதராதிக்க மேற்படுமேல் அன்றே விடுதலை. அறிமின்! எழுமின்!—(தாஸர்)

**சந்தாதாரர்களுக்கு:**—சந்தா நம்பர் தெரியாதவர்கள் மாதமாதம் வரும் சஞ்சிகையின் மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.




## யோகம்.

(545-ம் பக்கத் தொடர்ச்சி.)

சரியான பிராணயாமத்தால் வியாதிகள் நீங்கும்; சரீரதிடமுண்டர்கும்; நாடிகள் வசப்படும். அயுக்தமான பிராணயாமத்தால் காசம், ஜ்வரம், காதுவலி, கண்வலி, தலைநோவு முதலிய பல வியாதிகளுண்டாகும். ஆதலால் இரேசகபூரககும்பகங்களைக் குருவுபதேசித்த முறைதவறாமல் சரியாய்ச் செய்யவேண்டும். இரேசகபூரகங்களுடன் செய்யப்படும் கும்பகம், சகித கும்பகமென்னப்படும். இரேசகபூரகங்களில்லாமல் செய்யப்படும் கும்பகம் கேவல கும்பகமென்னப்படும். இந்தக் கேவல கும்பக சித்தியின் பொருட்டே இரேசகபூரகங்கள் அப்பியாசிக்கப்படுவன. இந்தக் கேவல கும்பகம் சித்தித்துவிட்டால் யோகசித்தியாம். இதனால் சகல சித்திகளும் உண்டாகும். இராஜயோகம் சித்திக்கும். குண்டலி என்னும் ஆதாரசித்தியும் நித்திரையினின்றும் விழிக்கும். விழித்தலால் சுழிமுனைநாடி யாதொரு கெடுதியுமின்றி நிமிர்ந்து நிற்கும். அப்போது பிராணவாயு பிரமரந்திரமார்க்கத்தில் செல்லும்.

குண்டலி விழிக்கும்போது ஆறு ஆதார சக்கரங்களும் தோற்றும். பிரமகிரந்தி விஷ்ணுகிரந்தி ருத்திரகிரந்தி (முடிச்சு) ஆகிய மூன்று கட்டுகளும் பேதிக்கப்படும். இந்தக் கும்பகம் வேறு எட்டுவகையாகவும் சொல்லப்படும். அவை முறையே சூரியபேதி, உஜ்ஜீயினி, சீத்காரி, சீதலி, பஸ்திரிகை, பிராமரி, மூர்ச்சை, பிலாவினி என்பனவாம். இவை கேவல கும்பக சித்தியால் செய்யத்தக்கனவாம்; ஏனெனில் இவை கேவல கும்பகசித்திக்குப் பரம்பரா காரணங்களாகின்றன.

சூரியபேதி சித்தியால் (சூரியநாடியால் வாயுவை யிழுத்துச் சந்திரநாடியில் மெதுவாக விடுதலாம்) ஜலதோஷம் சில்விஷம் தலைநோய் முதலியவற்றை நீக்கலாம். சரீரத்திலுள்ள எண்பது வாதங்களையும் நீக்கிக்கொள்ளலாம்.

உஜ்ஜயினி—வாயை மூடிக்கொண்டு இரண்டு நாடிகளாலும் பூரித்துக் கும்பித்துப் பின் சந்திரநாடியால் மெதுவாக இரேசிப்பது. இதனால் சிலேத்தும தோஷம் நீங்கும்; ஜாடராக்கினி விருத்தியாகும்.

சீத்காரி—கொட்டாவிவிட்டு இரண்டு நாசிகளாலும் ஜலத்தை இழுத்துப் பூரித்துக் கும்பித்து இரண்டு நாசியிலும் விடுதலாம். பூரிக்கும்போது இரண்டு பல் வரிசைகளையும் ஒன்று சேர்த்துக்கொண்டு உஸ் என்று சப்தமுண்டாகும்படி பூரித்தலால் இது சீத்காரி என்னப்பட்டது. இதனால் சரீரம் வலுக்கும், பசிதாகம் சோம்பல் நித்திரை நீங்கும்.

சீதலி—நாவின் நுனியை உண்ணுவில் சேர்த்து இரண்டு நாசியாலும் நீரை ரேசித்து நாக்கு தொண்டை இவற்றின் உதவியால் பூரித்துக் கும்பித்து இரண்டு நாசிகளாலும் மெதுவாகவிடுதல். இதை ஒரு மாதம் அப்பியசித்தால் பிராணவாயு வசப்படும். ஜுரம் ஜுரக்கட்டி முதலிய நோய் நீங்கும். பாம்பைப்போலச் சட்டையுரித்து அன்னுகாரமின்றி நெடுங்காலம் ஜீவிக்கும் சக்தியுண்டாகும். ஒரு வருஷம் பழகினுல் ஆத்மதரிசனமும் செய்யலாம்.

பஸ்திரிகை—இடதுபாதத்தை வலது துடையிலும் வலது பாதத்தை இடது துடையிலும் மாற்றி வைத்துக்கொண்டு சரீரத்தை நிமிர்ந்திருக்கச் செய்து இரண்டு கைகளையும் முழங்காலில் வைத்துச் சின்முத்திரையுடன் சுழுமுனையில் பார்வையைச் செலுத்தி, ஒரு நாசியால் நீரை இழுத்துப் பூரித்து இரேசித்துப் பின் சூரியனுல் பூரித்துச் சந்திரனுல் விடுத்துப் பின் சந்திரனுல் பூரித்துச் சூரியனுல் விடுதல். இதனுல் சரீரத்தைக் கனத்திருக்கவும் லேசாக இருக்கவும் செய்யலாம். பிரம விஷ்ணு ருத்திரன் என்னும் மூன்று கிரந்திகளையும் பேதிக்கலாம்.

பிராமரி—சுகாசனத்தி லிருந்துகொண்டு நாடிகளைப் பட படப்பாக ஒடச்செய்து உஷ்ணமுண்டாகாமற்படி சுவாசத்தை இழுத்து விடுத்து நாடிகளைப் படபடப்பாக ஒடச்செய்யவேண்டும். சரீரத்தில் சூடுண்டாகும்படி சுவாசத்தை விரைவாக இழுத்துவிடவேண்டும். பின்பு வியர்வை உண்டாய்ச் சரீரம் குளிர்ந்ததும் நாசித்துவார மிரண்டினுலும் நிதானமாக வாயுவை இழுத்துப் பின் விரைவாக இழுக்கவேண்டும். சரீரம் வியர்வையால் நனைகிறவரையிலும் சுவாசத்தை இழுத்துவிடவேண்டும். பின்னும் இரண்டு நாசிகளாலும் இழுத்துப் பூரித்துக் கும்பிக்கவேண்டும். பின் நிதானமாய் இரேசிக்கவேண்டும். இந்தக் கும்பகம் நெடுங்காலம் பழகப்பட்டால் அந்த யோகிக்கு முதுமை நீங்கி யௌவனமுண்டாகும். அஷ்டமாசித்திகளும் கைகூடும். பிறருக்குண்டாகும் வியாதிகளையுங் கையால் தொட்டு நீக்கலாம். மூர்ச்சை--சித்தாசனத்திலமர்ந்து மூர்ச்சை உண்டாகும் வரையில் கும்பிக்கவேண்டும். மெதுவாய் இரேசிக்கவேண்டும். இது சித்தித்தபின் இரு காதுகளையு மூடிக்கொண்டு கும்பகம் செய்யவேண்டும். அப்போது வலக்காதில் சப்தம் கேட்கும். அதை இடக்காதுக்குக் கேளாதவரையில் செய்து பழகவேண்டும். இதனுல் மிருக வசிய முண்டாகும். மரணத்தையுந் தாண்டலாம். நினைத்த சித்திகளையும் அடையலாம். சகல கலைகளையும் ஓதாமலே உணரலாம். இதை இருபத்து நாலு வருஷம் அனுஷ்டித்தால் சரீரத்தில் பால்மயமாய் அமிர்தம் ஊறும். முப்பது வருஷம் அப்பியசித்தால் தேவசொரூபம் சித்திக்கும்.

பிலாவினி—சதா வாயுவால் வயிற்றை நிரப்பிக்கொண்டிருத்தல்—என்றல் எப்போதும் கும்பகம்கொண்டிருத்தலாம். இதனுல் தண்ணீரின்மேல் தாமரை யிலையைப்போல மிதந்துகொண்டிருக்கலாம். இவையெல்லாம் பிராணுயாமமே. இவைகளை யோகப்பயிற்சியுள்ள மஹாத்மாக்கள் மூலமாகச் சந்தேகமறத் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டும். இல்லாவிடின் விபரீதப்பட்டுக் கெடுதி சம்பவிக்கும்.



ஆதாரதரிசனை—மூலாதாரமானது குதத்துக்கு இரண்டுவிரற்கடைக்கு மேல் தாமரைக்கிழங்கு வடிவமாயுள்ளது. சிவப்புவர்ணமுள்ள நாலு இதழ்களை யுடையது. சொர்ணமயமான வ ஶ ஷ ஸ என்னும் அக்ஷரங்களை யுடையது. இந்தக்கமலத்தின் பொகுட்டில் நாற்கோணவடிவாய் எட்டுச் சூலங்களாற் சூழப்பட்டதாய் மஞ்சள்வர்ணமுள்ளதான பூமண்டலம் இருக்கின்றது. இதன்மத்தியில் நாலுபுஜங்களுள்ளதாய் வஜ்ராயுதந் தரித்துக்கொண்டு ஐராவதத்தின்மேல் ஏறினதான பொன்னிறமுள்ள (ளம்) என்னும் பூமி பீஜம் இருக்கிறது. அந்தப் பீஜமாகிய விந்துவின்மத்தியில் நான்குமுகம் நான்கு புஜங்களுடன், தண்டகமண்டல அக்ஷமாலாதாரியாய் அபயமுடையராய், இரத்தவர்ணமுள்ள சிசுவடிவாகப் பிரமாவசிக்கிறூர். இந்த இரத்த பத்மத்தில் இரத்தவர்ணமுள்ளவளாய் நான்கு புஜங்களுடன் சூலம், கட்வாங்கம், வாள், பானபாத்திரம் என்பன தரித்த டாகினி சக்தி விளங்குகிறுள். இவளே அந்தச் சக்கரத்தை நடத்துகிற சக்தி. கர்ணிகையின் மத்தியில் மின்னல் வடிவமாக முக்கோணம் விளங்கும். அதன்மத்தியில் காமலாயுவும் செந்நிறமான காமபீஜமும் இருக்கும். இதன்மேல் கறுத்தநிறமுள்ள சுயம்புலிங்க மிருக்கும். அதற்குமேல்தான் மூன்றரை வலயவடிவாய்க் குண்டலிசக்தி யிருக்கின்றது. அதன்மேல் லிங்கத்தின்மேல் தண்டாகாரமாகச் சிற்கலை யிருக்கின்றது. இந்த மூலாதாரத்தில் கணபதி யிருக்கிறூர் என்றும் சில நூல்கள் கூறுகின்றன. பிராணுயாமத்தின் மகிமையால் இந்த மூலாதாரத்தைக் குரு திருவருளால் தரிசிக்கவேண்டும்.

மூலாதாரத்துக்கு இரண்டரை விரற்கடைக்குமேல் இலிங்கமூலத்தில் சுவாதிஷ்டான மிருக்கின்றது. இது அப்புஸ்தலம். மின்னலொளிபோன்ற விந்துவுடன் கூடிய ப ம ய ர ல என்கிற ஆறு அக்ஷரங்கள் பொருந்திய ஆறு இதழ்ச்சக்கரமாம். இவ்விதழ்கள் சிந்தூரவடிவுள்ளனவாம். அதன் கர்ணிகையில் அர்த்தசந்திரவடிவாய் எட்டுத்தளங்களுள்ள வெண்ணிற ஜலமண்டல மிருக்கின்றது. அதன்மத்தியில் (வம்) என்னும் அப்புபீஜம் இருக்கின்றது. மகரவாகனத்தின்மேல் பாசத்தைத் தரித்துக்கொண்டிருக்கும். அதன்மத்தியில் சதுர்ப்புஜங்களுடனும், சங்கு, சக்கரம், கதை, பத்மங்களைத் தரித்துக்கொண்டு விஷ்ணுமூர்த்தி யிருப்பர். பீதாம்பரம், வனமாலை, ஸ்ரீவத்ஸம், கௌஸ்துபம் இவைகளைத் தரித்துக்கொண்டு கருடவாகனத்தின் மேலிருப்பர். யௌவன வடிவமுடையவரா யிருப்பர். அந்தப்பொகுட்டின் மத்தியில் கரியநிறமும், நான்கு கைகளும், மூன்று கண்களு முள்ளவளாய்ப் பயங்கரமான உருவமுடையவளாய் வளைந்த பற்களை யுடையவளாய் ராக்கினி யென்னும் சக்தி யிருக்கிறுள். அந்தச் சக்கரத்தை நடத்துந் தேவதை யிதுவேயாம். வெள்ளையன்னம் ரக்ததாரை யிவைகளில் பிரியமுடையவள். சூலம் சங்கு உடுக்கை உளிகளைத் தரித்திருப்பள். இந்தச் சக்கரத்தில் இருக்கும் விஷ்ணுவைத் தரிசித்த யோகிக்கு ஒருபோதும் ஜலத்தினுல் பயம் உண்டாகாது. அவன் அப்புபூதத்தை ஜயித்தவனுவான்.

மணிபூரகம்—நாபிஸ்தானத்திலுள்ளது. மேகவர்ணமுள்ள பத்துத் தளங்களை யுடையது. தளந்தோறும் முறையே ஜ ஞ ண த ய ஷ ய ந வ ஹ பத்து அக்ஷரங்களை யுடையது. அதன்மத்தியில் மூன்று சுவஸ்திகைகளோடு கூடிய திரிகோண மிருக்கின்றது. இதுவே அக்கினிமண்டலம். அதன் மத்தியில் (ரம்) என்னும் அக்கினிபீஜ மிருக்கின்றது. நான்கு புயங்களுள்ளது. வரம், அபயம், வஜ்ரம், சக்தி என்பன தரித்து மேஷவாகனத்தில் வீற்றிருக்கும். அந்தப் பீஜத்தில் செந்நிறமுடையவராய் இரண்டு புஜங்களுடன், வரதம் அபயமுடையவராய், வெண்ணீறும் வெண்மையான ஆபரணமணிந்தவராய், விருத்தரான ருத்திரமூர்த்தி ரிஷபவாகனத்தில் வீற்றிருப்பர். இந்தக் கர்ணிகையில் சிவந்ததாமரையில் மூன்றுமுகம் மூன்று கண்கள், நான்கு புயங்களுள்ளதும், கோரப்பற்களையுடையதும், நீலவர்ணமுள்ளதும், வஜ்ரம் சக்தி வரம் அபயம் என்பன தரித்து மானலாகினி என்னும் சக்தியிருக்கின்றது. இந்தச் சக்திக்கு இரத்தத்தோடுகூடிய தேகரான்னம் மாமிசம் இவற்றில் பிரியமாம். இந்தச்சக்கரத்தையும் இதில் விளங்கும் ருத்திரபகவானையும் கண்டு தரிசித்த யோகி அக்கினிபூதத்தை ஜயித்தவனாவான். அவனுக்கு அக்கினியால் ஒருபோதும் பயம் நேராது.

(தொடரும்.) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.




## பன்னீர் செய்யும் முறை.

ரோஜா மலரின் சாரம் இறக்குவதற்கு ஹேதுவான கருவி மிகவும் சொற்பமான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. உறுதியாக ஈயம் பூசப்பட்டதும் 8-முதல் 12-காலன் வரையில் தண்ணீர் கொள்ளும்படியானதுமான செம்பு அல்லது இரும்பால் செய்யப்பட்ட கொப்பரை (Boiler) ஒன்றுண்டு. அந்தக் கொப்பரையானது பருத்த உடற்பாகமும் குறுகிய கழுத்தோடுங்கூடியதாயிருக்கும். அக்கழுத்தின் வாய் குறுக்களவில் 8-அங்குல நீள முள்ளது. இந்த வாயின்மீது பன்னீர் இறக்கும் மற்றொரு சிறு கொப்பறையின் தலைப்பு திடமாக இணைக்கப்பட்டிருக்கிறது. இச் சிறு கருவி நாம் சமையல் செய்யும் பாத்திரத்தைப்போல மிகவும் சொற்பமானது. இதனடியில், நீராவிசெல்லும் முறுக்குக் குழாய் நுழையும் பொருட்டு ஓர் சிறு துவாரம் விடப்பட்டிருக்கிறது. இக்குழாய் குறுங்கோணமாயமைந்த இரு சிறு மூங்கில் துண்டுகளின்மேல் சுற்றப்பட்டு அதன்மேல் முறுக்கப்பட்ட கயிற்றால் இடைவிடாது சுற்றப்பட்டிருக்கும். இம் முறுக்கிய கயிற்றின்மேல்



ஆவி வெளிச்செல்லாமற் றடுக்க மிருதுவான மண்பூச்சு கொடுக்கப்பட்டிருக்கும். அம்மூங்கிலின் சுமார் இரண்டடி நீளமுள்ள மேல்நுனி அக்கொப்பரையிலுள்ள சிறு துவாரத்திற்கு நேராக வெளியில் நின்று ஆவி வெளிப்படாவண்ணம் மாவாலும் நீராலும் அமைக்கப்பட்டிருக்கும். அதன் மற்றொரு முனை நீளமான கழுத்துப்போன்ற பாகமுடைய பாத்திரத்தினுட் சென்றிருக்கும். அது கொள்கலத்தை அடைந்திருக்கும். அப்பாத்திரத்திலுள்ள தண்ணீர் உஷ்ணப்படுத்தப்படுங்கால் மாறுந்தன்மையைப் பெறுகின்றது. அக்கருவியின் தலைப்பாகம் முதல் அடிப்பாகம் வரை மிருதுவான மண்ணாலும், துணியாலும் அதிக ஜாக்கிரதையாக மூடப்பட்டு ஆவி வெளிச்செல்லாவாறு காப்பாற்றப்பட்டிருக்கிறது. இத்துணை ஏற்பாடுடன் கூடிய பன்னீர் ஆக்குங்கருவி சாதாரண மண்ணடுப்பில் வைக்கப்படுகின்றது.

இக்கருவியிலுள்ள கொப்பரை எட்டுமுதல் பத்துப்பன்னிரண்டாயிரம் ரோஜாமலர்கள் கொள்ளக்கூடியதாயிருக்கும். தொழிலாளர் எண்ணாயிரம் ரோஜாப் புஷ்பங்களில் பத்து அல்லது பன்னிரண்டுசேர் தண்ணீர் வார்த்து எட்டுச்சேர் பன்னீர் எடுப்பார்கள்; பன்னீர் எடுபட்டபின் அதை ‘கார்பாய்’ என்னும் ஒருஜாடி யுருவுள்ள கண்ணாடிப் பாத்திரத்திலிட்டு வெயிலில் நன்றாகக் காய்ந்து பதமடையுமாறு வைப்பர். சூரிய வெப்பத்தில் வைக்கும்பொழுது அதன் வாசனை குறையாதவாறு பஞ்சால் மூடி அதன்மீது ஈரமான களிமண் அடைத்து வைக்கப்படும். உயர்தரப்பன்னீர் ஒருசேர் தண்ணீருக்கு 1000-மலர் வீதம் சேர்த்துக் காய்ச்சப்படும்.

பன்னீர் அத்தர் செய்வதற்கு மலர்கள் இயந்திரத்திலிடப்பட்டுப் பன்னீர் செய்யப்படும் முறையைப் போன்றே தண்ணீர் சேர்க்கப்படும். நேர்த்தியான பன்னீர் கிரஹிக்கப்பட்ட பின்னர் அதை ஓர் பெருங்கிண்ணத்தில் எடுத்து, அக்கிண்ணத்திலுள்ள பன்னீரில் பூச்சி புழுக்கள் விழாவண்ணம் பட்டால் மூடி, தரையில் இரண்டடி ஆழமுள்ள ஓர் குழிவெட்டி, அக்குழியை முன்னரே ஈரமாக்கி அக்கிண்ணத்தை அதில் வைத்துவிடவேண்டும். ஒரு இரவு முழுதும் அக்குழியில் கிண்ண மிருக்கவேண்டும். (இம்முறை முக்கியமாக இராக்காலத்தில் குளிர் அதிகரித்திருக்கும் மாதங்களிலேயே அனுசரிக்கத்தக்கது). பொழுது புலருமுன் இக்கிண்ணத்தைத் திறந்து பார்த்தால் பன்னீரின்மேல் அத்தர் படர்ந்திருக்கும். தொழிலாளர் அதை ஓர் நயமான இறகுகொண்டு மெதுவாகப் பிரித்தெடுத்து வைத்துக்கொண்டு—இவ்வாறே அத்தரைச் சேகரித்துச் சிறிது சூரியவெப்பம் படவைத்து டப்பிகளில் அடைத்து ஒரு வராகன் இடை சேர்ந்தபின் சுத்திசெய்து அம்பர் சேர்த்து விற்க அனுப்புகின்றனர். இரண்டு மூன்று நாட்கள் சேகரிக்கப்பட்ட சுத்தமான அத்தர் (ரோஜா அத்தர்) இலேசான பச்சை நிறமுள்ள மெழுகுபோன்றிருக்கும். அவ்வாறே வைக்கப்பட்டால் சிலவாரங்கள் கழிய அதன் பசுமை வர்ணம் மாறி மங்கலான மஞ்சள்நிறமுடையதாகும். அத்தொழில் நிபுணர்கள் ஒரு இலக்ஷம் ரோஜா புஷ்பங்களைக்கொண்டு ஒருதோலா உயர்ந்த அத்தர் செய்யப்படலாமெனக் கூறுகின்றனர். வியாபார தந்திரசாலிகள் அத்தருடன் சந்தனத்

தைச் சேர்த்து விற்கின்றனர். சந்தனத்துடன் கலந்து விற்கப்படுவது சுத்தமான அத்தராகாது. (இண்டஸ்டிரி.)

## சந்தனாதித் தைலம்.

சந்தனாதித் தைலத்தின் உபயோகத்தையும் உயர்வையும் அறியாதார் நவீன உலகில் வெகு சிலரேயாவர். நல்ல வாசனையும் குளிர்ச்சியும் பொருந்தியது இத்தைலம். பாரதபூமியில் ஒரு சிறு சந்தனக்கட்டைத் துண்டாவது இல்லாத இல்லமே இல்லையெனலாம். பூஜை, கிரியாம்சமான சந்தர்ப்பங்களிலும், விவாகம், தேக்கச்சேரி முதலான கொண்டாட்ட இடங்களிலும் சந்தனமே முன்னர் வழங்கப்படுகின்றது. சந்தனத்தின் உபயோகம் புராதன காலத்திலிருந்தே தொடர்ந்து வருகின்றது. சாலமன் அரசன் காலத்தில் சந்தனம் வழங்கப்பட்டது மேனாட்டுச் சரித்திரத்தினின்றும் விசதமாம். ஆராதனக்கிரமத்திலும் கந்தத்துவாரா (வாயிலாக) கடவுள் வழிபாடு கூறப்படுகின்றது.

அலங்காரமான மலைப்பிரதேசங்களில் சந்தனமரங்கள் அடர்ந்திருக்கும். தென்னிந்தியாவில் குடகு, மைசூர், கொல்லிமலைப் பிரதேசம் முதலான இடங்களில் சந்தன விருக்ஷங்கள் உயர்ந்தோங்கி வளர்கின்றன. இம்மரத்தைக்கொண்டு சொற்ப மூலதனமுடையவர்கள் நல்ல லாபமடையலாம். இந்தியாவின் இயற்கைப் பிரதேசங்களில் நிறைந்து கிடக்கும் சந்தனம் போன்றவற்றைக்கொண்டு சமூகத்திற்குத் தேவையான பண்டங்களைச் செய்து நமது சிறு கைத்தொழில்களை நாம் விருத்திசெய்தாலன்றி நமதுநாடு முன்னேற்றமடையவியலாது. நமது செல்வத்தைப் பிறநாட்டாரிடம் செல்லாவண்ணம் நாம் பாதுகாக்க விரும்பினால் இன்றே புதிய கைத்தொழில்களைத் தொடங்கவேண்டுவது அத்யாவசியமாம்.

இந்தியர்கள் எப்பொழுதும் மேல்நாட்டு முறைகளில் ஆழ்ந்து தாழ்ந்து வறுமை சூழ்ந்து நிற்கின்றனர். இந்தியாவில் செய்யப்படும் சந்தனாதித் தைலத்தையும் அதன் அவசியத்தையு முணர்ந்த தந்திரசாலிகளான மேல்நாட்டார் அத்தைலத்தைச் செய்து குறைந்த விலைக்கு அனுப்ப ஆரம்பித்து விட்டனர். இவ்விதம் ஜப்பானியரும், ஜர்மானியரும் சந்தனாதித்தைலக் கைத்தொழிலைச் செய்து வருகின்றனர். செழுமையான மரங்கள் மிக விருந்தும் இந்தியாவில் மைசூர், பெங்களூர் ஆன இரண்டு இடங்களிலுமுள்ள தொழிற்சாலைகளில் வருஷாவருஷம் 800 (டன்) எடையுள்ள மரமே தைலமெடுக்க உபயோகப்படுத்தப்படுகின்றது. ஆனால் மைசூர் சமஸ்தானத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் பெங்களூர் கைத்தொழிற் சாலையினர் சுதேச ரசாயன ஆராய்ச்சியில் அதிக ஊக்கங்கொண்டுள்ளார்.

S. V. வரதராஜய்யங்கார், சரஸ்வதி நிலையம், உறையூர்.

---

## பிழை திருத்தம்.

பிரபவஹு ஆனிமீ வெளிவந்த நமது ஆனந்தபோதினி சஞ்சிகை 575-ம் பக்கம் 'பிரபஞ்ச அனுபவம்' என்னும் தலையங்கத்தின்கீழ் 'கிணற்றுநீர் குளிர்காலத்தில் மிகக் குளிர்ச்சியாயும், கோடைகாலத்தில் மிகவும் வெதுப்பாயும்' என்று தவறுதலாகப் பிரசுரித்திருப்பதை 'கிணற்றுநீர் வெயிற்காலத்தில் மிகக் குளிர்ச்சியாயும், குளிர்காலத்தில் மிகவும் வெது வெதுப்பாயும்' என்று திருத்தி வாசிக்கவும்.

ப-ர்.



# மாணவர்பகுதி

## ஆத்திசூடி உதாரணக் கதைகள்.

(556-ம் பக்கத் தொடர்ச்சி.)

### "குணமது கைவிடேல்"

"குணமது—(நல்ல) குணத்தை, கைவிடேல்—(நீ) கைவிடாதே" என்பது இதன்பொருள்.

மனிதர், தருமநூல்களிற் கூறிய நீதிகளின்படி அடக்கம், செய்ந்நன்றியறிதல் முதலியவற்றைக்கொண்டு நடத்தலே நல்ல குணமாம்; அவற்றினின்றுந் தவறி நடப்பது கெட்டகுணமாம். நல்ல குணத்தைக்கொண்டிருப்பவர் எப்பொழுதும் நன்மையே அடைவர்; கெட்ட குணத்தைக்கொண்டவர்கள் கேடடைவர். இவ்வாறு நற்குணத்தைக் கைவிட்டவர்கள் கேடுற்ற கதைகள் சிலவுண்டு: அவற்றில் ஒன்று இதனடியில் வருவதாம்.

ஓர் ஏழைக்குடும்பத்தில் மலையப்பன் என்னும் ஒரு சிறுவன் இருந்தான். அவன் வறுமையால் மெலிந்தவன். பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்தான். பணக்காரர் ஒருவர், தம்முடைய பெண்ணுக்கு அவனை மாப்பிள்ளையாக்கக்கருதி அழைத்துப்போய் வீட்டோடு சேர்த்து அவனுக்கு உயர்ந்த உடைகள் தைத்துக்கொடுத்து நல்ல சாப்பாடும்போட்டு ஆங்கிலமும் கற்பித்து வந்தார். தரித்திரத்தில் மூழ்கிக்கிடந்த அவனுக்கு இந்தச் சௌகரியங்கள் ஏற்படவே மிகுந்த தற்பெருமை யுண்டாயிற்று. அவன் எவரையும் மதிக்காமல் பேசத்தொடங்கிவிட்டான். கல்விகற்ற பெரியோர் வார்த்தைகளையும் எடுத்தெறிந்துபேசி, அவர்களோடு வீண் வாக்குவாதம் செய்துவந்தான்; அவ்வீட்டிலுள்ள பெண்களிடத்திலும், வேலைக்காரரிடத்திலும் அதிகாரம் செலுத்தினான். தனக்குத் தெரியாத காரியங்களிலும் தலையிட்டு எல்லாம் தெரிந்தவன்போல் நடக்க ஆரம்பித்தான். காரியங்களில் அனுபோகமுள்ள அறிஞரிடத்திலும், 'உங்களுக்கொன்றும் தெரியாது' என்று அவர்களைத் தாழ்த்திப் பேசுதலை மேற்கொண்டான். முடிவில் தன்னை ஆதரித்துத் தனக்குப் பெண் கொடுக்க நினைத்திருக்கும் அந்தத் தனவந்தரையும் அவமதிக்கத்தொடங்கி, ஒருநாள் பெண்கள்கூட்டத்தின் மத்தியிலிருந்து தன்னை அவர்கள் மதிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், "அவருக்கென்ன தெரியும்? அவர் கருநாடகப் பேர்வழி; துணிகூடச் சரியாகக் கட்டமாட்டார்; நான் வந்தபிறகல்லவா இந்த வீட்டுக்காரியங்கள் ஒழுங்காயின ; நான் மாத்திரம் இங்குவந்து சேராதிருந்தால் இந்த வீடு வீடாகத் தெரியுமா? சுடுகாடாகவல்லவா தெரியும் ; இங்கே நாகரிகமுடைய மனிதர் எட்டிப் பார்ப்பாரா

அவருடைய நற்காலமே என்னை இங்குக்கொண்டுவந்து சேர்த்தது" என்று கையோடு கையறைந்து பேசிக்கொண்டிருந்தான்.

அப்போது அவ்வீட்டுக்காரர் மறைவில் நின்று அவன் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். அவனுடைய அகங்கரிப்பான பேச்சுக்களைக் கேட்கவே அவருக்கு அளவில்லாத கோபமுண்டாய்விட்டது. அதனால் அவர், "ஓகோ! கஞ்சியும் கிடைக்காமல் கண்கலங்கித் திரிந்த இவனுக்கு நல்ல உணவும் உடையும் அகப்படவே இரத்தமூறி அகங்காரம் அதிகரித்துவிட்டது; குப்பையிற் புரளும் நாயை மெத்தையில் படுக்கவைத்தால் அது எல்லோரையுமே அவமதித்துக் குலைக்கும்; இவனுக்கு முன் நிலைமையே தக்கது; இவனைத் துரத்திவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும்" என்று உடனே அவனெதிரில் போய், "'என்னடா பயலே! உன்னாலா எனக் குயர்வுண்டாயிற்று?" என்று அவனைக் கேட்டார். அவன் "ஆம்; நான் இங்கிருந்து ஆங்கிலங் கற்றுத் துரைமார்களைப்போல் உடையணிந்து உலவுவதனாலேயே உமக்குச் சிறப்புண்டாயிற்று; நானில்லாவிட்டால் உம்மை நாய்கூடச் சட்டைபண்ணமாட்டாது" என்று வெகு முறுக்காய்ப் பேசினான். அவர் பல்லைக் கடித்துக்கொண்டு, "தரித்திரம்பிடித்த சண்டிப்பயலே! என்னுடைய பணமல்லவா உன்னை இவ்வாறு பேசச் செய்திருக்கிறது; உன்னுடைய செருக்கை நீ வெளியிற்சென்று காட்டு பார்க்கலாம்" என்று அவனுக்கு நான்கு சவுக்கடி கொடுத்து அப்பொழுதே அவனைத் துரத்திவிட்டார். மறுநாளே அவனுக்குச் சோற்றுக்கு வழியில்லாமற் போயிற்று. மீண்டும் அவன் தரித்திரத்தால் வருந்தித் தயங்கினான்.

(தொடரும்.) சேம்பூர். வீ. ஆறுமுகஞ்சேர்வை.

## பெஞ்சமின் பிராங்க்லினின் குணாதிசயங்கள்.

பெஞ்சமின் பிராங்க்லினின் சரித்திரம் உறங்கிக் கிடக்கும் மனதைத் தட்டியெழுப்பும் தன்மையுடையது; படிக்கப் படிக்கத் தெவிட்டாத பான்மையது; புது ஊக்கத்தையும், புதிய உற்சாகத்தையும் அளிக்க வல்லது. 'முயற்சி திருவினையாக்கும்' என்பதை நன்கு நிரூபிக்க பெஞ்சமினின் சரித்திரம் உபயோகமானது.

பெஞ்சமின் 1706-ம் வருஷம் ஜனவரி மீ 6உ ஜோஸியா பிராங்க்லின் என்பவருக்கும், அபியாபால்கர் என்னும் அவரது இரண்டாவது மனைவிக்கும் பத்தாவது குழந்தையாக வட அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரில் பிறந்தார். இவர் தாய் தந்தையர் மிக்க ஏழைகளானபடியினால் அவர்கள் பெஞ்சமினைப் பத்துவயதிற்குமேல் படிக்கவைக்க முடியாதவர்களாயினர். ஆயினும் பெஞ்சமின் தம் விடாமுயற்சியால் கல்வி பயின்று உலகம்



மெச்சும் உத்தமராய்த் துலங்கினார். இது நம்தேசத்து மாணவர்கள் கவனித் துணரத்தக்கது.

பெஞ்சமின் தம் சிறுவயதிலேயே பொதுநலப்பிரியரா யிருந்தாரென்பதற்கு ஒரு அத்தாக்ஷி காண்கிறது: சேறு நிறைந்த குட்டையிலிறங்கி மீன் பிடித்த அநேகர் அவதிப்பட்டதையறிந்த பெஞ்சமின், தம் தோழரைத் துணைசேர்த்துக்கொண்டு ஒருவர் வீடுகட்ட நிமித்தம் வாங்கிப்போட்டிருந்த கற்களை வாரி அக்குட்டையில் போட்டு மீன் பிடிப்போருக்கு இதம்செய்து மகிழ்ந்தார். இவர், முதலில் வேறொருவருடைய கற்களை வாரிப்போடுவது குற்றமென்றுணரவில்லை. பின்னர் இவரது தந்தை யுணர்த்தியதனால் அறிந்து அவரிடம் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இவருக்குப் படிப்பிலிருந்த பிரியம் இவ்வளவு அவ்வளவு அன்று. தாகமுடையவனுக்குத் தண்ணீரில் எவ்வளவு பிரிய மிருக்குமோ, அவ்வளவு விருப்பம் பெஞ்சமினுக்குப் புத்தகத்தின்மே லிருந்தது. அப்படியிருந்தும் இவர் பத்துவயதிற்குமேல் பள்ளியில் படித்தல் முடியாமற் போயிற்று. அவ்வாறானது இவரது துரதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும். இக்காலத்திலும் தனவந்தருடைய பிள்ளைகள், கல்வியை வேப்பங்காயைப்போல வெறுத்து விருதாகோஷ்டியுடனலைவதையும், ஏழை படிக்க அவாவுற்றும் பணமின்றித் தவிப்பதையும் நாம் கண்கூடாகக் காணலாம். இஃதிக்கலிகால வியற்கையேயாம்.

பெஞ்சமின் அதிகம் கற்க முடியாமற் போகவே அதன்மேல் கல்விச்சாலை செல்வதைவிட்டுத் தம் தமையனின் அச்சியந்திரசாலையில் அச்சுக்கோக்கும் வேலையிலமர்ந்தார். அக்காலத்தில் இவர் பகலெல்லாம் வேலை செய்துவிட்டு இரவில் நெடுநேரம் கண்விழித்து நல்ல புஸ்தகங்களைப் படித்து வந்தார். புத்தகங்களில் சிறிதும் அழுக்கேறவிடாமல் அவற்றை விசேஷ சிரத்தையுடன் காப்பாற்றி வந்தார். இஃதொன்றே பெஞ்சமினின் கல்வியாவலைத் தெற்றென விளக்கும்.

பெஞ்சமின் அதன்மேல் எவ்வளவோ கஷ்ட நிஷ்டூரங்களையும், கடவுள் சோதனைகளையும் அநுபவித்துத் தமது 23-வது வயதில் ஓர் பத்திராதிபராகும் பெருமையினை யடைந்தார். அப்பத்திரிகையின் முதலிதழ் 1729-ம் வருஷம் அக்டோபர் மீ 2உ வெளிவந்ததெனச் சரித்திரங் கூறுகிறது. அப்பத்திரிகையில், அக்கிரமங்கள் செய்வோர் எத்தகையினராயினும் நடுநிலைமையில் நின்று, அவர்களுடைய துர்நடக்கைகளை இவர் அஞ்சாது வெளியிட்டு வந்தார். ஒருகாலத்தில் பிலடல்வியாவி லிருந்த சில பிரமுகர்களின் நியாயவிரோதமான விஷயங்களை, தைரியமாகத் தம் பத்திரிகையில் வெளியிட்டார். அதைக்குறித்து இவர் நண்பர்களிற்சிலர் இவரிடத்தில், "இது சரியல்ல; பெரியோரின் பகை வயிற்றுப் பிழைப்பிற்கே கேடாக முடியும்" என்று உரைத்தனர். அதைக்கேட்ட பெஞ்சமின் அவர்களுக்கு யாதொரு பதிலுங் கூறாது, ஒருநாள் அந்நண்பர்களை விருந்துக்கழைத்து, அவர்களுக்கு வாய்க்கு

வழங்காத கேழ்வரகு ரொட்டியையும், குடிதண்ணீரையும் கொண்டுவந்து வைத்தார். அவர்கள் அங்கே உயர்ந்த ஆகாரம் கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தார்கள்; ஆதலின் அந்தத் தாழ்ந்த ஆகாரத்தைக் கண்டதும் வியப்புற்று, தின்னமுடியாமல் விழித்தனர். பெஞ்சமினே அவ்வாகாரத்தை அதிக விருப்பத்துடன் உண்டுவிட்டு அவர்களைநோக்கி "நேயர்களே! இக்கேவல உணவை உட்கொள்ளும் நான் உண்மையுரைத்து உயர்ந்தோரின் பகைவந்தகாலத்தும் எவருடைய ஆதரவின்றியும் பிழைத்துக்கொள்வேன்" என்றார். பெஞ்சமினின் புத்தி சூக்ஷுமத்தையும் உத்தமசிந்தையையும் உணர்ந்தீர்களா?

இன்னும் பெஞ்சமின், தாம் எவருக்கும் எவ்வகையிலும் இன்னல் விளைப்பதில்லையென்னும் பிரதிக்ஞை செய்துகொண்டிருந்தாராம். இது எத்தகைய மேலான விஷயம்? இன்னும் இவர் காலத்தைப் பாகுபடுத்தி வீணாக்காமல் உபயோகித்து வந்தார். காலை ஐந்துமணிக்கு எழுந்து ஏழு மணிக்குள்ளாக காலைக்கடன் தீர்த்தல், பகவத் பிரார்த்தனை செய்தல், பகலில் செய்யவேண்டிய காரியங்களை நிர்ணயித்தல், படித்தல், போஜனம் பண்ணுதல் ஆகியவைகளை முடித்துக்கொள்வதென்றும், எட்டுமணிமுதல் பதினொருமணிவரையில் தொழில் செய்வதென்றும், பனிரண்டுமணிமுதல் ஒருமணிவரையில் படித்தல், வரவு செலவு கணக்குப் பார்த்தல், மத்தியான போஜனம் செய்தல் ஆகியவற்றை நிறைவேற்றுவதென்றும், இரண்டுமணி முதல் ஐந்துமணிவரையில் மறுபடியும் தொழில் செய்வதென்றும், ஆறுமணி முதல் இராத்திரி ஒன்பதுமணிக்குள்ளாக வஸ்துக்களை அவ்வவற்றிற்குரிய விடங்களில் வைத்தல், இராத்திரி போஜனம் செய்தல், சங்கீதம், வேடிக்கை, விநோதம், அல்லது சம்பாஷணை இவற்றில் பொழுது போக்கல், அன்றைய சம்பந்தமாய் ஆத்மபரீக்ஷை செய்தல் முதலியவற்றை முடித்துக்கொள்வதென்றும், இரவு பத்துமணியிலிருந்து காலை நான்குமணிவரையில் நித்திரை செய்வதென்றும் தினசரி வேலைத்திட்டங்களை வகுத்துக்கொண்டு அவ்விதமே நடந்து வந்தாராம். இவ்வழக்கம் எவ்வளவு சிலாக்கியமான விஷயம் என்பதை ஒவ்வொருவரும் அறியவேண்டும். இவருடைய இப்பழக்கத்தை யநுசரித்து நாமும் நேரங்களையும் வேலைகளையும் வகுத்துககொண்டு அவ்வண்ணமே ஒழுகிவரின் உத்கிருஷ்டமான வாழ்க்கையை அடையலாம்.

பெஞ்சமின் பிராங்க்லினிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய விஷயம் அவரது சலியா முயற்சியேயாகும். இவர் தம் சிறுபருவத்தில் கல்வி கற்கப்போதிய சாதனம் எதுவுமில்லாதிருந்தும், இவர் கல்விகற்ற விதம் மிகவும் அதிசயிக்கத்தக்கதே. வறுமையும், கஷ்டமும் தம்மைப் பிணித்தும் மனம் சலிப்புறாமல், ஊக்கத்துடன் கல்வியைக் கற்று மேதாவியென யாரும் புகழத்தக்க மேன்மையுற்ற பெஞ்சமினின் சரித்திரம் மாணவர்க்குக் கர்ணாமிர்தமாம். படிப்பினாலேயே மனிதன் உயர்நிலை பெறலாம் என்பதை பெஞ்சமின் தம் சரித்திரத்தால் நன்கு விளக்கிச் சென்றனர். உழைப்பின் வாரா உறுதிகளுளவோ?

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (குமரகுருபரர்.)

T. S. குழந்தைவேலன், திருவானைக்கா.




## "பெரியோர் இலக்கணம்"

ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்த ஸ்தாபகராக எழுந்தருளியிருந்த உடையவரது முக்கிய சிஷ்யரான அனந்தாழ்வார் என்னும் பெரியாரொருவர் 'அடைபவர் தீவினைமாற்றி அருடரும்' திருவேங்கடமெனும் திருமலையில் பகவானுக்கு கைங்கர்யம் செய்துகொண்டிருந்தார். அவ்வேளையில், பட்டர் எனும் ஆசார்யர் ஒருவரின் சீடர் ஒருவர், திருமலையடைந்து 'ஸ்ரீ வைஷ்ணவ லட்சணம்' எப்படிப்பட்டது?' என்று அவ்வனந்தாழ்வாரைக் கேட்டலும், அவரும் அதனை அறிவிக்கின்றோமென்றுகூறி, ஆறுமாத காலமாக தம்மிடத்தில் அவரை இருத்திக்கொண்டார். அதுவரை அனந்தாழ்வார் திருமாளிகையிலேயே பணிசெய்துவந்த அச்சீடர், தமது வினாவுக்கு பதில் கிடைக்கும் நாள் எந்நாளோ என்று, எதிர்பார்த்துக்கொண்டு வந்தார். ஓர்நாள் அவ்வில்லத்தில் சில பெரியோர்கள் அமுதுசெய்யுமளவிலே, அனந்தாழ்வார் அச்சீடரை ஓரிடத்திலிராதபடி பெயர்த்துப் பெயர்த்துப் பின்னடியிலும் இடம் போதாதென்று கிளப்பி அதன் பின்னடியிலே இருமென்று வைத்தலும், அவரும் சற்று மனவருத்தமின்றி, மிக்க பொறுமையுடனும் மகிழ்வுடனும் பொழுதுபோகும் வரையில் உண்ணாது காத்திருந்தார். அவரது பொறுமைகண்டு அகம் மகிழ்ந்த அனந்தாழ்வாரும், அச்சீடரைத் தம்முடன் வைத்துக்கொண்டு அமுதுசெய்து, அவரைநோக்கி "நீர் இவ்விடம் போந்து நெடுநாளாயிற்று. இனி, உமது ஆசிரியர் பட்டரிடம் செல்வீராக" என்று கூறி, ஸ்ரீ வைஷ்ணவ லட்சணமாவது,

| | |
|---|---|
| 1. கொக்கைப் போலிருக்கும்; | 3. உப்பைப் போலிருக்கும்; |
| 2. கோழியைப் போலிருக்கும்; | 4. உம்மைப் போலிருக்கும்; |

என்று உபதேசித்து, விடைகொடுத்தனுப்பினர்.

அப்பொன்மொழிகளின் பொருளறியாத அச்சீடர் தமது ஆசிரியராய பட்டரை அடைந்து, அவற்றின் உட்பொருளை உணர்த்தியருளுமாறு வேண்டி நின்றார். அவரும் பின்வருமாறு அருளிச்செய்வாராயினர்:—

### 1 கோக்கைப்போல இருத்தலாவது.

"கொக்கு, மிக்க வெண்மைநிறமாக இருப்பதுபோல ஸ்ரீ வைஷ்ணவன் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் கள்ளமின்றி, தூய்மைமிக்க உள்ளத்தை உடையவனாக இருப்பான். மற்றும், அப்பறவை குளம் முதலிய விடங்களில் பொறுமையோடு காத்திருந்து சிறிய மீன்கள் கரைக்கு வரும்போதெல்லாம் அவற்றைப் புறக்கணித்து, தனக்கு விருப்பமான பெரியமீன் கரையை அணுகியவுடனே, சடக்கெனக் கவ்விக்கொள்ளும் இயல்புடையது. அதுபோல, வைணவனும் தனது வாணாளில் நண்பர், உறவினர் முதலிய பலரோடுங் கலந்து பழக நேர்ந்தாலும், புளியும், அதன் ஓடும் போன்றும், தாமரையிலைத் தண்ணீர்போன்றும் அத்தகையவரோடு கலந்தும் கலவாது வாழ்ந்திருந்து, தன்னை உய்விக்கும் உத்தமரான சற்குரு வந்து தோற்றப்படில், அவரது சரணாரவிந்தங்களையே உபாயமாகப் பற்றிக்கொண்டு ("செவிக் குணவில்லாத போழ்து—சிறிது—வயிற்றுக்கு மீயப்படும்"—என்ற குறளுக்கிணங்க) வயிற்றுக் குணவு அளித்தலிலும், செவிக்கு விருந்தளித்தலே

சிறந்ததென்பதை உணர்ந்து, அவ்வாசிரியரிடத்திலிருந்து, 'உயிர்க்கு உறுதி பயக்கும்' உண்மைப்பொருள்கள் பலவற்றையும் கேட்டு, நன்னெறி மேற்கொண்டு ஒழுகுவான்.

### 2. கோழியைப்போல இருத்தல்.

கோழியானது குப்பையைக் கிளறி, தனக்கு உணவாகக் கிடைப்பனவற்றை எடுத்துக்கொண்டு, தானும் உண்டு தனது குஞ்சுகட்கும் ஊட்டும் இயல்புடையது. அதுபோல, ஸ்ரீ வைஷ்ணவனும் பலவித குழப்பங்களை விளைவிக்கும் சாத்திரக் குப்பைகளைத் துருவியாராய்ந்து துன்பப்படாது, நான்மறைகளிலுள்ள அரும்பொருள்களை விவரிப்பனவும், மனதிற்குத் தெளிவான பொருள்களைப் போதிப்பனவும், பக்தியை ஊட்டுவனவுமாய திருவாய்மொழி முதலிய தமிழ் வேதங்களை ஓதி, அவற்றின் அர்த்த விசேஷங்களை அறிந்து தானும் ஆனந்தித்துப் பிறருக்கும் உபதேசித்து உள்ளம் உவப்பான்.

### 3. உப்பைப்போல இருத்தல்.

உப்பானது, ஒரு பதார்த்தத்தில் கலக்கப்பட்டபோது, தான் கரைந்து போய்விட்டாலும், அப்பதார்த்தத்தை உருசியுள்ளதாக்குகின்றது. மற்றும், தான் அழிய மாறியும் தன்னை உபயோகிப்பவர்கட்கு உவப்பை அளிக்கும். அதன் உருவமே அழிந்து, அப்பதார்த்தத்தில் இரண்டறக் கலந்துபோய் விடும். அதுபோல, ஸ்ரீவைஷ்ணவனும் ஆடம்பரவாழ்வைத் துறந்து, தன்னை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அடக்கமாக வாழ்ந்துவந்தாலும், தனது சீடர்கள் பெரும்புகழ்பெற்று விளங்குவதற்குக் காரணமாயிருப்பான். (பெரிய நம்பிகளையும், அவரது சீடர் உடையவரையும், ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸரையும், அவரது சீடர் விவேகானந்த சுவாமிகளையும் நினைவு கூர்க.) மற்றும், தான் பல துன்பங்களை அனுபவித்தாலும், தன்னைச் சார்ந்தவர்களிடத்தில் மிக்க சந்தோஷமாகவே நடந்துகொள்வான். இவ்வாறு, கீர்த்தியையும் ஆடம்பரத்தையும் விரும்பாமல் ("பெருக்கத்துவேண்டும் பணிதல், சிறிய—சுருக்கத்துவேண்டும் உயர்வு"—என்ற குறளுக்கிணங்க) 'யான் எனது' என்னும் செருக்கை ஒழித்து, இறுதியில் இறைவனோடு இரண்டறக்கலப்பான"— என்று பொருள் விளக்கி யருளினர்.

பின் பட்டரும் அச்சீடரை நோக்கி, அனந்தாழ்வார் திருமாளிகையில் நடந்த செய்தியைக் குறித்து வினவுதலும், அவரும் அங்கு நிகழ்ந்தனவற்றை விவரமாக விளம்பினர். அதன்பின், பட்டரும் கீழ்வருமாறு பகரத் தொடங்கினர்:—

### 4. உம்மைப்போல இருத்தலாவது :

" உம்மை அவ்விடத்தில் போஜனகாலத்தில், ஓரிடத்திலிராவாறு இடம் விட்டு இடமாகப் பலவிடங்களிலும் பெயர்த்துப் பெயர்த்து அலக்கழித்தும், கொஞ்சமும் மனவருத்தமின்றி மிக்க மகிழ்ச்சியோடும் பொறுமையோடும், நீர் பொழுதுபோகும் வரையில் காத்திருந்தீரன்றோ ? அவ்வாறே, வைணவனும் தன்னைப் பிறர் எவ்வளவு துன்புறுத்தினும் ("இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண, நன்னயம் செய்துவிடல்—"என்ற குறளுக்கிணங்க) சிறிதளவும் சினமேனும் வருத்தமேனும் கொள்ளாது, பொறுமையோடு சகித்திருந்து, தன்னைத் துன்புறுத்தியவர்களையும் வெட்கச் செய்வான்."

**குறிப்பு:**—இவை, மணிப்ரவாள நடையிலுள்ள 'ஸ்ரீ வைஷ்ணவ லக்ஷணம்' என்னும் சிறு நூலிலிருந்து, நண்பர்கட்குப் பயன்படுமாறு பற்பல சீர்திருத்தங்களோடு எளியநடையில் எழுதப்பட்டது.

**ஆ. வ. பதுமநாபபிள்ளை, "திருமகள் நிலையம்" ஆரியூர்.**

சிவமயம்




(547-ம் பக்கத் தொடர்ச்சி.)

### எறிபத்தநாயனார் புராணத்தின் சில விசேடக் குறிப்புகள்.

புட்பப்பணிவகை.

" கொண்டு வந்து தனியிடத்தி னிருந்து கோக்குங் கோவைகளு
மிண்டைச் சுருக்குந் தாமமுட னிணைக்கும் வாச மாலைகளுந்
தண்டிற் கட்டுங் கண்ணிகளுந் தாளிற் பிணைக்கும் பிணையல்களு
நுண்டா திறைக்குந் தொங்கல்களுஞ் சமைத்து நுடங்கு நூன்மார்பர்.
(முருகநாயனார் புராணம்-9.)

" ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைந்த காலங் களினமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பினொடுஞ் சாத்தி வாய்ந்த வர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார் பரமர் பதிகப் பற்றான
வோங்கிச் சிறந்த வஞ்செழுத்து மோவா நாவி னுணர்வினர்.
(முருகநாயனார் புரா-10.)

" குய்யமொன் றுரைக்கே மாதிநா யகனுக் கொருபலங் குளிர்புன லாட்டி
வைகிர வரையா மத்தொருவில்வந் துளபமா மையினிழைத் தணிந்தோர்
தையலோர் பாகன் பதத்தினைச் சேர்வர் சத்தியஞ் சத்திய மதனுக்
கையுற விலைமுக் காலுமீ துண்மை யருட்குரு வனுமரு ளினனால்.
(கருவூர்ப்புரா-67.)

**இவ்வாறு ஏற்ற புட்பங்களை ஆராய்ந்தே எடுத்துச் சாத்தவேண்டுமென்பதற்குப் பிரமாணம்:—**

" இன்னவாமெனு நாண்மலர் " (பெரியபுராணம் திருமலைச்சிறப்பு-22)
" கொங்குசேர் குழற்காமலர் கொய்திட " (ஷை - 23)
" என்னையாட்கொண்ட வீசனுக்கேய்வன-பன்மலர் " (ஷை - 26)

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், **வாலையாநந்தம்.**

---

### ஓர் வினா.

### பௌர்ணமி பூசை.

இதனை எதற்காக, எவ்விதம் செய்யவேண்டுமென்பதைப்பற்றியும், இது எந்நூலில் சொல்லப்பட்டிருக்கிறது? இதன் பயன் என்ன? என்பதைப் பற்றியும் தெரிந்த நண்பர் நமது போதினிமூலமாய் வெளியிடக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சந்தா நெ. 9596, **M. கந்தசாமிப்பிள்ளை.**

# விசூவியஸ் எரிமலையின் சரித்திரம்



(சுமார் 35-வருடங்களுக்கு முன் விசூவியஸ் எரிமலை இருந்த உருவம்.)

இப்பெயர் பெற்ற மலையானது ஐரோப்பா கண்டத்துத் தீபகல்பங்களில் ஒன்றாகிய இத்தாலியாதேசத்தின் ஓர் மாகாணமான காம்பேனியாவில் நேபில்ஸ் குடாவின் கீழ்க் கரையில் ஆகாயத்தை யளாவி நிற்கின்றது. இதைச் சுற்றிலும் உள்ள நாடோ சற்றேறக்குறைய 20 நூற்றாண்டுகளாக நாகரீகம் பெற்றுக் கீர்த்தியடைந்த ஜாதியாரால் குடியேறப்பட்டுள்ளது. இம்மலை, எரிமலைகளென்பவை எவ்விதத்தவையென்று சாமானியமாய் ஜனங்கள் அறிந்துகொள்ள, ஓர் உதாரணமாக உதவுகின்றது. அதன் கொதிப்புகளைக் குறித்த சரித்திரமோ, பூமியின் உட்புறத்திலுள்ள விசேஷ உஷ்ணத்தைக் குறித்தும், அவ்வுஷ்ணமானது, எரிமலைகளின் வெந்நீர் ஊற்றுக்கள், உஷ்ண ஆவி கக்கும் பிளவுகள் முதலிய இவைகள் மூலமாக வெளியேவரும் விவரத்தைப்பற்றியும், அதனோடு வெளியாகும் வஸ்துக்கள் முதலியவற்றைக் குறித்தும் பூமிலக்ஷணசாஸ்திரங்களின் பிரகாரம் நிரூபிக்க, வேண்டிய சங்கதிகளைக் காட்டி யிருக்கின்றது. இம்மலையின் உயரம் அப்போதைக்கப்போது இதில் உண்டாகும் கொதிப்பின் பிரகாரம் மாறுபாடடைந்து வருகிறது. சிலசமயங்களில் உண்டாகும் வெடிப்பில் மலையின் மேற்புறம் தகர்க்கப்பட்டுச் சின்னபின்னமாக்கப்படுவதால் உயரம் குறைவதுமுண்டு. சிற்சிலசமயங்களில் வெடிப்பின் காரணமாக வெளியே கக்கப்படும் கற்குழம்பு பாறைத்துண்டு முதலியவற்றால் உயரம் அதிகமாவதுமுண்டு. ஆயினும் இம்மலையானது சமுத்திரமட்டத்திற்கு ஏறக்குறைய 4000 அடிக்கு மேல் இருப்பதாகச் சொல்லலாம். வடபக்கத்தில் ஏறக்குறைய 3747 அடி உயரமுள்ளதும் அர்த்தமண்டலமாய் வளைந்ததுமான ஓர் குன்று தற்காலத்தில் கொதிப்பெடுக்கும் பாகமாகிய குவிந்த வடிவுள்ள குன்றை அர்த்தாகாரமாய் வளைத்துக்கொண்டு சரிந்த வண்ணமாய் கீழ்நோக்கிச் செல்கின்றது. மாண்டி சொம்மா என்று சொல்லப்படும் இந்தச் செங்குத்துப்பாகமானது பூர்வீகத்தில் இம்மலையில் இருந்த ஒரு பெரிய உலைவாயின் சுற்றுப்பக்கத்துச் சுவராயிருக்குமென்று தோன்றுகிறது. ஆனால் இப்பழமைவாய்ந்தது தற்



காலத்திய உலைவாயிலிருந்து கக்கப்படும் கற்கள் முதலியவற்றால் தூர்ந்து போய் வருகிறது. முற்காலத்தில் இந்த எரிமலை மிகவும் பெரியதா யிருந்திருக்கலாமெனவும், அப்போது நேர்ந்த ஒரு பெரிய கொதிப்பினால் மேல் பாகம் உடைக்கப்பட்டுச் சின்னபின்னமாய் உருமாறி இப்போது இருக்கும் சிறிய உருவத்தை அடைந்திருக்கக்கூடுமென்றும் ஊகிக்கவேண்டி யிருக்கிறது. இம்மாதிரி சின்னபின்னமாயிருந்த இந்த மொட்டை மலையின் சுற்றுப்புறங்களில்தான் பூர்வீக கிரேக்கர்கள் நவீனமாய் வாசஸ்தானங்கள் ஏற்படுத்திக்கொண்டு குடியேறினார்கள். கிறிஸ்து பிறந்த ஆரம்பத்திலும் அதற்குமுன் அநேக நூற்றாண்டுகளிலும் இம்மலையானது வெடித்துக் கொதிப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. சரித்திரத்தில் ஏற்பட்ட இதன் முதற் கொதிப்பு கிறிஸ்து பிறந்த 79-ம் வருஷத்தில் உண்டாகியது. இக்கொதிப்பு உண்டாகியபின் இந்த மலையிருந்த உருவை இதனடியில் காட்டியிருக்கும் படத்தில் காணலாம். படத்தின் வலதுபுறத்தில் பழையமலையின் சற்றே தாழ்ந்த பாகத்தின்பேரில் குவிந்த வடிவமுள்ளதாய்த் தோற்றுவதே மேற்கண்ட கொதிப்பினால் மலையிலிருந்து வெளியேவீசி எறியப்பட்ட கற்குழம்பு பாறை முதலியவற்றால் உண்டான புதியகுன்று. இச்சிறிய குன்றை ஒழித்து நோக்கில் கிரேக்கர் இந்த மலையைச்சுற்றிலும் குடியேறியகாலத்து அதற்கு இருந்த உருவை ஊகிக்கலாம்.

விசூவியஸ் எரிமலை தற்காலத்தில் காணப்படும் காட்சியை, மேலே இவ்வியாசத் தொடக்கத்தில் காட்டப்பட்டிருக்கும் படத்திற் காணலாம். ஆதியில் விசேஷ பூசாரமுள்ள இம்மலைச் சரிவுகளில் திராக்ஷைத் தோட்டங்களை ஏராளமாய் விருத்திசெய்தும், மலையின் அடிவாரத்தைச் சுற்றிலும் அநேக கிராமங்களையும் பட்டணங்களையும் ஏற்படுத்தி விருத்தி செய்தும்வந்த கிரேக்கர் இந்த விசூவியஸ் மலையினிடத்து இருந்த எரியுந்தன்மையைச் சற்றேனும் முன்னே அறிந்திலர் போலும். அன்றேல் அவர்கள் அவ்வெரிமலையின் வாய்க்கு இரையாக, நாடுநகரங்கள் முதலியவற்றை அவ்விடத்தில் ஏற்படுத்தியிருக்கமாட்டார்கள். புற்றில் கொடுநாக மிருக்கிறதென்று அறிந்தும் அதனுட் கைவிடுவாருமுண்டோ? அக்காலத்தில் அதிக புத்தி கூர்மையும் அவதானமுமுள்ள பூகோள சாஸ்திரியாகிய டிஸ்டிராபோ என்பவர் இந்த மலையின் குவிந்தவடிவம் எரியுந்தன்மையால் உண்டாயிருக்கக்கூடியதென்றும், இதன்பாறைகள் அக்கினிசம்பந்தத்தால் மழுங்கியிருக்கக்கூடுமென்றும் சந்தேகித்து எழுதி யிருக்கிறார். இவர் சொல்லியிருப்பதைக்கொண்டும், இன்னும் அக்காலத்திலிருந்த உரோம, கிரேக்க, கிரந்தகர்த்தாக்கள் சொல்லியிருப்பதைக்கொண்டும் விசூவியஸ்மலைச் சார்பானது கிறிஸ்து பிறப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்னிருந்து அதிக செழிப்பாய் பயிரேற்றப்பட்ட வளமுள்ள பூமியாயிருந்ததென்று தெரியவருகிறது. ஆனால், இம்மலையின்சிகரமோ பயிர்பச்சை யொன்றுமில்லாமல் பாழாய் நாற்புறமும் கரடுமுரடான பாறைச் சுவரால் சூழ்ந்து விடுதியான சாம்பல் நிறைந்துள்ள பள்ள நிலமாயிருந்தது.

## கி. பி. 79-ம் வூத்தில் நேரிட்ட பெருங்கோதிப்பு.

இந்த எரி மலையானது வெகுகாலமுதற்கொண்டு கிறிஸ்து பிறந்து 63 வருஷங்கள் வரையில் யாதொரு சேஷ்டையு மில்லாமலிருந்து திடீரென்று ஆர்ப்பாட்டஞ்செய்யத் தலைப்பட்டது. 63-ம் வருஷத்திற்கு அப்பால் சற்றேறக்குறைய 16-வருஷங்கள் வரையில் பூகம்பங்கள் விசேஷமாய் உண்டாகிச் சுற்றுப்பக்கத்துக் கிராமங்களுக்கும், பட்டணங்களுக்கும் அதிக கஷ்டத்தையும் கேட்டையும் உண்டாக்கின. இம்மலையிருக்கும் காம்பேனியா மாகாணமுழுமையும் ஜனங்கள் அதிக பீதியடைந்திருந்தார்கள். இவ்வதிர்ச்சி

களால் மலையடிவாரத்திற்கு மேற்புறத்திலிருந்த எர்குலானியம் என்னும் பட்டணமும் தென்கிழக்கிலிருந்த பாம்பியை என்னும் நகரமும் வெகுவாய் நாசமாக்கப்பட்டன. பாம்பியைப் பட்டணத்திலிருந்த ஒரு பெரிய கோவிலானது அஸ்திவாரமுதற்கொண்டு ஒரே குலுக்காய்க் குலுக்கப்பட்டுப்



(கி. பி. 79-ம் வருஷத்திற்கு பிற்பாடு விசூவியஸ் எரிமலை இருந்த உருவம்.)

பொடிப் பொடியாய் இடிந்துவிழுந்தது. "மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை" என்னும் வாசகத்தின் உண்மையை நாம் அனுபவசித்தியா யுணர்ந்து அதிக மின்னல் இடிமுழக்கம் இவைகளெல்லாம் உண்டானபிற்பாடு மழை தாரை தாரையாய்ப் பொழியப் பார்த்திருக்கிறோமல்லவா? இதுமாதிரியாகவே எரிமலை கொதிப்பெடுக்கத் தொடங்குமுன் அதன் வரவை மனிதர்க்கு முன்னரே அறிவிப்பதுபோல பூமியின் அதிர்ச்சியும் உட்புறத்தில் இடிமுழக்கம்போன்ற சத்தமும் உண்டாவது வழக்கம். 16-வருஷங்களாய் இவ்விதமாக பூகம்பங்களின் கொடுமையும், கெடுதியும் காலம் செல்லச்செல்ல அதிகரித்துப் பிற்பாடு 79-ம்வரு ஆகஸ்டு 24-ம்உ மலைமுடியில் ஓர் பெரிய வெடிப்பெடுத்துக் கொதிப்புண்டாகி அகோரமான தீமைகளை விளைவித்தது. இதனால் நேரிட்ட நஷ்டமோ, உலகசரித்திரத்தில் இதுகாறும் மானிடருக்கு நேர்ந்ததாகக் குறித்திருக்கும் பெருங்கேடுகளில் ஓர் பெரிய அவகேடாய்க் காணப்படுகிறது. இதனால் விளைந்த தீமைகளை இச்சரித்திரத்தை அறிந்தோர்கள் நினைக்க இன்னமும் நடுங்குவார்கள். இக்கேட்டினால் சுற்றுப்பக்கங்களில் குடியேறியிருந்த ஜனங்களுக்கு நேர்ந்த துன்பத்தைக்குறித்தும், இதன்காரண காரியங்களைக் குறித்துப் பரீக்ஷித்து அறிய முயன்ற 'ப்ளினி' என்ற அக்காலத்திய பண்டிதர் ஒருவர் இந்தக் கொதிப்பில் உண்டாகியபுகையால் மூச்சுத் திணறி மாண்டதைப்பற்றியுமுள்ள விவரங்கள், அவர் சகோதரியின் புதல்வராகிய மற்றொரு ப்ளினி என்பவரால் டாஸிடஸ் என்னும் ஓர் சரித்திராசிரியருக்கு எழுதப்பட்டிருந்த இரண்டு கடிதங்களால் நன்கு விளங்குகின்றன. அக்கடிதங்களின்கருத்தை யாவருமறியச் சுருக்கமாகப் பின்னர் எடுத்துரைப்பாம்.

(தொடரும்) A. R. M. உடையப்ப செட்டியார்.




"மாதரும் ஆடையும்."

செல்வஞ் செழித்ததெனப் பல்வேறு தேசத்தாராலும் புகழப்பட்டு அவர்களுடைய படை எழுச்சிகளுக்கும் காரணமாயிருந்துவந்த பொன்னி நாடாம் நம் தாய்நாடு இதுபோழ்து மிடிமையால் பீடிக்கப்பட்டிருப்பதற்குக் காரணங்கள் எண்ணில. அவற்றில் நவீன நாகரீகத்தால் மயக்குண்ட பெண்டிர் அணியும் ஆடையும் முக்கியமான ஒரு காரணமாம்.

நம்மில் இருபாலரும் உண்டு உடுக்கவேண்டியது மிக்க ஆவசிகமே எனினும், ஆயிரக்கணக்கான ஆடவரும் பெண்டிரும் உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி அனுதின உபவாசர்களாய் வெய்யில் மழை பனி முதலியன தங்கள் மெய்யில் தாக்க, சத்திரத்திலோ சாலையின் ஓரத்திலோ மண்ணிலோ மரநிழலிலோ கைகால்களை முடக்கிக்கொண்டு படுத்திருக்க, கடவுளருளால் சிறிது செல்வம் பெற்றவர்கள் மாத்திரம் அளவுக்கு அதிகமாக அனாவசியத்தில் உண்பதும் உடுப்பதுமாயிருந்து தமக்கும் தேசத்திற்கும் வறுமையை உண்டாக்குவது மிக்க கொடிது.

இவ்வாறிருப்பதில் சாதாரணமாய் ஆடவர்களைவிட மாதர்களுக்கே அதிக அளவுள்ள ஆடைகள் வேண்டியிருக்கின்றனவென்பது யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. அப்படியிருப்பதிலும் அவர்கள் விலையேறப்பெற்றனவும் உறுதியற்றனவும் மெல்லியனவுமாகிய ஆடைகளையே வாங்கி அணியவேண்டும் என்று விரதம் பூண்டிருக்கின்றனர். அத்தகைய மாதரின் செயலே மிகுதியும் கெடுதிக்குக் காரணமா யிருக்கின்றது.

தென் இந்தியாவிலே கல்யாணம் என்ற பேச்சுப் பேசும் முன்னே முகூர்த்தச்சேலை என்னவென்று கேட்பது பழக்கமாய்விட்டது. சொற்ப ஜீவனம் உடையவர்களும், அஃதில்லாது மாதம் பத்து அல்லது பதினைந்து ரூபாய் சம்பளம் பெறும் சிறு உத்தியோகஸ்தர்களுங்கூட மணமகள் ஆடைக்குமாத்திரம் குறைந்தது ரூபா 200 - செலவிடவேண்டி யிருக்கிறதெனின் சற்று வலுவானவர்களின் செலவை நாம் சொல்லவும் வேண்டுமோ! இக்குறைந்த தொகையாகிய ரூ. 200 செலவிட மாப்பிள்ளைவீட்டார் மனம் கோணினால் மணமகள் மனமுங் கோணிவிடுகிறது; விவாகம் நின்றுவிடும் போல் தோற்றுகிறது. ஆகவே ஒன்றும் பேசாமல் "கடன்கொண்டும் செய்வன செய்தலைக் காண்டல் இனிது" என்னும் தங்களுக்கானதோர் பழமொழியை அவர்கள் சிரமேற்கொண்டு அதனிமித்தம் கடன்படுகின்றனர். இவ்வாறு கடன்பட்டு வாங்கிய கினாவர் கொட்டடியோ, இங்கிலீஷ் கொட்டடியோ, மற்றும் விலையுயர்ந்த தெதுவோ அதனை விவாகத்தன்றும் ஒரு வரு

ஷத்தில் வரும் முக்கிய இரண்டொரு விசேஷங்களிலுமட்டுமே அணியச் சமயம் நேரிடுகின்றது. அவைகளை வைப்பதற்காக அவைகள் வாங்கப்படும் போதே முதலுக்கு வட்டி கொடுக்கவேண்டியது அவசியமாதல்போல் இரண்டு அல்லது மூன்று வராகனுக்கு எஃகுப்பெட்டி (Steel trunk) ஒன்றும் சீர் வரிசைகளோடு வாங்கப்படுகிறது. பிறகு அத்தகைய புடவைகள் அவற்றிற்கு வேண்டிய வாசனைத் திரவியங்களோடு பெட்டியை அலங்கரிக்க உதவுகின்றனவே தவிர இவர்களை அலங்கரிப்பதில்லை. ஒரு சிலர் தங்களைப் பிறர் மதிக்கும்படி அப்புடவைகளை யுடுத்து அலங்கரித்துக்கொள்ள விரும்பினாலும் அவர்களின் மாமி நாத்தி முதலியவர்களின் வாய்க்குப்பயந்து அவர்களால் அவை அணியமுடியாமல் போய்விடுகின்றன. இரண்டொரு வருஷம் ஆகிவிட்டாலும் அல்லது அவர்கட்குச் சந்ததி ஏற்பட்டுவிட்டாலும் "கொட்டடி முதலியவைகள் கட்டிக்கொள்ள நாம் இன்னும் சின்னஞ் சிறியவர்களா!" என்று அவர்கட்கு ஒரு வெறுப்பும் ஏற்பட்டுவிடுகிறது. பெண் சந்ததியுள்ள மற்றும் சிலர் குழந்தைக்கு உபயோகப்படட்டும் என்று அவற்றைப் பதனம் செய்கிறார்கள். அக்குழந்தை யுவதி யாவதற்குள் நாகரீக உலகத்தில் எவ்வளவோ நவீன சேலைகள் தோன்றிவிடுவதால் நாகரீகநாரிகள் மேலே சொல்லப்பட்ட புடவைகளை அநாகரீகமென்று விலக்க, அம்மாதும் அச்சேலைகளில் அருவருப்புக்கொண்டு அப்போது உலவும் நாகரீகச் சேலையில் நாட்டம் வைக்கிறாள். முடிவாக அப்புடவைகள் பெட்டியில் வைக்கப்பட்டு ஜீர்ணமாகின்றன என்றே செப்பலாம்.

இனி மாமி நாத்தி முதலியவர்கள் இல்லாதவர்களின் அல்லது அவர்கள் ஜம்பம் செல்லாதபடி தம் கணவரை தம்வயப்படுத்தி சுயராஜ்யம் செய்பவர்களின் செய்கைகளைத் தனித்தனி விவரிக்கின் நம்போதினி இடந்தாராது. ஆகவே சுருக்கிக் கூறி முடிப்போம்.

அப்படிப்பட்ட பெண் தேவதைகள் முற்கூறிய சேலைகளைத் தினப்படி உபயோகிக்கிறார்கள். ஆயினும் அப்பட்டாடைகள் விலை சரசமுள்ளதும், சுகாதாரத்துக் கேற்பத் துவைத்து உலர்த்தக்கூடியதும், நீடித்தநாள் உழைக்கக்கூடியதுமான பருத்திச்சேலைக் கீடாமோ? ஈசன் நாம் நோயற்றவாழ்வோடும் குறைவற்ற செல்வத்தோடும் இருக்க உன்னி நம் நாட்டைப் பருத்திச் சாகுபடிக் கேற்றவாறு அமைத்தான்.

அங்ஙனமிருப்ப அப்பருத்தி ஆடையைவிட்டு உயர்ந்த ஆடையை அநுதினமும் உடுத்தினால் அதில் அழுக்கேறுகிறது; துவைத்தால் அது கெட்டுவிடுகிறது; துவைக்காவிடினும் அழுக்கேறிக் கெடுகிறது. அந்தோ! என் செய்வது; அதனை அவர்கள் துவைத்தும் துவைக்காமலும் உடுத்தி இரண்டொரு மாதங்களில் கிழித்துவிட்டு "இப்பாழ்மனையில் நாள் என்றும் கிழமையென்றும் பொங்கலென்றும் போகியென்றும் கிடையாது; சதா இந்தப்பழுக்காத்துணிதான் கட்டித் தொலைக்கவேண்டும். பக்கத்து ஆத்து (வீட்டு) பங்கஜத்தின் ஆத்துக்காரர் சம்பளம் பன்னிரண்டுதான்; ஆனாலும் என்ன! அவள் ஒருநாளாவது விலை ரூ. 30, 40 க்குக் குறைந்த சேலைகட்ட நான் பார்த்ததில்லை; அவள்தான் பாக்கியசாலி" என்று குளக்கரைகளில் பல்லவி பாடுகிறார்கள்.

(தொடரும்) ந. வேங்கடேசன்.




## கப்பல் வியாபாரம்.

மக்களுக்குத் தேவையான உள்நாட்டில் கிடைக்காத பண்டங்களை அவை கிடைக்கக்கூடிய வெளிநாடுகளுக்குச்சென்று பெற்றுவந்துதவவும், பிறதேசத்தினருக்கு அவசியமானவற்றை இங்கிருந்து அனுப்பவும் வாணிபம் அவசியமாகின்றது. வர்த்தக முகங்களுக் கனுப்பப்படும் விவசாய—கைத்தொழிற் பண்டங்களின் விலையுடன், அவை உற்பத்தியாவதற்கான சம்பளச் செலவு, எடுகூலி, இலாபம் முதலான பலவகைச்செலவு, மூலதனஸ்தருடைய குமாஸ்தா சம்பளம், மஹிமை, வியாபாரச்சாலையின் வாடகை, வரி, சுங்கம் இவைசேர, அவற்றை வாங்கிவிற்கும் வியாபாரிகள் அதற்குமேல் மேற்கூறிய விவரப்படி செலவுகளைத் தாமும் ஒருமுறை சுமத்திப் பின்னர் வழங்குவர். இது வியாபார முறை.

வாணிபம் கடல் வியாபாரம் (கப்பல் வியாபாரம்) தரை வியாபாரம் என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பண்டங்களை அந்நியநாடுகளுக்கு வியாபாரநிமித்தம் தரைமார்க்கமாகக்கொண்டு செல்ல இயலாவிடில் நதிகளின் வாயிலாகவோ, அல்லது கடல் வழியாகவோ வியாபாரிகள் முறையே படகுகளிலும் மரக்கலங்களிலும் ஏற்றி அனுப்புவர். நீர் வீழ்ச்சிகளில்லாத நதிகளின்மூலமாகவும், பாறைகளில்லாத சமுத்திரப்பாதைகளின் வழியாகவும் மரக்கலங்கள்செல்லும். தவிர, உள்நாட்டிலும் வியாபாரிகள் தரைவழி அதிகச் செலவானதாதலின் நதிக்கரையிலுள்ள ஒரு பட்டினத்திலிருந்து மற்றொரு பட்டினத்திற்குப் படகுகளில் சாமான்களைக்கொண்டு செல்வது முண்டு. சமுத்திரக்கரைகளில் வியாபாரக் கப்பல்கள் தங்கக்கூடிய துறைமுகங்களுண்டு. அவற்றைக் கப்பல்களுக்குப் புலப்படுத்த ஆங்காங்கே உயரத்தில் விளக்குகள் அமைக்கப்பெற்றிருக்கும். இத்தீப ஸ்தம்பங்களைக் கலங்கரை விளக்கம் (Light House) என்பர் ஆன்றோர்.

பூர்வகாலத்தில் வாணிபம் பெரிதும் வருஷத்திற் சில மாதங்களிலே தான் நடைபெற்று வந்தது. வியாபாரக்கலங்கள் எத்திசையை நோக்கிச் செல்ல விருக்கின்றனவோ அதற்குச் சாதகமாகக் காற்று வீசும்பொழுதுதான் அவை புறப்படும். பண்டைநாட் கப்பல்கள் பாய்மரத்தை உயர்த்தி, காற்று அப்பாய்மரத்திற் றாக்குதலான் விரைந்து செல்லும் தன்மையுடையன. காற்று சிறிது திசைமாறி வீசும் பக்ஷத்தில் உயர்ந்த பாய்மரங்கள் தாழ்த்தப்பட்டு, கலங்கள் ஆங்காங்கே நின்று, கடல் கொந்தளிப்பெய்துங்கால் ஆங்காங்கே நங்கூரமிட்டுச் செல்லும். இவ்விதமாகவே பண்டைக்காலந்தொட்டு இந்திய நாட்டில் வெளிநாட்டு வியாபாரம் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரையில் நடந்துவந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே உலகமுழுதும் வர்த்தகத்திற்கே ஓர் புதிய சகாப்தம் ஏற்பட்டதென்னலாம். இந்நூற்றாண்டில் மேனாடுகளில் ஒரு புதிய உணர்ச்சிதோன்ற வாரம்பித்தது. அரசாங்க நிர்வாகங்களில் வர்த்தகர்கள் ஆதிக்கம் பெற்றனர்; நவீன ரசாயன இயந்திரங்கள் தோன்றவே, அவற்றின் உதவியால் புதிது புதிதான தொழிற்சாலைகளை

யும் தொழில் முறைகளையும் கண்டுபிடித்தனர். சுரங்கவேலை, ஆலைத்தொழில் முதலான பல தொழில்களை விரைவில் நடத்த இயந்திரங்கள் உதவிபுரிந்தன. பின்பு, இந்தியாவில் மேல்நாட்டார் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக் கொண்டு வியாபாரஞ்செய்ய வாரம்பித்தனர். முதல் முதலாக இந்தியாவுக்கு வாணிபஞ்செய்யவந்த வாஸ்கோடிகாமா என்பவர் முதலாக கிழக்கு இந்தியா கம்பெனியாரின் ஆரம்ப (ஸ்தாபன) காலம்வரை மேல்நாட்டிலும் பாய்மரக் கப்பல்களின் சாதகத்தாலேயே வியாபாரம் நடைபெற்று வந்தது. 19-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திற்றான் காற்றின் திசையையும் அனுகூலத்தையும் எதிர்பாராமல் நீராவியின் சக்தியால் செல்லக்கூடிய கப்பல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. 1825-ம் ஆண்டில் முதல் முதலாக 'எண்டர்ப்ரைஸ்' என்ற நீராவிக்கப்பல் இந்தியாவிற்கு வந்தது. இந்தக் கலம் மரப்பலகைகளால் செய்யப்படாது எஃகு, இரும்பு, துத்தநாகத்தகடுகளால் செய்யப்பட்டிருந்தது. மேல் கீழாக மூன்று அறைகளும் புதுமாதிரியாக இக்கப்பலில் அமைந்திருந்தன. இவ்விதக்கப்பல்கள் இந்தியாவுக்குக் கீழ்பாகத்திலும் நாளடைவி லோடவாரம்பித்தன. 1842-ல் "பெனின்சுலர் அண்டு ஓரியண்டல் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" யார் கல்கத்தாவிற்கும் சூயஸ் கால்வாய்க்கும் கடிதப் போக்குவரவை நடத்த ஒப்புக்கொள்ள, பின்பு சென்னை, பம்பாய், கல்கத்தா, காரச்சி முதலான முக்கிய துறைமுகங்களுக்கு நீராவிக்கலங்கள் வந்து போய்க்கொண்டிருந்தன. 1855-ல் பிரிடிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி யொன்று தோன்றி கலம் இந்தியாவின் கடற்கரை யோரமெல்லா மோட வாரம்பித்தது. இக்காலத்திலும், புகைக்கப்பல் தோன்றிய ஆரம்ப காலமாதலாலும், கப்பல்கட்டும் தொழிலாளிகளின் குறைவாலும் பாய்மரக் கப்பல் அதிகம் வாணிபத்தை நடத்திவந்தன. இதுவரையில் மேனாடுகளிலிருந்துவரும் கப்பல்கள் கேப் ஆப் குட் ஹோப் (Cape of Good Hope) வழியாக ஆப்பிரிக்காவைச்சுற்றி இந்தியாவிற்கு வந்துகொண்டிருந்தன. 1869-ம் ஆண்டில் சூயஸ் கால்வாய் வெட்டப்பட, அதனால் சீமையிலிருந்து கப்பல்கள் நேராக வந்துபோக ஏதுவேற்பட நீராவிக் கப்பல்களின் தொகை அதிகமாயிற்று; பிரயாணகாலமும் குறைந்தது.

(தொடரும்) ஸ்ரீ மாருதீ தாஸன்.




## டைபாயிட் சுரம்.

"டைபாயிட் என்னும் விஷசுரமும் அதைத் தடுக்கும் முறைகளும்" என்னும் தலைப்பிட்டு ஆனந்தபோதினி, ஆனிமாத சஞ்சிகை, 567-ம் பக்கத்தில் வெளிவந்த வியாசத்தைக் கண்ணுற்றேன். அதில் சொல்லுவது மேல்நாட்டு வைத்தியத்தின் ஓர் பகுதியாயிருப்பினும் அதைக் கண்ணுறுபவர்களுக்குச் சில சந்தேகங்கள் நிகழக்கூடும். அச்சந்தேக நிவர்த்தியாகும்படி சில விஷயங்களை விளக்கிக் காட்டுவாம். கிருமிகளின் பெருக்கே டைபாயிட் சுரம் என்றால், சுரம் வந்த 22 நாளில் சுரம் விட்டுவிடுகின்றதே; கிருமிகள் விருத்தி



யடைவதாயும், தொத்துவதாயும் அதில் சொல்லும் முறைகள் பூராவும் ஒப்புக்கொண்டால் 22 நாட்கள் என்பது பொருத்தமல்லவே; அனுபவத்தில் 22 நாளில் சுரம் நீங்குகின்றது. மேல்நாட்டார் சொல்லுவதுபோல் கிருமிகளால் சுரம் உண்டாகிறது என்றால் மேற்சொல்லிய சுரத்தில் கிருமிகளைக் கொல்லு ஔடதங்கள் உபயோகித்து வியாதியைத் தடுக்கலாமல்லவா? அப்படி மேற்படி கிருமிகளைக் கொல்ல நாளிது வரையில் மருந்துகள் கண்டு பிடித்து அனுபவத்திலில்லாததால் மேற்படி சுரத்திற்கு மேல்நாட்டார் சொல்லும் கிருமிகள் காரணம் என்பது பொருந்தாது. நம் தேகத்தில் எல்லா பாகங்களிலும் எல்லா வியாதிகளிலும் கிருமிகள் எப்பொழுதும் நிறைந்துள்ளன என்பது சகலரும் உணர்ந்த விஷயமே. புதிதாய் இப்பொழுது மேல்நாட்டார் எல்லா வியாதிகளுக்கும் கிருமி பரிசோதனைசெய்து, இரத்தத்திலும் கோழையிலும் மலத்திலும் விருத்தியடைந்திருக்கும் கிருமிகள்பால் என்ன விஷம் அதிகரித்திருக்கின்றதோ அதற்குத் தக்கபடி வியாதியைக் கணிக்கின்றார்கள். இக்கணிதமானது நோய் வந்த பிறகு கணிக்கக்கூடியது. இக்காரியத்தைக் கொண்டு நோயின் காரணத்தைச் சொல்வது பொருந்தாது. நோயின் ஆரம்பத்தில் கிருமிகள் கிடைக்கமாட்டா; முதிர்ச்சியில் கிருமிகள் மலிந்து கிடக்கும். இத்தகைய சோதனையைக்கொண்டு நோயின் காரணங்களைச் சொல்பவர்களின் அபிப்பிராயம் முற்றும் பொருத்த மற்றதெனத் தெளிவுபடச் சொல்ல முடியுமானாலும் வளருமென அஞ்சி இத்துடன் நிறுத்திக் கீழ்நாட்டின் அந்நோயின் காரணங்களையும் அதைத் தடுக்கும் முறைகளையும் சிறிது கூறுவோம்:—

"டைபாயிட்" என்பதை மேல்நாட்டார்கள் இரண்டு விதமாகக் கூறுவார்கள். அவை "டைபாயிட்" 1, "டைபஸ்" 2, என்பவையாம். இதையே நம்மவர் சன்னிபாதசுரம், அதிசார சன்னிபாதசுரம் எனச்சொல்லி, அவற்றையும் சூட்சுமமாகப் பிரித்து வாத சன்னிபாதம், பித்த சன்னி பாதம், சிலேத்ம சன்னிபாதம் எனவும், இவையன்றி வாத பித்த சிலேத்ம தொந்த சன்னிபாதமெனவும், மகா சன்னிபாதமெனவும் கூறியுள்ளார்கள். அவற்றிற்குக்காரணங்களையும், அவற்றின் கால அளவுகளையும், சிகிச்சைகளையும் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கின்றார்கள். வாத சன்னிபாதம் முதல் மகா சன்னிபாதம் வரையில் சொல்லியவற்றைக் கால அளவுகளால் 7 நாள் சன்னிபாதம், 9-நாள் சன்னிபாதம் 13 நாள் சன்னிபாதம், 22 நாள் சன்னிபாதம், 40 நாள் சன்னிபாதம் எனப் பிரித்தார்கள். அவற்றில் மேல் நாட்டார்கள் 13 நாள் சன்னிபாதமும், 22 நாள் சன்னிபாதமும், 40 நாள் சன்னிபாதமும் கண்டு பிடித்து எழுதியுள்ளார்கள். 7 நாள், 9 நாள் சன்னிபாதங்களைக்கண்டு பிடிக்காததற்குக் காரணம் என்னவெனில் சன்னிபாதசுரத்தில் 10 நாள்களுக்குமேல் தான் கிருமிகளின் பரீட்சை ஏற்படுவதால், அதற்குள் குணமாய்விடும் அவ்வை சுரங்களைக் கணிக்க முடியாமல் விட்டுவிடுகின்றார்கள். இதனாலும் மேல்நாட்டின் முறைப்படி 10 நாட்கள் சுரம் அடித்துக் கிருமிகள் மலிந்த பிறகுதான் அதைச் சன்னிபாதம் என்று அவர்கள் கண்டு பிடித்துச் சிகிச்சை செய்து வருகின்றார்கள். நம்மவர்களின் விதியோ நோய் கண்ட 3 நாளில் கண்டு பிடிக்க ஏதுவாயிருக்கின்றது. அதைப்பற்றிய விஷயங்கள் பூராவும் இங்கு எழுதவேண்டுமானால் ஒரு புஸ்தகமாய் விடக்கூடும். ஆதலால் இத்துடன் நிறுத்திக்கொண்டு அவ்வியாதியைப்பற்றிய அவசியமான சில விஷயங்களை மட்டும் எழுதி இவ்வியாசத்தை முடிப்பாம்.

அதிசார சன்னிபாதமானது மலப்பையில் உண்டாகும் ஓர்வித இரணமாகும்; இச்சுரத்திற்கு வயிற்றுப்போக்கும் இருக்கும். சன்னிபாதமானது

அடிவயிற்றில் உண்டாகும் இரணம் என்று தெரிந்துகொள்ளவேண்டும். இது, உட்பிரிவுகளால் 7, 9, 13, 22, 40 நாள் சுரங்கள் எனப் பிரிக்கப்படுகின்றது. மேற்படி சுரம் வருவதற்குக் காரணங்கள் பலவுண்டு. உஷ்ணம் அதிகரித்து, உஷ்ணபேதிகண்டு, அவற்றிற்குச் சரியானபடி சிகிச்சை செய்யாமல் விடுவதாலும், உஷ்ண ஆகாரங்களை உட்கொண்டு வருவதாலும், அதி போகத்தாலும், வெட்டை வியாதியின் அதிகரிப்பாலும், மற்றும் அநேக காரணங்களாலும் மேற்சொல்லிய பாகத்தில் இரணம் உண்டாகின்றது; அவ்விரணம் உண்டான நாளிலிருந்து ஆறுவதற்கு மேற்சொன்னபடி பலநாட்கள் செல்லுகின்றன. இந்நோயின் ஆரம்பத்திலும் முடிவிலும் காணப்படாத டைபாயிட் கிருமிகள் மத்திய காலங்களில் காணப்படும். அக்கிருமிகளை இதற்குக் காரணம் என்று சொல்லுவது பொருத்தமாகாது. ஆனால் பெரிய மேதாவிகளான மேல்நாட்டு வைத்திய நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்ட முறைப்படி கிருமிகளின் விஷயத்தால், நோயை இன்னதென்றுகண்டு சொல்லக்கூடுமென்பது வாஸ்தவமேயானாலும் இதற்கு அதே காரணம் என்று சொல்லுவது பொருந்தாது. ஆனால் சன்னிபாத சுரமுள்ளவரின் சம்பந்தத்தால் அது தொத்தக்கூடும் என்பது ஒருவகையில் பொருந்தும் எனினும், அதுவும் நம் ஆசாரத்தால் இந்தியருக்குப் பொருந்தாதெனவே உறுதியாய்ச் சொல்லலாம். அதன் விஸ்தாரத்தை நோயணுகாவிதியில் கூறப்போவதலால் இம்மட்டோடு நிறுத்திக்கொள்வோம்.

(தொடரும்.) **டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.**

## தேச நன்மையைப் பற்றிய ஓர் விண்ணப்பம்.

ஸகோதர, ஸகோதரிகளே! இப்பொழுது நமது இந்திய தேசத்தின்கண் எங்கு பார்த்தாலும், "சுதேச முன்னேற்றம், தேசமுன்னேற்றம்," என்னும் பேரொலி பரவி நிற்கிறது. இங்ஙனம் உலகில் பலர் "சுதேச முன்னேற்றம்" என்று சொல்லி வந்தாலும், அதற்குரிய வழிகளில் நடக்கிறவர்கள் நூற்றில் ஒருவராக இருக்கின்றனர். எதிலும் ஒத்துழைத்தால் தான் சகல காரியமும் சித்திக்கும். தற்பொழுது மகாத்மா காந்தியின் வழிகளை அனுசரிப்பவர்கள் வெகு சிலரே. இவ்விதம் இருந்தால் நம்முடைய நாடு முன்னேறுவதெப்படி? தற்கால நாகரீக வாலிபர்கள் பாம்பீச் ஸூட்டும், பாப்லின் ஷர்ட்டும் அணிகிறார்களே தவிர கதராடையைக் கண்கொண்டு பார்ப்பதுகூட இல்லை. பெண்மணிகளோ "மஸ்லின் புடவை வாங்குவோமா? பவுடர்கள் வாங்குவோமா? இன்னும் என்ன புதுமாதிரி ஸோப் வந்திருக்கிறது?" என்று எண்ணமிடுகிறார்களே தவிர கதர் என்னும் பேச்சை எடுப்பது அரிதாக இருக்கின்றது. இவ்விதம் இருப்பவர்களால் நம்தேசம் செழித்து, நாம், நம்முடைய சுதந்தரங்களைப் பெறுவதெப்படி? இது நாம் வானத்து அம்புலியைப்பிடிக்கப் பிரயத்தினம் செய்வதுபோலிருக்கிறது. ஆகையால் பாரத செல்வர் செல்விகளே! இனியாவது மகாத்மா காந்தியின் வழிகளை அனுசரித்து நடவுங்கள். பாரதமாதாவின் வறுமையை அகற்றுங்கள். தாயைக் காப்பாற்ற வேண்டியது தனயர்களின் கடமை அல்லவா? ஆகையால் இவ்விஷயத்தில் தாமதம் செய்யாதீர்கள்.

**மைதலிபாய்.**

## உரை மணி மாலை.

மிகவும் ருசியுடன் கூடிய உணவை ஒருவனாக உண்ணுதல் ஆகாது. முக்கியமான விஷயங்களில் தனது யோசனையையும் தீர்மானத்தையும் மட்டும் நம்பி எவனும் நடத்தலும் கூடாது. தூரதேசம் போவோன் துணையின்றிச் செல்லுதல் ஒருபோதும் தகாது.

* * *

ஒருவனை நாசம் பண்ணக்கூடிய வஸ்துக்கள் பல இம்மண்ணுலகினில் இருந்தபோதிலும் அவற்றில் முக்கியமாகக் கருதப்படுபவை 'பரஸ்திரீகமனம், களவு, நண்பர்களைத் தள்ளுதல்' என்ற மூன்றேயாகும்.

* * *

பிறரை நம்பு; அவர்களும் உன்னை நம்புவார்கள். அவர்களைக் கௌரவமாக நடத்து; நீயும் மரியாதையாக நடத்தப்படுவாய்.

* * *

தனது நிலைமைக்குத் தக்கவாறு தன்னால் கூடியவரையில் எவனொருவன் ஒரு காரியத்தைச் செய்கிறானோ அவனே அக்காரியத்தை அதிக சிலாக்கியமாகச் செய்தவனாகிறான். ஆனால் அதேகாரியத்தை, அதிக தனம் படைத்திருந்தும் அதற்குத் தக்கபடி ஒரு தனவந்தன் செய்யாமற்போவனேல் அதைவிட இழிவு வேறொன்றுமில்லை.

* * *

கடவுள் எல்லா வஸ்துக்களிலும் இருக்கிறார்; அதி அற்புதமான சிருஷ்டிகளுக்குக் காரணபூதரும் அவரே. ஆனால் அவர் இவ்வித ஆச்சரியகரமான வஸ்துக்களெவற்றிலும் பிரஸன்னமாக இருப்பதில்லை. காருண்யமும், தயையும் தர்மசிந்தனையும் குடிகொண்ட கபடமற்ற ஹிருதயங்களிலேயே அவர் எப்பொழுதும் பிரஸன்னமாய் விளங்குகிறார்.

* * *

பிறரது சந்தோஷத்தைக்கண்டு நாமும் களிப்புறுதல் வேண்டும். பிறர் சங்கடப்படும்போது நாம் சிரிப்பது மகத்தான பாபத்தை யுண்டுபண்ணும்; அது மகா பாபகரமான செய்கைகளில் ஒன்றாகும்.

* * *

ஒரு வஸ்துவின் உண்மையான தன்மைகளை அறியவேண்டுமானால் அது அதன் இடத்திலிருந்தால்தான் முடியும். இருக்கவேண்டிய இடத்தில்தான் ஒன்றின் உண்மையை உள்ளபடி உணருவது சுலபமாகும்.

* * *

ஆயுளின் அருமையைத்தெரிந்த எவனும் பயன்தரத்தக்க நேரத்தை வீணாகக் கழிக்கமாட்டான்.

* *

நமது தேகங்களே தோட்டங்கள். நமது இஷ்டங்களே தோட்டக்காரர்கள்.

* * *

தனக்குக் கெடுதி நேரிடாவண்ணம் அதைத் தடுத்துக்கொள்பவனே புத்திமானாவான். தன்னையும் மீறிவரும் கஷ்டங்களைப் பொறுமையுடன் தாங்கி, அவற்றினின்றும் பெருமையுடன் நீங்குவோனே ஸாமர்த்தியவானாவான்.

**வ. கிருஷ்ணஸ்வாமி சர்மா.**

# அறிஞரின் அமுதமொழிகள்.

(12-ம் தொகுதி 574-ம் பக்கத் தொடர்ச்சி.)

90. A healthy beggar is infinitely happier than a sickly millionaire *Sir W. Arbuthnot Lane.*

நோயுடன் கூடிய கோடீஸ்வரனைக் காட்டிலும் நோயற்ற பிச்சைக்காரன் எத்தனையோ பங்கு மேலானவனுவன். (நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்) **(சர். அர்பத்நட்லேன்)**

91. Many great men might have been personally miserable without their good wives *Miss Edith Shackleton.*

அநேக பெரிய மனிதர்கள், தங்களுக்கு நற்குணமுள்ள மனையாட்டி வாய்க்காததால், துன்புறுதல் கூடும்; அதாவது அவர்களுடைய இல் வாழ்க்கையானது சந்தோஷமற்றதாகிறது. **(எடித் ஷாக்கில்டன்)**

(இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
யில்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்—மூதுரை)

92. Most of our ill-health is caused by our folly *Mr. T. Ellis Backer.*

நம்முடைய அஜாக்கிரதையே நம்முடைய பெரும்பான்மையான தேக அசௌக்கியத்திற்குக் காரணமா யிருக்கின்றது. **(டி. எல்லிஸ் பேக்கர்)**

93. No woman can train a boy in habits of manliness *R. J. Anderson.*

ஒரு பையனை ஆண்மையுடையவனாகச் செய்தற்கு எந்தப் பெண்பிள்ளையாலும் இயலாது. ("பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்") **(ஆர். ஜெ. அன்டர்சன்)**

94. The truth of to-day is the lie of to-morrow *Professer A. M. Low.*

இன்றைக்கு உண்மையா யிருப்பது நாளைக்குப் பொய்யாய் விடுகிறது. **(அறிஞர். எ. எம். லோ.)**

95. The glories of our blood and state
Are shadows, not substantial things;
There is no armour against fate;
Death lays his icy hands on kings *J. Shirley.*

நம் பிறப்பின் மேன்மையும் அந்தஸ்தும் நிலைபெற்றிராமல் நிழலைப்போல் மறைந்துவிடக் கூடியனவாம். விதியைத் தடுக்கக்கூடிய கவசம் (இவ்வுலகிலே) கிடையாது. எமன் சாதாரண மனிதர்களை மாத்திரமல்லாமல் மன்னாதி மன்னர்களையும் இழுத்துச் செல்லுகிறான். **(ஜெ. ஷேர்லி)**

(தொடரும்.)

**A P. இராமன், B. A.**

ஆங்கிலக்கவி லார்ட் டெனிஸன் இயற்றிய
'ஆர்தர் மரணம்' என்னும் செய்யுளில் கூறிய

# பிரார்த்தனையின் மகத்துவம்

"The old order changeth, yielding place to new,
And God fulfils Himself in many ways,
Lest one good custom should corrupt the world.
Comfort thyself: what comfort is in me?
I have lived my life, and that which I have done
May He within Himself make pure! but thou,
If thou shouldst never see my face again,
Pray for my soul. More things are wrought by prayer
Than this world dreams of. Wherefore, let thy voice
Rise like a fountain for me night and day.
For what are men better than sheep or goats
That nourish a blind life within the brain,
If, knowing God, they lift not hands of prayer,
Both for themselves and those who call them friend?
For so the whole round earth is every way
Bound by gold chains about the feet of God."

(*From Tennyson's Morte d'Arthur*)

இங்கிலாந்து தேசத்தில் ஆர்தர் என்ற ஓர் அரசரின் வரலாறு வழங்கி வருகிறது. அவர் மிகவும் பலாட்டியராயும், யுத்த முறைகளில் கைதேர்ந்தவராயும் இருந்தார். அவரும் அவருடைய யுத்த வீரர்களும் அபாரமான காரியங்களைச் செய்துவந்தார்கள். கடைசியில் ஏற்பட்ட ஓர் யுத்தத்தில் அவருடைய இராணுவ வீரர்களில் சர் பெடிவர் என்ற ஒருவர்தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்துவிட்டார்கள். ஆர்தர் அரசருக்கும் மரணகாயம் ஏற்பட்டு அவர் மரணத்தறுவாயிலிருந்தார். அப்போது அவர், சர் பெடிவரைக் கூப்பிட்டு அவரிடம் தம் கையிலிருந்த பட்டாக்கத்தியைக் கொடுத்து அருகிலிருந்த ஏரியில் அதைப் போட்டுவிட்டு அங்கே நடக்கும் விஷயங்களைத் தம்மிடம்வந்து கூறும்படி கட்டளையிட்டார். அக்கட்டளையை ஏற்ற சர் பெடிவர் அப்பட்டாககததியின் வனப்பையும் அதில் இழைக்கப்பட்டிருந்த நவரத்தினக்கற்களின் ஜொலிப்பையுங் கண்டு அதைத் தண்ணீரில் போட மனந்துணியாமல் ஆங்கோரிடத்தில் ஒளித்துவிட்டு இரண்டுமுறை அவ்வரசரை ஏமாற்றப்பார்த்தார். அரசர் அதறகுமேல் கோபமூண்டு அவரைக் கொல்ல யத்தனித்தார். அப்போது சர் பெடிவர் நோயச்சென்று அந்தப்பட்டாக கத்தியை மேற்கூறிய ஏரியில வீசி எறிந்தார். எறிந்தவுடன் ஏரியினின்று திடீரெனக் கைஒன்று தோன்றி அதைப்பறறிக்கொண்டு உள்ளே போய்விட்டது. அவ்வற்புதத்தை அவர் அவ்வரசரிடஞ் சொன்னார். அரசர் தம்மைத் தூக்கிக்கொண்டு ஏரிக்கரைககுப் போகும்படி அவருக்குக் கட்டளையிட்டார். அவரும் அஙஙனமே அவரைத் தூககிசசென்றார். அங்கே ஒரு படகில் மூன்று இராணிகள் வந்து அரசரை வரவேற்று அழைத்துச்சென்றார்கள். அப்போது சர்பெடிவர் அரசரைப்பார்த்து 'என்னைவிட்டுச் செல்கிறீர்களே; எனகதி என்ன? புதிய உலகத்தில் புதிய மனிதர்களிடை நான் காலங்

கழிக்க வேண்டியதாயிற்றே' என்று பிரலாபிக்கலானார். அப்போது ஆர்தர் படகிலிருந்தபடியே, மேற்காட்டிய ஆங்கில கவியில் உள்ள வார்த்தைகளைக் கூறினார். அவற்றின் கருத்தாவது:—

"'பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே'
என்ப துலகத் தியற்கையா மதனால்
பழமை யானவோர் பழக்கநன் றாயினும்
பின்வருங் கால பேதத் தாலது
மாறியே தீதாய் வருதலுங் கூடும்
அவ்வகை மாற்றத் தாலிவ் வுலகம்
கலங்கி டா திருக்கக் கடவுளே அனேக
காரியங் களைமனக் களிப்புடன் மாற்றிப்
புதுமையா வமைத்துப் பூதலம் போற்றுவர்.
ஆதலால் இதனைநீ அறிந்தே தெளிவாய்.
நானுனக் காறுதல் நவிலுவதென்னே!
முடியுமென் வாழ்க்கையோ முடிந்ததிவ் வுலகில்
நான்புரிந் தவையெலாம் நல்லன வாகக்
கடவுள் தாமே கருணைசெய் திடுவார்.
இனியெனைக் காணுதல் இயலா துனக்கே
ஆதலால் என்றன் ஆன்மா நற்கதி
அடையப் பிரார்த்தனை அன்பாய்ப் புரிவாய்.
இவ்வுல கதனில் இனிதுசித் திக்கும்
இரவும் பகலும் என்றனக் காகச்
செய்துகொண் டிருஅத் திருப்பிரார்த் தனையை.
பின்னும்நீ செய்யுமப் பிரார்த்தனை ஊற்றென
வற்றா தென்றும் வளர்வ தாகுக.
மனிதர் தமக்கும் மற்றநண் பர்க்கும்
வேண்டு நலம்பெற மெய்ப்பிரார்த் தனையைப்
பண்ணு விடிலோ பகுத்தறி வுடனே
கூடும்அன் னவர்க்கும் கூறுமவ் வறிவிலா
ஆடுமா டெட்கும் ஆம்வித்தி யாசம்
யாதுகொல் எல்லா விதத்திலும் இப்பெரும்
பூமி பிரார்த்தனைப் பொற்சங் கிலிகளால்
கடவுளின் கழலுடன் கட்டப் பட்டு
விளங்குகின் றதுநீ மீண்டுபோ யுனது
கடமையைச் செய்து களிப்புறு வாயே."

என்பதாம்.

இதனால், உலகத்தில் எப்பேர்ப்பட்டவர்களும், எத்தகைய செயல்களும் மறைந்து காலந்தோறும் புதிய மனிதர்களும், நவீனச் செயல்களும் தோன்றுதல் உலக இயற்கையென்பதும், இவற்றைக் கடவுளே உண்டாக்குகிறாரென்பதும், ஆதலின், பழய மனிதரும் செயல்களும் மறையும்போது அவரைச் சார்ந்துள்ளார் வருந்தலாகாதென்பதும், அவர், மறைந்தவர்க்கும் தமக்கும் நன்மை தரும்படி கடவுளைப் பிரார்த்திக்கவேண்டுமென்பதும், அப் பிரார்த்தனையால் எல்லா நலங்களும் உண்டாகுமென்பதும், தெய்வ பிரார்த்தனையில்லாதவர் மிருகங்களுக்கு நிகராவாரென்பதும் விளங்கும்.

**ம. இராஜகோபாலபிள்ளை.**




## விநோதக் கூற்று.

**சா**கப்போகின்ற நிலையிலுள்ள ஒருகிழவி தன் மருமகளைக் கூப்பிட்டு "அடியே! ஒருபொட்டு நெய் ஊற்றடி! எல்லா வெண்ணெய்களையும் உருக்கி, உருக்கி உறிக்கலையத்தில் வைக்கிறாயே; சிறிது ஊற்றக்கூடாதா? என் மகன் வரட்டும் சொல்லுகிறேன்" எனக்கூறினாள். அதற்கு அவள் "சொல்லிக்கொள் பயமில்லை" யென்றாள். மகன் வந்தவுடன் தாய் நடந்தவற்றைக் கூறினாள். அதற்கு மகன் "நான்தான் நெய்யைச்சேர்த்து வைக்கச்சொன்னேன். உனக்குக் கருமாதிசெய்யும்பொழுது பார்ப்பான் எக்கியத்தில் ஊற்ற ஒருபடி நெய் கேட்பானே, நான் என்ன செய்வேன்" என்று கூறினானாம்.

* * *

ஒருவன் திடீரென்று தன்பக்கத்தில் நின்றவனை ஓங்கி அறைந்து "தடிப்பயலே! ஒரே ஒருபெண், ருதுவாகி 6-மாதமேயாயிற்று; உன் ஜாதி என்ன? குலமென்ன? நீ யார்? என்னை நடுரோட்டில் நிறுத்தி "பெண்கொடுக்க முடியுமா?" என்று என்னை எப்படிக்கேட்கலாம்?" என்று மிக்க கோபாவேசத்துடன் கூறினானாம். அடிபட்டவன்—"அடபாவமே! உன்னுடைய பாக்கெட்டில் பவுண்டன் பென் (Fountain Pen) இருந்ததைக்கண்டு சிறிது எழுதிவிட்டுக் கொடுப்பதற்காக 'பென் கொடுக்கமுடியுமா' என்று கேட்டதற்கு நல்ல புத்தி கொடுத்துவிட்டாய்" எனக்கூறி ஆங்கிலமொழியின் அருமையை நினைத்துச் சென்றானாம்.

* * *

ஒருவன் தன்னுடைய தாய்க்குத் தலைத்திதி கொடுப்பதற்காக ஒரு புரோகிதரைக் கூப்பிட்டிருந்தான். திதி கொடுத்துக்கொண்டிருக்கும் பொழுது புரோகிதர் "அரிசி 5-படி கொண்டுவா" என்றார். பையன் "எதற்காக அரிசி?" என்றான். புரோகிதர் "இறந்துபோன உன் தாய்க்கு ஒரு வருடத்திற்குப் போதுமான சாப்பாடு அனுப்பவேண்டாமா?" என்றார். பையன் உடனே 5-படி அரிசியும் கொண்டுவந்து வைத்தான். புரோகிதர் அரிசியைப் பார்த்துவிட்டு "இதென்ன புழுங்கலரிசி! பச்சரிசி கொண்டுவா!" என்றார். அதற்குப் பையன் "என் தாய் எப்பொழுதும் புழுங்கலரிசியே சாப்பிடுவது வழக்கம்; ஒருநாள் பச்சரிசிச் சாதத்தைத் தெரியாமல் சாப்பிட்டுவிட்டு வயிற்றுப் போக்கால் 10-நாள் கஷ்டப்பட்டாள். புழுங்கலரிசியைத்தான் தாங்கள் அனுப்பவேண்டும்" என்றான். புரோகிதர் "எனக்குத்தான் அரிசி, உன் தாய்க்கு அல்ல" என்று சொல்லியிருந்தாலாவது பச்சரிசி கிடைத்திருக்குமே என்று வருந்தி, புழுங்கலரிசியையும் விட்டுவிடாமல் எடுத்துப் போய் விட்டார்.

**கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை, திருச்சிராப்பள்ளி.**



# நாவல்

## கிருஷ்ணலிங் அல்லது துப்பறியும் சீடன்

(12-ம் தொகுதி 578-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமயம் உலகநாதர் திடீலென்று திடுக்கிட்டதை இன்ஸ்பெக்டர் கவனிக்காமலே "ஏதேனும் கெடுதியாவது ஆபத்தாவது நேர்ந்திருக்கலாமென்று கருதுகிறீரா?" என்றார்.

**உலகநாதர்:**—கெடுதியா? ஆபத்தா? நீர் கூறுவது எனக்கு விளங்கவில்லை.

**இன்ஸ்பெக்டர்:**—நான் கேட்டபதாவது, "யாராவது அவளைப் பலாத்காரமாய்க் களவாடிக்கொண்டு போயிருப்பார்களா? யாருக்காவது அப்படிச் செய்ய ஏதேனும் காரண மிருக்குமா?" என்று கேட்கிறேன்.

**உலக:**—எனக்குப் புலப்படவில்லை, புலப்படவில்லை. யாருக்குத்தான் அப்படிச்செய்ய என்னகாரணமிருக்கும்? என்னத்திற்காக அப்படிச்செய்ய வேண்டும்?

**இன்ஸ்:**—உமக்கு யாரேனும் விரோதிகளுளரோ?

**உலக:**—நானறிந்தமட்டில் ஒருவருமில்லை.

**இன்ஸ்:**—தங்கள் புத்திரிக்கும் யாரும் விரோதியில்லையே? அதாவது யாராவது தன்னை மணம்புரியும்படிகேட்டு அவள் மறுத்துவிட்டது உண்டோ?

**உலக:**—இல்லவேயில்லையென்று நான் உண்மையாய்க் கூறுவேன்.

**இன்:**—அவளுக்குச் சொந்தமாய்ப் பிரத்தியேக ஆஸ்தி யேதேனுமுண்டோ? யாராவது பந்துவால் அவள் பேருக்கென்று எழுதிவைக்கப்பட்டது?

இதைக்கேட்டதே உலகநாதர் மறுபடி திடுக்கிட்டார். அவர் முகம் வெளுத்துவிட்டது. "இல்லை. அவளுக்குச் சொந்தத்தில் ஒரு ஆஸ்தியுமில்லை. ஆனால் அவள் என் ஏகபுத்திரியாதலால் என் ஆஸ்திமுழுமையும் எனக்குப் பின் அவளுக்கே சொந்தமாகும். ஆயினும் அவள் இல்லாவிட்டால் அந்த ஆஸ்தி யெனக்கென்ன பிரயோசனம். ஓ! மனோன்மணி! ஓ மனோன்மணி! நீ யெப்படித்தான் மனம் துணிந்து இவ்வாறு செய்தாயோ!" என்று மிக்க துயரத்தோடு கூறினார்.

இன்ஸ்பெக்டருக்கு இன்னது கூறுவதென்று புலப்படவில்லை. அவன் சிறுபிள்ளை விளையாட்டுத்தனமாய் இப்படிச் செய்திருப்பாள் என்றே அவர் மனதிற்பட்டது. அதை வாய்விட்டே கூறிவிட்டார்.

**உலக:**—இல்லை யில்லை. அவள் அப்படிப்பட்டவளல்ல. நீர் அவளை யறிந்திருந்தால் ஒருபோதும் இப்படிக் கூறியேயிருக்கமாட்டீர். அப்படியில்லை. இதில் ஏதோ மிகவும் ஆழ்ந்த மர்மம இருக்கிறது. அவள் அப்படிப்பட்ட முட்டாளல்ல. அவள் நல்ல அறிவுள்ளவள். ஆயினும் நீர் அவளைக் கண்டுபிடித்துத் தருவீரல்லவா?



இன்ஸ்பெக்டர் சற்றுநேரம் சிந்தித்து "நீர் வெகுமதி யளிப்பீரல்லவா? ஒரு ஆயிரம் டாலர் (சுமார் மூவாயிரம் ரூபாய்) கொடுப்பீரல்லவா?" என்றார்.

**உலக:**—ஒரு ஆயிரமா, ஐயாயிரம் பத்தாயிரம் வேண்டுமாயினும் சரி; என் புத்திரிமட்டும் மறுபடி வீட்டிற்குள் வந்து சேரவேண்டும்.

**இன்ஸ்:**—அவளுடைய புகைப்படம் இருக்கிறதா?

**உலக:**—இதோ அதைக் கேட்பீரென்று கருதிக் கையில் கொண்டுவந்தேயிருக்கிறேன்.

**இன்ஸ்:**—சரி; மிக்க நலம்; இதிலிருந்து அனேகம் பிரதிகளை யெடுத்து இப்பெண்ணைக் கண்டுபிடித்துக் கொடுப்போர்க்கு இவ்வளவு பரிசளிப்பேனென்று நாடெங்கும் பிரசுரம் செய்யவேண்டும்.

இம்மொழிகளைக்கேட்டதே உலகநாதர் பீதியடைந்தவர்போல், "வேண்டாம் வேண்டாம். அப்படிச்செய்தால் பத்திரிகைகளிலெல்லாம் அவள் பெயரே யிருக்கும். அவளைப்பற்றியே யாவரும் பேசுவார்கள். ஆகையால் அவள் பெயர் வெளிவாராமல் இவ்விஷயம் இரகசியமாகவே நடத்தப்படவேண்டும்" என்றார்.

**இன்ஸ்:**—தாங்கள் கூறுவது நல்லதே. ஆனால் நான் என்ன செய்யக்கூடும்? தங்கள் கன்னிகையை இரகசியமாய் என் ஆட்கள் தேடவேண்டுமென்பது தங்கள் கருத்து. நானோ அப்படிச்செய்ய முடியாது. சட்டம் எப்படி வழிகாட்டுகிறதோ அப்படியே நான் நடக்கவேண்டும்.

உலகநாதர் துயரத்தோடு "அந்தோ! அப்படியானால் நீர் எனக்கு உதவி செய்யமாட்டீரோ?" என்றார்.

இன்ஸ்பெக்டர் திடீலென்று என்னமோ நினைத்துக்கொண்டு "அடடா! இது முன்னமே என் நினைப்பிற்கு வரவில்லை; இதினால் உதவிசெய்ய என்னால் முடியாது. ஆனால் உமக்கு உதவிசெய்யத்தக்க ஆளிடம் உம்மை யனுப்புகிறேன். உம்முடைய புத்திரியைக் கண்டுபிடிக்கவேண்டுமானால் துப்பறியும் கிருஷ்ணலிங் ஒருவரே இதற்குத் தகுதியானவர்" என்றார்.

**உலக:**—அவர் யார்?

**இன்ஸ்:**—அதைக் கூறுவது கஷ்டம். ஒன்று கூறுகிறேன். என்னால் முடியாது, எப்படியும் நான் தோல்வியடைவேன் என்று எனக்கு நிச்சயமாய்ப் புலப்பட்டால் அத்தகைய விவகாரத்தில் அவரின் உதவியை நான் கோருவதுண்டு. அப்போது நான் ஜெயமடைவது நிச்சயம்.

**உலக:**—அப்படியானால், அவரை வரவழைக்கிறீரா?

**இன்ஸ்:**—அவரை வரவழைப்பதா? ஏன் அதைவிட நமது அரசரை யிங்கு வரவழைக்கலாம். நீர் அவரிடம் செல்லவேண்டும். ஒருசமயம் அவர் இதைக் கண்டுபிடிக்க ஒப்புக்கொள்ளாமல் விட்டுவிட்டாலும் விட்டுவிடுவார். ஆனால் ஒப்புக்கொண்டாலோ கட்டாயம் உமது புத்திரியைக் கண்டுபிடித்து விடுவார் என்பது நிச்சயம். இன்னொன்று: நீர் அவரைப் பூரணமாய் நம்பவேண்டும்; அவர் மரணத்தறுவாயில் இருப்பதுபோல் தோன்றினாலும், அவர்மட்டும் ஒப்புக்கொண்டால் எப்படியாயினும் உமது புத்திரியைக் கண்டுபிடித்துவிடுவார். நீர் அவரிடம் இதை யொப்பித்துவிட்டால் உமக்கு இதைப்பற்றிச் சற்றும் கவலையே வேண்டியதேயில்லை.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

# ஆனந்த போதினியின் பயன்.

வெண்பா.

ஆனந்த போதினியின் ஆன அரும்பயனை
நானன் புடனே நவிலவே—ஆனந்தி
சத்திபெறு மூர்த்தமகசு புத்திரனை யத்திமுக
வத்தனைமி சப்பணிவே னல். (1)

ஆனந்த போதினியன் பாயிவ் வுலகமெலாம்
ஞானந் தனையெய்தி நண்ணுமுயர்—மோன
வரம்பதனைக் காண வழிகாட்டிக் கல்வி
நிரம்ப வளித்திடுங்கா ணோர்ந்து. (2)

ஆனந்த போதினியொன் றங்கை தனிலிருப்பின்
தானந் தவமுயர்ச்சி தானாண்மை—மானங்
குலைய விடாது குவலயத்தி லோங்கத்
தலையாய் விளக்கிடுமே தான். (3)

மாதர் தமக்குநன் மாணவர்க்கும் மாநிலத்தில்
ஏதமிலா யாவர்க்கும் இன்புறவே—நீதிமொழி
அன்பாய்ப் புகன்றுநமை ஆதரிக்கு மேன்மையதாம்
நன்பார்ந்த போதினி நயந்து. (4)

ஆனந்த போதினிதான் ஆர்கலிசூ ழும்புவிக்கே
ஆனந்தம் நல்கும்பே ராரார்நிதியாம்—தானன்பாய்
நல்லோர் மனைதனிலு மெய்தியிருந் தாற்பலரும்
வல்லோர்க ளாவர்மதி வாய்ந்து. (5)

பாலர் யவனப் பருவத்தி னோர்விருத்தர்
சாலப் பிணிதீர்க்கும் சஞ்சீவி—ஞாலத்திற்
கண்டிதமா யாவர்க்கும் காணமருந் தேபுகலும்
பண்டிதையாம் போதினிபண் பால். (6)

பொதுசமா சாரம் புதுமையுடன் காட்டி
மதியே விளக்கி மனதிற்—கதிசயங்கள்
மேதினியி லேயுரைக்கும் மேன்மைதிக ழானந்த
போதினியா வர்க்குமுயர் பூண். (7)

என்றுங் குறைவின்றி ஈச னருள்மிகுத்தே
என்றென்றும் வாழி யினிதாக—நன்றிபெறும்
ஆனந்த போதினியு மன்னதன்பத் ராதிபரும்
வானம் புவிபுகழ வாய்ந்து. (8)

V. V. S. S. பாலகவி. G. T. அரங்கசாமிதாஸ்.

---

## அறிவிப்பு.

தற்சமயம், நமது ஆனந்தபோதினிக்கு பர்மா, சிலோன், பினாங், சிங்கப்பூர், இந்தியா முதலிய இடங்களில் எங்களுடைய ஏஜண்டுகள் யாருமில்லை. ஆதலின், சந்தா செலுத்தியோ, வி. பி. யில் பணம் கட்டியோ சந்தாதாரராகச் சேர்வோரும் புத்தகங்களுக்கு ஆர்டர் செய்வோரும் நமக்கு நேரில் எழுதிக் கொள்ளவேண்டும். பின்னர் ஏஜண்டுகள் நியமிக்கப்படும் சமயங்களில் அவ்வப்போது அவ்விவரம் பத்திரிகையில் தெரிவிக்கப்படும்.

பத்திராதிபர்.

## வர்த்தமானப் பகுதி.

ஓர் ஆச்சரியம்:—பிரான்சு தேசத்திலுள்ள லில்ஹி எனுமிடத்தைச் சேர்ந்த வினிபிரட்டையர்னி என்னும் இரண்டாண்டுக் குழந்தை நாலு பாஷைகளைப் பேசுகிறது என்று சொல்லப்படுகிறது. பிரெஞ்சு, இங்கிலீஷ், ஜெர்மன், தற்கால கிரீக் ஆகிய இப்பாஷைகளில் கேள்விகள் கேட்கப்பட்டால் அக்குழந்தை அக்கேள்விகளுக்கு அந்தந்தப் பாஷையிலேயே தக்க விதமான பதில்களை அளிக்கிறதாம்.

* * * * * *

103-வயது வரை உழைத்தவர்:—நாட்ஸ் பிரதேசத்தைச் சேர்ந்த பார்க்ஸ்டோன்-லி. வேல் எனுமிடத்திலுள்ள ஸ்ரீமான் ஜார்ஜ் கான்ட் என்பவருக்கு இப்போது 103 வயதாகிறது. இவர், தொண்ணூற்றாறு ஆண்டுகளுக்கு முன் வேலை செய்ய முதல் முதலாக ஆரம்பித்தார். அப்போது இவருக்குத் தினமொன்றுக்கு ஒரு பென்னி வீதம் கூலி கொடுக்கப்பட்டது. இவர் இந்தத் தொண்ணூற்றாறு வருடகாலத்தைச் சுமைகள் சுமப்பதிலும் விவசாயத்தொழிலிலும் குடிசையிலுமாகக் கழித்தார். சென்ற வருடத்தில் தான் இவர் விவசாயத்தொழில் தம்முடைய வயதுக்குத் தக்கதாயில்லையென்று விட்டுவிட்டுத் தோட்டத்தொழிலில் இறங்கினார். இவர் நீண்டகாலம் இருப்பதற்குரிய காரணங்கள் வேலையும், மனக்கவலையின்மையும், இவராலேயே உண்டாக்கப்பட்ட சாராயமுமேயாம். இவருடன் பள்ளிக்கூடத்தில் படித்தவரும், நாடிங்ஹாமைச் சேர்ந்தவருமாகிய ஸ்ரீ வில்லியம் வாகர் என்பாருக்கு 105 வயதாகிறது. இவர் மேற்கூறியவரைத் தம் பிள்ளையாக மதித்து நடக்கிறார்.

* * * *

மின்சார இருதயம்:—(Electric Heart) இருதய துடிப்பு நின்றவுடன் உயிர் போய்விடுகிறது என்ற கொள்கை ஜனங்களிடை பரவியிருக்கிறது. அது அநுபவத்திற்கு ஒத்ததாகவும் இருக்கிறது. இப்போது ருஷ்யாவில் ஒரு மேதாவி கண்டுபிடித்திருக்கும் இயந்திரத்தின்படி மேற்கூறிய கூற்றும் பொய்யாகிவிடுகிறது. அவரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ள இயந்திரமானது இருதயத்தின் வேலையைச் செய்து வருகிறது. (அதாவது நின்றுவிட்ட இருதயம் துடிக்கும்படி செய்கிறது.) இறந்துபோன நாய் ஒன்றுக்கு மேற்கூறிய மின்சார இருதயம் வைத்துப் பரிசோதிக்கப்பட்டது. அந்த இருதயத்தை வைத்த சில விநாடிகளுக்கெல்லாம் நாயினுடைய இருதயமானது துடிக்க ஆரம்பித்ததாம்; ரத்தமும் நாலா பக்கங்களிலும் பரவ ஆரம்பித்ததாம்; நாய் கண்களைத் திறந்துகொண்டதாம்; அநேக மணிநேரம் உயிருடன் கூடி இருந்ததாம். அது வெளிச்சத்தையும் துன்பத்தையும் அறிந்து கொண்டதாம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரபவ௵ ஆவணிமூ—கலியுகாதி 5029, சாலிவாகனம் 1850,
பசலி 1337—கொல்லமாண்டு 1103—ஹிஜரி 1346
இங்கிலீஷ் 1927௵ ஆகஸ்டுமூ—செப்டம்பர்மூ

| ஆவணி௴ | ஆகஸ்டு௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | புத | பஞ்32-55 | ரேவ29-3 | மர60 | விஷ்ணுபதி புண்யகாலம் |
| 2 | 18 | வியா | சஷ்26-28 | அஸ்24-33 | அ24-33சி | கரிநாள், சீதளாவிரதம் |
| 3 | 19 | வெ | சப்20-58 | பர✕20-55 | சித்60 | கிருத்திகை [கடன் நீக்க |
| 4 | 20 | சனி | அஷ்16-28 | கிரு18-20 | அமி60 | அவமாகம், மாடு வாங்க |
| 5 | 21 | ஞா | நவ13-13 | ரோ16-58 | சித்60 | ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி |
| 6 | 22 | திங் | தச11-3 | மிரு16-43 | அ16-43சி | பும்சவனம், உபநயனம் |
| 7 | 23 | செ | ஏகா9-58 | திரு17-30 | ம17-30சி | சர்வமத்வ ஏகாதசி |
| 8 | 24 | புத | துவா9-55 | புன19-18 | சித்60 | பிரதோஷம், விவாகம் |
| 9 | 25 | வியா | திர10-55 | பூசம்22-5 | அ22-5சி | கரிநாள், மாசசிவராத்திரி |
| 10 | 26 | வெ | ச●12-50 | ஆயி25-45 | மர60 | சர்வத்திர அமாவாசை, நவக்கிரக சாந்திசெய்ய |
| 11 | 27 | சனி | அ15-35 | மக30-25 | அ30-25சி | குசோத்பாதினி [எழுத |
| 12 | 28 | ஞா | பிர19-28 | பூர35-58 | சி35-58அ | சந்திரதெரிசனம்,சித்திரம் |
| 13 | 29 | திங் | துதி24-13 | உத்42-20 | சித்60 | சுபமுகூர்த்தங்கள் செய்ய |
| 14 | 30 | செவ் | திரி29-43 | அஸ்46-55 | சித்60 | ஸாமவேத உபாகர்மம், சோடசோம விரதம் |
| 15 | 31 | புத | சது35-48 | சித்57-3 | சித்60 | விநாயகசதுர்த்தி |
| 16 | 1 | வியா | பஞ்42-8 | சுவா60 | அமி60 | |
| 17 | 2 | வெ | சஷ்48-5 | சுவா4-38 | சித்60 | |
| 18 | 3 | சனி | சப்53-15 | விசா11-50 | சித்60 | |
| 19 | 4 | ஞா | அஷ்57-3 | அனு18-0 | மர60 | |
| 20 | 5 | திங் | நவ59-5 | கேட்22-45 | சித்60 | |
| 21 | 6 | செவ் | தச59-5 | மூல25-38 | அ25-38சி | |
| 22 | செப்டம்பர் 7 | புத | ஏகா56-55 | பூரா26-23 | அமி60 | |
| 23 | 8 | வியா | து52-40 | உத்-24-58 | சித்60 | |
| 24 | 9 | வெ | திர46-45 | திரு21-43 | ம21-43சி | |
| 25 | 10 | சனி | சது39-25 | அவி16-45 | சி16-45அ | |
| 26 | 11 | ஞா | ○30-58 | சத10-38 | சித்60 | பௌர்ணமி |
| 27 | 12 | திங் | பிர21-48 | பூரட்3-43 உத்56-33 | ம3-43சி | அவமாகம், மாளயபட்ச ஆரம்பம் |
| 28 | 13 | செவ் | துதி12-43 | ரேவ49-35 | சித்60 | அருன்யசயன விரதம் |
| 29 | 14 | புத | திரி3-55 சது55-55 | அஸ்43-15 | ம43-15சி | அவமாகம், 6-க்குள் மழை [அபெப்புவைக்க |
| 30 | 15 | வியா | பஞ்48-50 | பர37-55 | சி37-55ம | மூலிகை உபயோகிக்க |
| 31 | 16 | வெ | சஷ்43-13 | கிரு✻33-55 | சி33-55ம | கிருத்திகை, சந்திரசஷ்டி [விரதம் |

| | | | |
|---|---|---|---|
| குரு | | | ராகு |
| — | 9உ சிம்-புத<br>14,, கன்-செ<br>15,, சிம்-வ-சு<br>24,, கன்-புத | | புத<br>சூரி செவ் |
| கே | சனி | | சுக் |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.

# ஸ்ரீமத் கம்பராமாயண
## வசன சங்கிரகம் (மூன்றாம் பதிப்பு)
(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் டை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.

☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.



ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்குமிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திரபாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்; பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்; நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்புவோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும், வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள் பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

# மலையை விழுங்கிய மகாதேவன் கதை

படிக்கப் படிக்கச் சிரிப்பையுண்டாக்குவது. அளவற்ற ஆனந்தந் தருவது. அறிவை வளர்ப்பது. சகலரும் வாசிக்கத்தகுந்தது. விலை அணா 6.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

எளிதில் பொருள் சம்பாதிக்கும் சாதனம் !
எல்லோருக்கும் உபயோகமானது !!
நூதனமானது ! விலைசரசமானது ! அதி அற்புதமானது !!
20-வது நூற்றாண்டின் அதிசயம் !
எது ?

# "வொண்டர் கேமரா" என்னும்
நூதன
# பாக்கெட் படம்பிடிக்கும் கேமரா.




இந்த வொண்டர் கேமரா அதாவது நூதன பாக்கெட் கேமரா என்னும் படம் பிடிக்கும் கருவி பிரிட்டிஷாரால் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டதாகும். இக்கருவியைக் கொண்டு பாலர் முதல், விருத்தாப்பியர் வரையிலுள்ள எல்லோருமே எவ்விதக் கஷ்டமும் சிரமுமின்றிப் போட்டோப்படம் பிடிக்கலாம். இக்கருவியை வைத்திருப்பவர்கள், ஜீவனத்திற்குக் கஷ்டப்படவேண்டியதில்லை. மாதமொன்றுக்கு இதன் மூலம் சுலபமாக ரூ. 50 முதல் 200 வரை சம்பாதித்துக் கொள்ளலாம். இதனால் பலர் அதிக இலாபம் சம்பாதித்திருக்கின்றனர். இதைக் கையில் வைத்திருப்பது திரவிய பொக்கிஷத்தைக்கைக்கொண்டிருப்பதுபோலாம்.

தனவந்தர் முதல் ஏழைகள் வரை எல்லோரும் இதை வாங்கி, இதனால் அதிக இலாபம் பெறவேண்டுமென்பதை உத்தேசித்தே இதற்கு மிகவும் குறைந்த விலை ஏற்படுத்தியிருக்கிறது. இக்கருவியை ஒவ்வொருவரும் தம் தம் இல்லங்களில் வைத்துக்கொண்டிருப்பதால் பற்பல நன்மைகளுண்டாகும். இக்கருவியோடு டிரை பிளேட்டுகள், பிரிண்டிங் அவுட்பேபர், பிக்ஸிங் சால்ட்ஸ், 'டெவலப்பிங் கெமிகல்ஸ்' என்ற போட்டோ பிடிப்பதற்குரிய சாமான்களும் அடங்கி யிருக்கின்றன. பிளேட்டில் படம் விழும் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ அங்குலம் கொண்டதாகும். இது சகாய விலைக்குக் கிடைப்பதான இந்த நல்ல சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள்.

## ஆர்டருக்கு முந்துங்கள்! முந்துங்கள்!!

இவ்விளம்பரத்தைக் கண்டவுடன் இதற்கு ஆர்டர் செய்யத் தவறாதீர்கள். இச்சமயம் தவறினால் இது இவ்வளவு குறைந்த விலையில் கிடைப்ப தரிது. இதனை உபயோகிக்கும் விவரம் பத்திரிகை பெட்டியுடன் அனுப்பப்படும்.

**இதன் விலை ரூ. 3—0—0 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.**

ஒரேதடவையில் 3. மூன்று கேமரா தருவிப்பவர்களுக்கு 1. பீடையம் பீஸ் என்னும் கெடியாரம் இனாமாக அளிக்கப்படும்.

விலாசம்: —

**என். வி. கோபால் அண்டு கம்பெனி,**
போடகிராப்பர்
நெ. 38, திருபள்ளி தெருவு,
சௌகார்பேட்டை போஸ்ட், மதராஸ்.

எமது விலாசம்:-அ. ராஜுபிள்ளை, அண்டு பிரதர், சூளை, மதராஸ்.

135 இங்கிலீஷ் தனித்தனி ரப்பர் எழுத்துக்கள் இனாம்.
5-வருட உத்தரவாதம்] ராஜு'ஸ் [ரிஜிஸ்டர் செய்தது.

## தனித்தனி தமிழ் ரப்பர் எழுத்துப் பெட்டி நெ. 5.

இந்தத் தமிழ் எழுத்துகளடங்கிய பெட்டி ஒவ்வொருவரிடமும் அவசியமாயிருக்கவேண்டியது. ஏனெனில், தங்களுக்குத் தேவையான விலாசங்கள், லேபில்கள் முதலியவைகளைத் தாங்களே அடுக்கிக்கொண்டு கார்டு, கவர், கடிதம் முதலியவைகளில் தாமே தமிழிலும், இங்கிலீஷிலும் அச்சிட்டுக்கொள்ளலாம். இந்தப் படத்தில் கண்டபடி அதாவது :— (அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ)




இம்மாதிரி தமிழ்எழுத்துகளும், தமிழ் எண்களும், இங்கிலீஷ் நெம்பர்களும், ஸ்பேசுகளும், பூக்களும் உள்பட 450-ரப்பர் எழுத்துக்கள் அடங்கிய தகரப் பெட்டி 1ம், இத்துடன் நான்கு வரிகளை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1, மைபுட்டி 1, பிரஷ் 1, சிராவணம் 1, மையூற்றிய ஸெல்ப் இங்கி பாட் 1, ஒரு லைன் டைப் ஹோல்டர் 1, ஆகமொத்த சாமான்களும் அடங்கிய தமிழ் ரப்பர் எழுத்துப்பெட்டி நெ.5. செட் 1-க்கு விலை ரூ.5-8-0. மேல்கண்ட தமிழ் ரப்பர் எழுத்துப் பெட்டி 1 வாங்குபவர்களுக்கு 'ஆனந்தபோதினி' சஞ்சிகையில் கண்டதாக எழுதினால் A B C D E இம்மாதிரியான இங்கிலீஷ் எழுத்துகளும், நெம்பர்களும் உள்பட 135 தனித்தனி ரப்பர் எழுத்துக்களை இனாமாக அனுப்பப்படும். (ஷை இங்கிலீஷ் ரப்பர் எழுத்துக்கள் மாத்திரம் வேண்டுமானால் செட் 1-க்கு விலை ரூ. 1-6-0) வி.பி. தபால் சார்ஜ் வேறு.

ராஜு'ஸ் தனித்தனி இங்கிலீஷ் ரப்பர் எழுத்துப் பெட்டி நெ. 3-A.

*A A A A a a a a a a B B B b b b b C C c c c c D*

மேல்கண்ட மாதிரியைப்போல் இங்கிலீஷ் ரப்பர் எழுத்துகளும், எண்களும், ஸ்பேஸ்களும், பூக்கள் முதலிய 250-ரப்பர் எழுத்துகள் அடங்கிய தகரப்பெட்டி 1-ம், மூன்று லைன்களை அடுக்கக்கூடிய டைப் ஹோல்டர் பிடி 1ம், மேல்படத்தில் கண்டபடி இதைச் சேர்ந்த சாமான்கள் யாவும் அடங்கிய இங்கிலீஷ் ரப்பர் எழுத்துப் பெட்டி நெ. 3-A. செட் 1-க்கு விலை ரூபா 2-8-0.

# தசாவதார ஸ்வாமி ரப்பர் ஸ்டாம்புகள்



ழ் கண்டிருக்கும் மூர்த்திகளின் வடிவங்களைக் கடிதங்கள், கார்டுகள், கவர்கள், புஸ்தகங்கள் முதலிய எல்லாவற்றிலும் தாமே அச்சிட்டுக்கொள்ளலாம். இதில் கண்ட ராம அவதார மூர்த்தியைப்போல் இதே அளவில் மச்ச, கூர்ம, வராஹ, நரசிங்க, வாமன, பரசுராம, ராம, பலராம, கிருஷ்ண, கல்கி ஆக 10 அவதாரங்களும், தவழும் கிருஷ்ணன், நிர்த்தனகிருஷ்ணனும் சேர்ந்து ஆக தனித்தனி 12-ஸ்வாமி ரப்பர் ஸ்டாம்புகளும், ஸெல்ப் இங்கிபாட் 1, பிரஷ் 1, மை புட்டி 1, ஆகமொத்த சாமான்களும் அடங்கிய தசாவதாரம் ஸ்வாமி ரப்பர்ஸ்டாம்புகள் செட் 1-க்கு விலை ரூபா 2-0-0. வி. பி. தபால் சார்ஜ் வேறு.

எமது விலாசம் :-அ. ராஜுபிள்ளை அண்டு பிரதர்,
இந்தியா ரப்பர் எழுத்துத் தொழிற்சாலை,
54, பஜார் ரோட், சூளை, மதராஸ்.

## மர்மங்கள் வெளியாய்விட்டன !

# மணவாழ்க்கையின் மர்மங்கள்

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர் வேத, யூனனி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக் கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியம்; கையி லெடுப்பதே போக்கியம் மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் கீர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலை யாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்தினவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் எம்மால் வெளியிடப்பட்ட "கோக் கோகக்கோலம்" என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மண வாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—4—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | 0 | மதனரதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 8 | 0 | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |

### வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 ரூ | 7 | 8 | சௌந்தர கோகிலம் 2 பாகம் ரூ. | 3 | 12 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கையர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

விலாசம்:—ஆரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

187485

---

இனாம்! "சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை." இனாம்!!

கையில் கட்டும் அமெரிக்கன் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் சங்கிலியும், பௌண்டன் பேனா 1-ம் இனாம். நூதனமாக வரவழைத்த எங்களின் 22-காரட் ரோல்டு கோல்டு புதுமாதிரி கைக் கெடியாரம் வாங்குகின்றவர்களுக்கு டி இனாமுடன் அனுப்புவோம். 5 வருஷ உத்திரவாதமென்று முத்திரையுள்ளது. எம்மாதிரி ஷேப் வேண்டுமானாலும் அனுப்புவோம். ரூ. 6—8—0 தபால் சார்ஜ் வேறு. F. M. S. ஆர்டருக்கு ரூ. 8—0—0 முன்பணம் அனுப்பவேண்டும்.




☞ லண்டன் வாட்ச் ஹவுஸ்,
(3) பார்க் டவுன், (P. O.) (ஆ.) சென்னை.

---

சதிபதிகளின் மர்மம் (அல்லது) மாணிடரகசிய சாஸ்திரம்.

பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்னஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யவேண்டும் என்ற விவரமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், சுகிக்கவேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும், மாதர்களுக்கு அமிர்தநிலை இருக்கும் விவரமும் அதை இன்ன விதமாய் நிலை பெயர்க்கலாமென்பதும் அகாலசேர்க்கையால் வரும் கெடுதியும், இன்னும் பல அரிய விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. கண்களைக் கவரும் அழகிய சித்திரபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1 0 0

## மாயாஜால விநோத 2000

நண்பர்களே! நீங்கள் ஆனந்தமாக இருக்க ...மானால் இப்புத்தகத்தை வாங்கிப்பாருங்கள். இதைப்படிப்பதால் இங்கிலீஷ் கைப்புரட்டு வித்தைகள், மலையாள வித்தைகள், கணித வித்தைகள், சைன வித்தைகள், பீதாம்பர வித்தைகள், பிரான்சு வித்தைகள், மூலிகை சல்லிய வித்தைகள், கண்கட்டு வித்தைகள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

அஷ்டமாசித்திகள் செய்யலாம்; வசிய வகைகள் செய்யலாம்; மணலைக் கிளறி விநாயகர் காட்டலாம்; மகேந்திரஜாலம் செய்யலாம்; இந்திரஜாலம் செய்யலாம்; பட்டணங்களைத் தோன்றச் செய்யலாம்; நினைத்த தேவர்களைக் ...டலாம்; கோகர்ண வித்தை, கண்கட்டு ஜாலம், செய்யலாம்; பாதாள ...னம் செய்யலாம்; சர்வ வசியம் செய்யலாம்; பச்சைப்பாம்பு மேய்தல் ...லாம்; பேயாட்டுதல், மாஞ்செடி முளைக்கவைத்தல், வயிற்றில் நூல் எடுப்பது, ஜால காரடி வித்தைகள், பாதாள மை ஜாலம், மாரண ஜாலம், மோடி வைக்கும் வித்தை, மனிதர்களுக்கு சிரசில்லாமல் செய்யும் ஜாலம், சத்துரு நாசமாகும் ஜாலம், காசுகள் உண்டாக்கும் வித்தை, இருட்டில் சூரியனைக்காட்டும் ஜாலம், மூப்பு செய்யும் ஜாலம், சர்வ வாத்திய ஜாலம், மணலை அல்வா செய்யும் ஜாலம், இராஜவசியம், எக்காளம் வாசிக்கும் ஜாலம், குட்டிச்சாத்தான் ஜாலம், வழக்குகள் வெல்லும் ஜாலம், பூதப்பிசாசுகளை விலக்கும் ஜாலம், சொக்குத்தூள் ஜாலம், குறி சொல்லும் ஜாலம், இவை முதலியவற்றையெல்லாம் செய்யலாம்; இவைபோன்ற அற்புத ஜாலம் 2000 இதிலடங்கியிருக்கின்றன. விலை ரூபா 1.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

### விளம்பரம்.

30-வருஷங்களாக வியாபாரம் செய்துவரும் நம்பிக்கையான இடம்.

நம்மிடத்தில் கைகோர்வை வெள்ளி அருணைக்கொடிகளும், கெங்காதரக் கொடிகளும், பட்டை அருணைக்கொடிகளும், போல் கொலுசுகளும், சாதா செயின்பட்டடிகளும், முத்து செயின் பட்டடிகளும், டைமன் பட்டை வெட்டின செயின்களும், மாம்பட்டைகொலுசுகள், சேமியா பட்டடிகள், ஒற்றைக் கம்பி கொலுசுகள், தண்டைகாப்புகள், கடகக்காப்புகள், போல்காப்புகள், அற முடிபில்லைகள், தாயத்துகள், கழுத்து பொத்தான்கள், கப்பு பொத்தான்கள், கெடியார சங்கிலிகள், மயிர்மாட்டிகள், பீலி வகைராக்கள், சாவிச்சங்கிலிகள், புதுச்சேரி அட்டிகைகளும் இன்னும் இதர வெள்ளி நகைகளும் தங்க நகைகளும் கிடைக்கும். விபரம் வேண்டுவோர் எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

கா. சு. நாராயண செட்டி அண்டு சன்ஸ், ஷராப் வியாபாரம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

# நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

**ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.**

நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண்சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0



# பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## G. W. M. REYNOLDS'

### BOLD TYPE EDITIONS.

| No. | Title | Vols. | Rs. | A. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 |
| 2. | Joseph Wilmot | 8 „ | 5 | 0 |
| 3. | Ellen Percy | 8 „ | 5 | 0 |
| 4. | Mary Price | 8 „ | 5 | 0 |
| 5. | Rye House Plot | 4 „ | 3 | 0 |
| 6. | Young Duchess | 4 „ | 3 | 0 |
| 7. | Rosa Lambert | 4 „ | 3 | 0 |
| 8. | Loves of the Harem | 4 „ | 3 | 0 |
| 9. | Margaret | 4 „ | 3 | 0 |
| 10. | Massacre of Glencoe | 4 „ | 3 | 0 |
| 11. | Virgin's Kiss | 4 „ | 3 | 0 |
| 12. | Canonbury House | 3 „ | 2 | 4 |
| 13. | Mysteries of Old London | 3 „ | 2 | 4 |
| 14. | Pope Joan | 3 „ | 1 | 12 |
| 15. | Soldier's Wife | 2 „ | 1 | 8 |
| 16. | May Middleton | 2 vols. | 1 | 8 |
| 17. | Faust | 2 „ | 1 | 8 |
| 18. | Leila | 2 „ | 1 | 8 |
| 19. | Robert Macaire | 2 „ | 1 | 4 |
| 20. | Mary Stuart | 2 „ | 1 | 4 |
| 21. | Seamstress | | 1 | 0 |
| 22. | Alfred | | 1 | 2 |
| 23. | Grace Darling | | 0 | 10 |
| 24. | Young Fisherman | | 0 | 10 |
| 25. | Agnes | 9 „ | 6 | 2 |
| 26. | Kenneth | 4 „ | 3 | 0 |
| 27. | Omar | 4 „ | 3 | 0 |
| 28. | Coral Island | 4 „ | 3 | 0 |
| 29. | Wagner | 3 „ | 1 | 12 |
| 30. | Master Timothy's Book Case | 3 „ | 1 | 12 |
| 31. | Parricide | | 1 | 12 |
| 32. | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | | 1 | 0 |

SUPERIOR WATCH CO., P. B. No. 167, MADRAS.